# செம்மணி

நிலம் 01 துகள் 02 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 25 - 31 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-



## மன்னர்களுக்கான ஒழுக்கக் கோவை தயார்

கடந்த வாரத்தில் தெற்கு அரசியலில் பேசப்பட்ட மிகமுக்கிய விடயமாக, இரண்டாம் புவனேகபாகு மன்னனின் கண்டி அரண்மனை இடிக்கப்பட்ட விவகாரம் இருந்தது. கண்டி மாநாகர சபைப் பிரிவுக்குள் வருகின்ற இந்தத் தொல்லியல் மரபுரிமைச் சின்னமானது, வீதி விரிவாக்கத்திற்காக இடிக்கப்பட்டதெனக் கூறப்படுகின்றது.

நாட்டின் அதிபரும், இராணுவமும், பௌத்த அடிப்படைவாதிகளும் சிங்களத் தொல்லியலாக இலங்கையின் மரபுரிமைகளைப் பிரகடனம் செய்து, அதனைக் காப்பாற்றப் புறப்பட்டிருக்கும் தருணத்தில் இந்த

(02ஆம் பக்கம் பார்க்க)


# அதிபர்களைக் குறிவைக்கும் ஹக்கெர்ஸ்

நா.குமரன்

வடமாகாண அதிபர்களின் அலைபேசிச் செயலிகளுக்குள் ஊடுருவித் தகவல்கள் திருடப்பட்டுத் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறது. தமது சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலரின் அலைபேசிகளுக்குள் தந்திரமாக நுழைந்து அவற்றைக் ஹக் செய்து தரவுகளைத் தனி நபரோ ஒரு கூட்டமோ திருடுவதுடன் தமது வைபர், வட்ஸ்அப்போன்ற

(02ஆம் பக்கம் பார்க்க)





## ஓரமாய் போய் விளையாடுங்கப்பா...

வடக்கில், தேர்தல் பரப்புரைகள் சூடு பிடிக்கத் தொடங்கியிருக்கின்றன. பெரும்பாலான அரசியல்வாதிகளின் இலக்காக தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகிய சுமந்திரன் மாறியிருக்கிறார். அனைத்துத் தரப்பினரும் "கிழித்துத் தொங்கப்போடும்" நிலையை சுமந்திரன் அடைந்திருக்கிறார்.

இதனிடையே அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்கள் கலந்துகொள்ளும் விவாதம்

(02ஆம் பக்கம் பார்க்க)

## அதிர்ச்சி செய்தி அறிக்கையாளர்கள் கவனத்திற்கு

கடந்த வாரத்தில் இலங்கையில் கொவிட்- 19 தொடர்பான செய்திகள் சற்றுத் தணிந்திருந்தன. ஆனால் பரபரப்புச் செய்திக்காக இணையங்களில் வெளியான, "யாழ்ப்பாணத்தில் ஒரே நாளில் 14 பேருக்கு கொரோனா தொற்று" என்ற

(02ஆம் பக்கம் பார்க்க)



## பயந்து ஒதுங்கிவிட்டார்களா?

தமிழ்த் தேசிய அரசியல் ஒரு நிதானத்துக்கு வந்துவிட்டதா என்கிற கேள்வியை நடந்து கொண்டிருக்கும் தேர்தல் பரப்புரைக் களம் எழுப்பியிருக்கிறது.

2010, 2013, 2015 தேர்தல்களிலே ராஜபக்சக்கள் தமிழ் இனப் படுகொலையாளிகள் என்பதும் இறுதிப் போரின் கொடூரங்களும்தான் பரப்புரைக் களத்தின் முன்னரங்குகளை நிரப்பி நின்றன. விடுதலைப் போரை அழித்தவர்களை, ஆயிரம் ஆயிரமாய் தமிழர்களைக் கொன்றொழித்தவர்களை எதிர்த்து தமிழர்கள் ஒன்று திரண்டு நிற்க வேண்டும் என்பதுதான் முதன்மையான கருப்பொருளாக இருந்தது.

இந்தமுறை அத்தகைய முழக்கங்கள் எவற்றையும் காணவில்லை. இடையில் விடுபட்டுப்போன புதிய அரசமைப்பு முயற்சியைத்


(02ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரைத் தவிருங்கள்!

நல்லூர் கந்தசாமி கோயில் திருவிழா இன்று தொடங்குகின்றது. கொரோனா பெருந்தொற்று அபாயம் நீங்காத நிலையில் ஆலயத்துக்குப் பெரும் எண்ணிக்கையில் பக்கதர்களை வரவேண்டாம் என்று அன்பான பக்தியான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

இயன்ற வரையில் நல்லூர் ஆலயத்துக்கு வருகை தருவதைத் தவிர்க்குமாறு நல்லூர் ஆலய நிர்வாகம் சார்பில் கடந்த ஓரிரு நாள்களாக சுற்று வட்டாரங்களில் அறிவிக்கப்படுகிறது. கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியில் நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவத்துக்குக் குறைந்த அளவிலான பக்தர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையைக் கருத்தில் கொண்டே ஆலய நிர்வாகம் இந்த அறிவித்தலை விடுக்கிறது.

(02ஆம் பக்கம் பார்க்க)






## "டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழ்"

அரசு அறிமுகப்படுத்தவுள்ள இணையத் தளங்களில் பெறக்கூடிய பிறப்புச் சான்றிதழில் சில விடயங்கள் நீக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திருமண விடயங்கள், மதம், இனம் தொடர்பான விடயங்கள் நீக்கப்பட்டு, "சிறீலங்கன் (SRI LANKAN)" என்பது ஒரே அடையாளமாகச் சேர்க்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டள்ளது.

திருமணம், மதம் உள்ளிட்ட விடயங்களை ஒருவரின் பிறப்பின் அடையாளமாகக் காட்டுவதைத் தவிர்ப்பது நல்ல விடயமாக இருப்பினும், பல்லினங்கள் இணைந்து வாழும் சூழலை உருவாக்க விரும்பாத அரச பொறிமுறையைக் கொண்டுள்ள இலங்கை போன்ற நாட்டில் ஏனைய சிறுபான்மை இனத்தினரது இன அடையாளத்தை நீக்குவதானது பொருத்தமானதல்ல.

(02ஆம் பக்கம் பார்க்க)



கீரிமலையில்...



நாரதர் விளையாட்டு...



கைவிடப்பட்ட இலக்கிய...



இதற்கெல்லாமா சிறை..

# செம்மண்

வாரப் பத்திரிகை

551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com

தொடர்பு எண்: 021 492 7781

உரிமை, வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த், துணை ஆசிரியர்: ந.ஜெயதாஸ்**


ஊடக உலகத்தின் முடிசூடா மன்னன் எனப்படுபவர் ருபேரட் மேர்டோஃக். ஆஸ்திரேலியரான இவர் உலகில் உள்ள முக்கியமான பல ஊடகங்களுக்குச் சொந்தக்காரர். அவர் விருப்பப்படிதான் இந்த உலகின் செல்நெறி தீர்மானிக்கப்படுகிறது என்கிற அளவிற்கு அவர் பெரும் ஊடக ஆளுமை.

அவருக்குச் சொந்தமான மீடியா கொப் நிறுவனத்தால் நடத்தப்படும் 60 பத்திரிகைகள் ஆஸ்திரேலியாவில் தமது அச்சுப் பதிப்பை முற்றிலுமாக நிறுத்திவிட்டன. அவற்றில் சில சமூகப் பத்திரிகைகள் மட்டும் இணையத்தில் தொடர்ந்தும் வெளியாகும். ஏனையவை முழுமையாக மூடப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவில் மட்டுமல்ல அமெரிக்காவிலும் கடந்த சில மாதங்களில் மட்டும் 30 பத்திரிகைகள் தமது வெளியீடுகளை நிறுத்திவிட்டன. மேலும் பல்லாண்டுப் பாரம்பரியம் கொண்ட புகழ்பெற்ற பல பத்திரிகை நிறுவனங்கள் எதிர்கால இருப்புக்காக ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. இந்த நாடுகளில் மட்டுமல்ல உலகின் பெரும்பாலான நாடுகளில் எல்லாம் இதுதான் நிலமை. பத்திரிகையாளர்கள் வேலையற்றிருக்கிறார்கள். ஊடகங்கள் மூடப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இவ்வளவும் உலகப் பெருந் தொற்றான கொரோனாவின் விளைவுகளால் நிகழ்ந்திருக்கிறது. ஊடகங்களை நடத்துவதற்கான வருமானத்திற்கு வழியில்லை. விளம்பரங்கள் கிடைப்பதில்லை. மறுபுறத்தில் உற்பத்திச் செலவுகள் கட்டுகடங்காமல் தொடர்ந்து எகிறிச் செல்கின்றன. வாசகர்கள் புதிய தொழில்நுட்பங்களில் செய்திகளைத் தேடத் தொடங்கிவிட்டார்கள் என்று இதற்குப் பல காரணங்கள்.

ஊடக உலகின் சரிவு குறிப்பாகப் பத்திரிகைகளின் சரிவு இப்போது திடீரென ஏற்பட்டதொன்றல்ல. 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடியுடனேயே தொடங்கிவிட்ட ஒன்று. அப்போதே அமெரிக்காவில் பத்திரிகைகளின் விற்பனை 23 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. உலகம் முழுவதும் அதன் தாக்கம் பரவியது. தெற்காசிய நாடுகளில் பாதிப்பு அதிகம் வெளித் தெரியவில்லை என்றாலும் மெல்ல மெல்ல புற்றுநோய் போல அந்தத் தாக்கத்தின் வீச்சு பத்திரிகைகளை, ஊடகங்களைப் பாதிக்கத் தவறவில்லை.

இப்போது கொரோனா பத்திரிகைகளின் சாவை விரைவுபடுத்தியிருக்கின்றது, அவ்வளவே! இலங்கையிலும் அதுவே நிலமை. பத்திரிகைகளின் விற்பனை மிகக் கணிசமான அளவில் கிட்டத்தட்ட பாதியளவிற்கு வீழ்ச்சி கண்டிருக்கின்றது.

இந்தப் பெருந் தொற்றுக் காலத்தில் மக்களின் செய்திகளுக்கான தேடல் பன்மடங்கு அதிகரித்திருக்கின்றது என்றபோதும் பத்திரிகைகள் சரிவைச் சந்திக்கின்றன என்பது ஒரு முரண்நகை. இந்த நிலமை பரிதாபத்திற்குரியது. முகப் புத்தகமும் கூகுளும் ஒவ்வொருவரினது மடிகளிலும் எந்நேரத்திலும் செய்திகளையும் தரவுகளையும் கொண்டு வந்து குவித்துவரும் நிலையில் வாசகர்களின் கவனம் அதன் மீது குவிவதும், பெருந் தொற்றுக் காலத்தில் பத்திரிகைகளை அச்சடிக்க முடியாமல் போனமையும் கடுமையான பொருளாதார நெருக்கடிகளும் இதற்குக் காரணங்கள்.

இத்தகைய காலத்திற்குள்தான் நாம் செம்மண்ணோடு எழுந்து நிற்க முயற்சிக்கிறோம்.

செம்மண், தமிழ் பேசும் மக்களின் நிலப்பகுதியின் தனித்துவங்களில் ஒன்று. செழிப்பானது வளமானது. அதே நேரத்தில் தமிழ் பேசும் மக்களின் நிலம் செங்குருதியால் சிவந்து போய்விட்ட நிலையையும் குறியீட்டு மொழியாகச் சொல்லி நிற்கின்றது. சிவப்பு நிறம் எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சியின் அடையாளமாகவும் கொள்ளப்படுகின்றது. இவை எல்லாவற்றையும் உள்வாங்கி, கட்சி அரசியலுக்குள் மூழ்கிப்போய்விட்ட ஊடகங்களின் மத்தியில் மக்களுக்கான ஊடகத்தைக் கண்டடையும் முயற்சியாகவே செம்மண்ணை நாம் வெளியிடத் துணிந்தோம்.

உண்மைக்கான தேடலே பத்திரிகையியல் என்று செம்மண் ஆணித்தரமாக நம்புகின்றது. அதையே அது தனது தாரக மந்திரமாகவும் வரிந்துள்ளது. மக்களோடு நின்று மக்களுக்கான உண்மைத் தேடலில் தன்னை அர்ப்பணிப்பதே செம்மண்ணின் தலையாய கடமை. அதனை ஆதரித்து அரவணைத்துக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன்தான், மீண்டெழும் இந்தப் பயணத்தைத் தொடங்கியிருக்கிறது செம்மண்.



## டிஜிற்றல்...

"தனிச் சிங்கள வாக்குகளால் வென்றேன்" என மார்தட்டிக்கொள்ளும் ஆட்சியாளர்களைக் கொண்ட நாட்டில் "நாங்கள் இலங்கையர்கள் - WE ARE SRI LANKAN" என ஏனைய சிறுபான்மையினத்தவர் எந்த நம்பிக்கையின் அடிப்படையில் இன ஒற்றுமை கீதம் இசைக்க முடியும்?

நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளினது தொடக்க இடமும் சிறுபான்மையினர் மீதான ஒடுக்குமுறையை மையமாகக் கொண்டிருக்கும் போது, இந்த டிஜிட்டல் பிறப்புச் சான்றிதழில் பொறிக்கப்படும் பெயர் மாற்றத்தினால் என்ன நடந்துவிடப்போகிறது? எனவே மாற்றம் டிஜிட்டலில் ஏற்பட முன்னர் பெரும்பான்மையின அரசியல்வாதிகள் மனதில் ஏற்படவேண்டும். அனைத்து இன மக்களும் "நாம் இலங்கையர்கள்" எனச் சொல்லும் மனநிலை உருவாக்கப்பட்ட பின்னர் "சிறீலங்கன் - SRI LANKAN" எனத் தேசிய அடையாளத்தை அனைத்து இனமக்களுக்குமாகப் பிரகடனம் செய்தலே பொருத்தமானதாக அமையும்.

இதில் விசித்திரம் என்னவென்றால் இந்த அறிவிப்புக்கு எதிராகக் கொந்தளித்து எழுந்திருக்க வேண்டிய சிறுபான்மையினங்கள் முகப் புத்தகத்தில் முனங்கிக் கொண்டிருந்தபோது, துள்ளியெழுந்தவர்கள் பெரும்பான்மைத் தீவிரவாத அரசியல்வாதிகளான விமல் வீரவன்ஸ போன்றவர்கள்தான். அவர்களது எதிர்ப்பின் காரணமாக இப்போது பிறப்புச் சான்றிதழில் தாய் தந்தையரின் இனம் குறிக்கப்படும் என்று தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## மன்னர்களுக்கான....

மண்டபம் இடிக்கப்பட்டமையானது பல்வேறு தரப்பிலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதைவிடப் பேரதிர்ச்சியை நாட்டின் தலைமை அமைச்சர் தெரிவித்திருந்த கருத்து ஏற்படுத்தியிருந்தது. "இது புவனேகபாகு மன்னனுடையது என்கிறார்கள். அவர் பல திருமணங்களைச் செய்தவர், இறுதியாக முஸ்லிம் பெண் ஒருவரைத் திருமணம் செய்திருந்தார். ஆனாலும் குழுவொன்றை நியமித்து விசாரணைகளை முன்னெடுப்போம்"என்கிறார் நாட்டின் பிரதமரான மஹிந்த ராஜபக்ச.

இதில் பொதிந்திருக்கும் செய்தி என்னவெனில், இலங்கையில் சுத்தமான சிங்கள மன்னர்களின் அரண்மனைகள், நினைவிடங்கள் மட்டுமே மரபுரிமைச் சின்னங்களாகப் பாதுகாக்கப்படவேண்டும். தொல்லியல் சின்னங்களாகப் அறிவிக்கப்படவேண்டும் என்பதே ஆகும். இந்தப் பின்னணியிலேயே கிழக்கில் தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதற்கான தனிச் சிங்களவர்களைக் கொண்ட குழுவின் பணிகளை கூர்ந்து பார்க்க வேண்டும்.

புவனேகபாகு மண்டபம் குறித்த மகிந்தவின் கருத்து, சிங்கள மன்னர்களாக வரலாற்றில் நிலைத்து நிற்போருக்குத் தனியான ஒழுக்கக் கோவை ஒன்றின் அவசியத்தை விரைவில் ஆட்சியாளர்கள் அறிவிக்கும் காலம் வரும் என்பதை உணர்த்துகின்றது.

## பயந்து....

தொடர எத்தணிக்கப்போகும் தமது முயற்சிக்காகவும் ஏற்கனவே செய்த அபிவிருத்திக்காகவும் தமக்கு வாக்களிக்கும்படி கூட்டமைப்பும், இது காலம் வரையில் கூட்டமைப்பு நாடாளுமன்றத்துக்குப் போய் தமிழர்களுக்கு எதுவும் செய்யவில்லை என்பதால் மாற்றாகத் தமக்கொரு சந்தர்ப்பம் வழங்கும்படி முன்னணியும் தேசியத்தைக் காக்க வேண்டுமானால் தனக்கு வாக்களிக்கும்படி விக்னேஸ்வரனும் எதிர்கால அபிவிருத்திக்காக தனக்கு வாக்கிடும்படி அங்கஜனும் எதைச் செய்யவதானாலும் அதைத் தன்னாலேயே செய்ய முடியும் என்பதால் தனக்கே வாக்களிக்கும்படி டக்ளசும் கேட்கிறார்கள்.

யாரும் இறுதிப் போர்க் குற்றங்கள் பற்றியோ காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றியோ இனப்படுகொலை பற்றியோ மறந்தும் வாய் திறக்கவில்லை. மறந்துவிட்டார்களா அல்லது ராஜபக்சக்கள்தான் எப்படியும் அடுத்த ஆட்சியைப் பிடிக்கப்போகிறார்கள் என்பதால் எதற்கு வம்பு என்று ஒதுங்கிக் கொண்டுவிட்டார்களா?

## நல்லூர்....

திருவிழாக் காலத்தையொட்டி ஆலயச் சூழலில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கிகள் பதிவு செய்யப்பட்ட ஒலிப் பேழைகளாகத் திரும்பத் திரும்ப இந்த அறிவித்தலை விடுக்கின்றன. காவடிகள், தூக்குக் காவடிகள் எடுத்தல், பிரதிஷ்டை செய்தல், நேர்த்திக் கடன் கழித்தல் போன்றவற்றுக்குத் தடை அறிவிக்கப்பட்டுப்பட்டுள்ளது.

பக்தர்கள் இம்முறை வீட்டிலிருந்தபடியே தொலைக் காட்சிகளிலும், யுடியூப் போன்ற ஊடகங்களிலும் ஒளி பரப்பாகும் திருவிழா நேரடி ஒளிபரப்புக்களைப் பார்த்து எம்பெருமானைத் தரிசியுங்கள் என்று ஆலய நிர்வா கம் எல்லோரிடமும் வேண்டி நிற்கின்றது.

## அதிபர்களைக்...

செயலிகள் தவறாகவும் பயன்படுத்தப்படுகின்றன என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

வடமாகாண அதிபர் சங்கத்தினை சேர்ந்த முக்கியஸ்தர்களின் தொலைபேசிகளுக்குள் ஊடுருவி அவர்களது தரவுகள் மற்றும் இலக்கங்கள் களவாடப்பட்டு அவற்றின் மூலம் கல்விசெயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பதுடன் தவறானமுறையில் தமது இலக்கங்களை பயன்படுத்துவதாகவும் வடக்கு மாகாண அதிபர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

"கொரோனாவால் கற்றல் கற்பித்தல் பாதிக்கப்பட்டிருந்தது. இதனை நிவர்த்தி செய்ய வைபர், வட்ஸ்அப் மற்றும் சூம் போன்ற இணையச் செயலிகள் ஊடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். இந்த நிலையில் அதிபர்கள் பலரது வைபர், வட்சப் குழுக்களில் இருந்த தொடர்பு இலக்கங்களுக்கு குறித்த ஒரு நபர் அழைப்பெடுத்து, அந்த இலக்கத்திலிருந்து தனக்கு அடிக்கடி அழைப்பு வருவதாகவும் அதனை நிறுத்துவதற்குத் தான் ஒரு செயலியை அனுப்பி வைப்பார் என்றும் தெரிவிக்கிறார். பின்னர் அந்தச் செயலியையும் அனுப்பி வைக்கிறார்.

இதை நம்பி அந்தச் செயலியை திறந்தவர்களின் அலைபேசிகள் ஹக் செய்யப்பட்டுள்ளன. அவர்களின் அலைபேசி இப்போது குறித்த நபரது கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்படுகின்றது. அவ்வாறு கொண்டுவரப்பட்ட பின்னர் அவர் அந்த ஆசிரியர்கள் கதைப்பது போன்றும் செய்திகளை பரிமாறுவது போன்றும் தவறான முறையில் ஏனையவர்களுக்குத் தகவல்களை அனுப்பியுள்ளனர்.

இதுபற்றி சிலர் எமக்கு அறிவித்தனர். நாம் விசாரித்ததில் அவர்களது அலைபேசிகள் ஹக் செய்யப்பட்டி ருப்பது தெரியவந்தது" என்று செம்மண் பத்திரிகையிடம் தெரிவித்தார் அதிபர்கள் சங்கத் தலைவர் வை.த.ஜயந்தன். 11 அதிபர்கள் மற்றும் சில அரச பணியாளர்கள் இத்தகைய தகவல் திருடர்களால் பாதிக்கப்பட் டுள்ளனர்.

"பாதிக்கப்பட்டவர்கள் மன உழைச்சலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். கற்பித்தலுக்காகத் தொடங்கப்பட்ட குழுக்கள் மூலம் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது இணையவழி கற்பித்தல் நடவடிக்கைகளைப் பெரிதும் பாதித்துள்ளது" என்கிறார் ஜயந்தன்.

## ஓரமாய்...

நடக்கப்போவதாக ஒரு அறிவிப்பு வந்தது. மேலை நாடுகளில் எல்லாம் இது போன்ற விவாதங்கள்தான் வேட்பாளர்களை அடையாளம் காட்டுகின்றன. திடீரென அந்த விவாதம் நிறுத்தப்பட்டது என்று அறிவிக்கிறார்கள்.

கடைசியில் பார்த்தால் எந்தக் கட்சியின் தலைவரும் அந்த நேரடி விவாதத்திற்கு வரவில்லை. அவர்கள் எல்லோருமே முதலில் விவாதத்திற்கு வருவதாகத்தான் இணங்கியிருந்தார்கள் என்கிறார் அதன் ஒருங்கிணைப்பாளரான தொலைக்காட்சித் தொகுப்பாளர் தனராஜ்.

ஆனால், விக்னேஸ்வரன் விவாதத்திற்கு சுரேஸை போகச் சொன்னார் அவர் வரவில்லை, கஜேந்திரகுமார் சுகாசையும் காண்டீபனையும் அனுப்பினார், இதைக் கேள்விப்பட்ட சுமந்திரன் பிரதேச சபை உறுப்பினர்கள் இருவரை விவாதத்திற்கு நியமித்தார் என்றெல்லொம் தகவல்கள் வேகமாகப் பரவின.

உடனே பொதுவெளியில் பேசுவதற்கு சுமந்திரன் பயந்துவிட்டார் முன்னணி உறுப்பினர்களை எதிர்கொள்ள சுமந்திரனுக்குத் திராணி இல்லை என மக்கள் முன்னணியினரும், கஜேந்திரகுமார் வந்தால்தான் வருவேன், அல்லது கட்சியிலிருந்து யாரையாவது பிடித்து அனுப்புகிறோம் என சுமந்திரன் தரப்பும் மல்லுக்கட்டிக்கொண்டிருந்தார்கள்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த வாக்காளர்களுக்கோ, "ஓரமாய் போய் விளையாடுங்கப்பா" சிவகார்த்திகேயன்-பரோட்டா சூரி காட்சிதான் நினைவுக்கு வந்தது.

## அதிர்ச்சி...

செய்தி திடீர் பயப்பீதியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. செய்தியின் உள்ளே சென்று பார்த்தால், விடத்தல்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்போரில் 14 பேருக்கே தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது என்றிருந்தது.

இணையங்கள் தம் பார்வையாளர்களை அதிகரிக்க இதுமாதிரியான பரபரப்புச் செய்திகளை உருவாக்கும் நோக்குடன் தலைப்பிடுவது மக்களை பீதிக்குள்ளாக்கும் என ஒருபோதும் சிந்திப்பதில்லை. தலையங்கத்தை மட்டும் வாசிக்கும் பழக்கமுள்ள வாசகர்களின் எண்ணிக்கை தமிழ் பரப்பில் அதிகரித்து வருவதனால், தலைப்பிடல்களில் பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டியது செய்தியாளர்களுக்கு இருக்க வேண்டிய நற்பண்பாகும்.

இப்படியான செய்திகளைப் படித்துவிட்டு மக்கள் பெற்றோல் "செற்'களில் நிரம்பிவிட்டால் சமாளிப்பது எப்படி?

# கறுப்பு யூலையின் வெளிச்சம்!

ஜெரா

இலங்கையின் இனப்பிரச்சினையினது திசையையே மாற்றிய பெரும் வன்முறைகளை ஆடிக் கலவரம், கறுப்பு யூலை, இனவன்முறை, இனப்படுகொலை, இனச் சுத்திகரிப்பு எனப் பல்வேறு பெயர்கொண்டு அடையாளப்படுத்துகின்றனர்.

யாழ்ப்பாணம், தபால் பெட்டி சந்தியடியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தைக் கார ணம் காட்டி கொழும்பிலிருந்து நாடு முழுவதும் பரவிய வன்முறைகள் தமிழர்களைக் கொல்வது, அவர்தம் சொத்துக்களை அழிப்பது, கொழும்பு உள்ளிட்ட தென்பகுதிகளிலிருந்து மொத்தமாகக் கப்பலேற்றி வடக்கே அனுப்பி விடுவது போன்ற நோக்கங்களைக் கொண்டிருந்தன. இவ்வாறு கப்பலேறாது கால் நடையாக வடக்கு, கிழக்கு பகுதி களுக்கு வந்தவர்களில் ஒரு தொகுதியினர் மலையகத் தமிழர்களாகவும் இருந்தனர்.

இந்தியாவில் இருந்து வந்த பின்னர் அவர்களுக்குத் தெரிந்திருந்ததெல்லாம் மலைகளும் தேயிலைத் தோட்டளும் தோட்ட முதலாளிகளும்தான். ஆனால், தமிழர்கள் என்கிற ஒரே காரணத்திற்காக அவர்களும் பாடுகளைச் சுமந்தார்கள்.

இவ்வாறு அகதிகளாய் வந்த மலையகத் தமிழர்களை கொக்கிளாய் தொடக்கம் மன்னார் வரைக்குமான தமிழர் தாயகத்தின் எல்லைக் கிராமங்களில் குடியேற்றி, தெற்கிலிருந்து பரவிவந்த சிங்களமய மாக்கத்தைத் தடுக்கும் வேலைத் திட்டங்களை அப்போ திருந்த அரசியல் கட்சிகளும், மாற்று விடுலை இயக்கங்களும் மேற்கொண்டிருந்தமை வரலாற்றில் பதிவாகியிருக்கின்றது.



வடக்கு, கிழக்கு பகுதிகளின் எல்லைக் காவலாளிகளாகக் குடியேற்றப்பட்டார்கள் இந்த மக்கள், குடியேறிய நாள்தொட்டு பல்வேறு படுகொலைகளை, கழுத்தறுப்புக் களை, கொலைகளைச் சந்தித்திருக்கின்றனர்.

போருக்குத் தம் பிள்ளைகளை ஈந்திருக்கின்றனர். ஆயுதப் போராட்டத்தோடு போராளிகளாக, எல்லைப்படை வீரர்களாக, கள உதவியாளர்களாகத் தம்மை இணைத்து உறுதுணைப் புரிந்திருக்கின்றனர். கன திமிகு போராட்டத்தின் வழியே வளர்ந்த சுதேசிய - மலையக மக்களுக்கு மிடையிலான உறவு, அனைவரையும் இன வுணர்வால் தமிழர்களாக மாற்றியிருக்கிறது.

அவ்வாறு குடியேறி இன்றும் எல்லைக் கிரா மங்களில் வசிக்கும் மக்கள் இனப்படுகொலை நினைவுகளையும் அதன் பின்னரான வாழக்கையின் நினைவுகளையும் ஒரு சேரப் பெற்றிருக்கிறார்கள்.

க.பெருமாள், வயது 67. மலையகத்தில் காவலாளி, கொழும்பில் சுத்திகரிப்பாளர் என உழைப்பை இவர் தொடங்கும்போது வயது பதின்மங்களைத் தாண்டியிருக்கவில்லை. 20 வயதில் வெங்கம்மாவைத் திருமணம் முடித்துக்கொண்டு கொழும்பில் வசிக்கையில்தான் 1983 வந்தது.

வாழ்வின் கோல மாற்றங்களால் பெருமாள் - வெங்கம்மா திருமணத்திற்கு முன்னரே சண்முகவடிவேல் ஒரு வயது நிரம்பிய குழந்தையாய் இருந்தான். இனவன்முறைகள் தீக்காடாய் பரவ, குடும்பமாக வவுனியா வந்த லொறியொன்றில் தொற்றிக்கொண்டனர். அந்த லொறி, இன்னும் பலரையும் ஏற்றி வந்தது. அவர்கள் அனைவரையும் ஹென்ற் பாமில் இறக்கியும்விட்டது.

"அந்தக் காலத்தில எந்த வசதியும் இந்தப் பக்கத்துல இருக்கல. காட வெட்டி, வேலை செய்வோம். முதலாளி மாருங்க குடுக்கிற காசில, அரிசி, சாமான்கள வாங்கி புள்ளக் குட்டிகளோட நாங்க கொஞ்ச குடும்பங்க பொழைச்சோம்.

நாங்க வந்த காலத்திலயே சிங்களவிங்க பிரச்சினை இருந்திச்சி. சாமாளிச்சிக் கிட்டுத்தான் வாழ்ந்தோம். எம்பத்தி நாலு ஒதியமலை பிரச்சினையோடத்தான் இங்கயிருந்து அகதியா போனாம் திருப்பி.

அதுக்கப்புறம் மூனு பிள்ளைகள் எனக்கு. இந்த ஊர்ல 1997 வரைக்கும் இருந்து, நாங்க காடு வெட்டி, காணியும் எடுத்திட்டோம். என்னோட ரெண்டு புள்ளைகள் இயக்கத்துக்குப் போயிடுச்சி. 2009 சண்டை முடிஞ்சதோட புள்ளைகளையும் பறிகுடுத்திட்டேன்.

இப்ப ரெண்டு புள்ளைக கலியாணம் கட்டி இருக்காங்க. நானும் மனுசியும் சின்னத் தோட்டமொண்ணு வச்சிக்கிட்டு இருக்கோம். கத்தரிக்காய் புடுங்கி வைக்கச்சொல்லி யாவாரிக சொன்னாங்க. அது தான் புடுங்கி வச்சிற்று பாத்துக்கிட்டி ருக்கோம்.."எனச் சுருக்க மாகத் தன் கதையைச் சொன்ன பெரு மாளிடம் கேட்க பல கேள்வி களும், அவரிடம் சொல்ல பல கதைகளும் உண்டு.

"ஒருவேளை இந்த ஆடிக் கலவரம் வராட்டி உங்கட வாழ்க்கை எப்பிடி இருந்திருக்கும் என்று நினைச்சிப் பார்ப்பிங்களா?" எனக் கேட்டேன்.

"ஏன் நினைக்கல. நினைச்சிப் பார்ப்பேன். என்னோட நாலு புள்ளைகளும் கலியாணம் கட்டி இருந்திருப்பாங்க. எனக்கும், மனுசிக்கும் ஒரு புள்ளையாவது கஞ்சி ஊத்தியிருப்பாய்ங்க. ஆனா இப்ப எனக்கு, ரெண்டு புள்ளைகளுக்கு காணி இருக்கு. நிமிந்து படுக்க வீடு இருக்கு. இப்ப நான் கொழும்பு லயோ, ஹற்றன்லயோ இருந்திருந்தா லயன்ல இருந்திருப்பேன். 1000 ரூபாய் சம்பளத்த கேட்டுப் போராடிக்கிட்டி ருந்திருப்பேன்.

இங்க வந்ததால தான், என்னோட ரெண்டு புள்ளைகளாவது நிம்மதியா, சொந்த நிலத்தில இருக்கு. இனி அதுகளோட வாழ்க்க நல்லா இருக்கும்னு நெனைக்கிறேன்."

இந்தப் பெருமாளின் வாழ்க்கைக் கதை மிக நீளமானதெனினும், அகதியாக அலை வதிலும் சொந்தமாக ஒரு துண்டு நிலத்தில் வாழ்வது எவ்வளவு பெரிதானது என்பதைச் சொல்லிப்போகிறார்.

## எனக்கு அழுது பழக்கமில்லை

*1983ஆம் தமிழர் படுகொலையின் போது சிங்களவர் பசில் பெர்னாண்டோ என்பவர் எழுதிய கவிதை..*

அந்த ஒரு கார் மட்டும்....

எனக்கு அழுது பழக்கமில்லை..
அந்தளவு எனக்கு உணர்ச்சிகள் இல்லை.

அதெல்லாம் மறந்துவிடு
என்றது என் அரசாங்கம்..

ஆனால் என் வீட்டில் இருந்து பார்த்த
அந்தக் காரை மட்டும் மறக்க முடியவில்லை.

அந்தக் காரில் நான்கு பேர் இருந்தார்கள்.
அம்ம, அப்பா, மகன், மகளாக இருக்கலாம்..

அந்த காரை ஏனைய கார்களை
போலத்தான் நிறுத்தினார்கள்.

ஏனைய கார்களைப் போல
அந்த காரின் மேலும் உள்ளே
அவர்களைப் பூட்டி
பெட்ரோல் ஊத்தினார்கள்

ஏனைய கார்களைப் போலவே
அதனையும் கொளுத்த போனார்கள்.

திடீரென அந்தக் கூட்டத்தில்
ஒருவன் காரை திறந்து
அந்தச் சின்ன பிள்ளைகளை
மட்டும் வெளியே எடுத்து விட்டான்..

பின்னர் கொளுத்தினார்கள்..

எரிந்தது..

பிள்ளைகள் அழுதுகொண்டு
வெளியே நின்றார்கள்..

திடீரெனக் கார்க் கதவு திறந்தது..

அப்பா வெளியே
எரிந்துகொண்டு வந்தார்..
தலை பின்புறம்
எரிந்து கொண்டு இருந்தது..


மகனையும் மகளையும் தூக்கினார்..

காரின் உள்ளே சென்று கதவை
பூட்டிக்கொண்டார்..

முற்றாக எரிந்த
அந்தக் காரை அடுத்த நாள்
கார்பொரேஷன் வண்டி வந்து
அள்ளிக்கொண்டு போனது..

அரசாங்கத்துக்கு நகரைச் சுத்தமாக
வைத்து இருப்பது கடமை அல்லவா?

எனக்கு அழுது பழக்கமில்லை...



# சிறு துரும்பையும் கயிறாகத் திரிக்கும் மகிந்த தரப்பு

ராஜ்குமார்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல்கால அறிக்கை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் ஏனைய தமிழ்க் கட்சிகளிடம் உள்ளன. 2015ஆம் ஆண்டில் வெளியிட்ட தேர்தல்கால அறிக்கையையே மீண்டும் வெளியிட்டுள்ளார்கள் என்றும் புதிதாகக் கூறுவதற்கோ, செயற்படுத்துவதற்கோ அவர்களிடம் எதுவும் இல்லை என்றும் பலரும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். தமிழ்த் தரப்புகள் இவ்வாறு கூற, கூட்டமைப்பின் குறித்த விஞ்ஞாபனத்தை குற்ற ஒப்புதல் வாக்குமூலத் தரத்துக்கு உயர்த்தியிருக்கிறார் பிரதமர் மகிந்த ராஜபக்ச.

"பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்பியதையே கூட்டமைப்பும் கேட்கிறது" என்ற செய்தியைச் சிங்கள மக்கள் மத்தியில் பரவ விட்டிருக்கிறார் அவர். அதேவேளை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் "அதிகாரத்துக்கு வருவோரிடம் அரசியல் தீர்வைப் பேசுவோம்" என்று மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான கருத்தை முன்வைத்திருக்கிறார். இது ஒரு முரண் நகை.

## தமிழீழம் எனும் அரசியல் நாடகம்

1970ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் ஜெ.ஆர்.ஜெயவர்த்தனவும், அமிர்தலிங்கமும் தோல்வி அடைந்திருந்த நிலையில் இருவரும் அடுத்த தேர்தலில் வெல்வதற்காகப் போடப்பட்ட ஓர் அரசியல் நாடகமே 1976 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்கிற தமிழீழத் தீர்மானம். இந்தத் தீர்மானத்தின் மூலம் தமிழருக்கான ஒரே தீர்வு 'தமிழீழம்' என்பதை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வெளியிட்டுத் தமிழரின் அரசியல் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளியிட்டது.

தமிழர்கள் நாட்டை இரண்டாகப் பிரித்துத் தனிநாட்டை அமைக்கப் போகிறார்கள், சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மூடிய பொருளாதாரக் கொள்கையால் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் பொருளாதாரத்தில் உச்ச நிலை அடைந்து விட்டனர், மீண்டும் ஒரு தடவை சிறிமாவோ ஆட்சிக்கு வந்தால் தமிழர்கள் மிக உன்னதமான பொருளாதார பலத்தையும் தமக்கென்று ஒரு நாட்டையும் உருவாக்கிக் கொள்வார்கள் எனச் சிங்கள மக்கள் மத்தியில் 'பொக்கெற் மீற்றிங்'குகளை நடத்தித் தெளிவுபடுத்தினார் ஜெ.ஆர். வட்டுக்கோட்டைத் தீர்மானம் அதற்கான முதலீடாக அவருக்குப் பயன்பட்டது.

தமிழர்களுக்குத் தமிழீழத்தைக் கொடுக்கக் கூடாது என்பதை வைத்தே 1977ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் அமோக வெற்றி மீட்டியது ஐக்கிய தேசியக் கட்சி. அதேவேளை தமிழீழத்தைப் பெற்றுத் தருவேன் என்று கூறி அமிர்தலிங்கமும் தேர்தலில் வென்றார். தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்குக் கிழக்கில் அமோக வெற்றியைத் அடைந்தது. தமிழீழம் என்ற கொள்ளைப் பிரகடனம் அமிர்தலிங்கம், ஜெ.ஆர்.ஜெயவர்த்தன ஆகிய இருசாரரையும் அரசியலில் பலப்படுத்தியது. அப்போது தமிழரின் பொருளாதாரப் பலத்தை மேம்படுத்த துணையாக இருந்தவரான சிறிமாவோ பண்டாரநாயக்கா தூக்கி வீசப்பட்டார்.

## மகிந்த - சம்பந்தர் விடயம்

ஜெ.ஆர்.ஜெயவர்த்தன - அமிர்தலிங்கம் ஆகிய இருவருக்கு இடையிலும் அன்று நடந்தவையே மகிந்த - சம்பந்தர் இடையில் இன்று நடக்கின்றது. அவர்கள் விடக்கும் தேர்தல்கால அறிக்கைகளில் அதனை உணர முடிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் தீர்வு தமிழீழம்தான் என்று தெரிவித்துத் தமிழருக்கு எதிரான வெறுப்புணர்வரை வாக்குகளாக வாரிச் சுருட்டிக்கொள்ளப் பார்க்கிறார் மகிந்த. அவரது இந்த முயற்சி மிக இலகுவாகச் சிங்கள மக்கள் மத்தியில் வெற்றிபெறும்.

ரணில் விக்கிரமசிங்க 2015ஆம் ஆண்டில் இத்தகைய ஒரு மோசமான தீர்வைத்தான் தமிழருக்குக் கொடுக்க முற்பட்டார் என்று ஐ.தே.கவையும் பலவீனப்படுத்துகிறார் மகிந்த. தான் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெற்றுவிட புலிப் பூச்சாண்டியைப் போலவே இப்போது தமிழர்கள் இன்னும் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடவில்லை என்கிற பூச்சாண்டி அவருக்குத் தேவையாக இருக்கின்றது.

அதேநேரம் வடக்கு கிழக்கில் கூட்டமைப்பு வெற்றி பெறுவதைத்தான் மகிந்த விரும்புகிறார். தமிழ்த் தலைமையாகச் சம்பந்தர் அணி தொடர்ந்து இருப்பதே மகிந்த தரப்பின் விருப்பம். அவர்களை எப்படிக் கையாண்டு காலத்தை இழுத்தடிக்க முடியும் என்கிற தந்திரம் மகிந்தவுக்குக் கை வந்த கலை என்பதால் மகிந்த கூட்டமைப்பைத் தமிழர் தரப்பில் தொடர்ந்து நிலை நிறுத்தவும் பாடுபடுகிறார்.

## கூட்டமைப்பு வென்றால் சாதகம்

தேர்தல் காலத்தில் புலிக்கோசத்துடன் மக்கள் முன் தோன்றினாலும் உண்மையில் புலி நீக்கம் செய்யப்பட்ட கூட்மைப்பை வடக்குக் கிழக்கில் வெல்ல வைப்பதன் மூலம் இனி வரும் 5 ஆண்டுகளில் திட்டமிடப்பட்டுள்ள கிழக்கு மாகாணத் தொல்லியல் நடவடிக்கைகள், வெலி ஓயாவின் விரிவாக்கம், குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விவரங்களை மாற்றுவது, எல்லை நிர்ணயம், ஒரே இலங்கையர்கள் திட்டம் போன்ற பல விடயங்களைச் சுமூகமாகத் தங்களால் கையாள முடியும் என்று மகிந்த கருதுகின்றார்.

இந்த நோக்கத்துக்கு சுமந்திரனும், சம்பந்தரும் மகிந்த அரசுக்கு அதிகம் வேண்டப்படுபவர்களாக உள்ளனர். 5 வயது தொடக்கம் சிங்கள மக்களுடன் வாழ்தார் எனக் கூறும் சுமந்திரனும் திருகோணமலையில் பிறந்து அனைத்து இன மக்களுடன் வாழ்ந்து தனக்குப் பிடித்த கொடி சிங்கக் கொடியே என்று கூறும் சம்பந்தரும் அவர்களின் தேவைக்கு மிகவும் பொருத்தமானவர்களே.

## தேர்தல் பரப்புரையில் எதைச் சொல்வது?

தீர்வுத் திட்டம் என்ற ஒன்றைப் பற்றிப் பேசியே இதுவரை காலமும் அரசியலை நடத்தி வந்த சம்பந்தர் அணி, இந்த முறை தேர்தல் பரப்புரையில் சொல்வதற்குக் காத்திரமாக எதுவும் இல்லாத நிலையில் எப்படியாவது அரசியல் தீர்வைப் பெறுவோம் என்று மாய வித்தை காட்டப் பார்க்கின்றனர். ஒரு மாத காலத்துக்கு முன்னர் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன், மகிந்த தரப்பு தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதில் அதிக ஈடுபாட்டுடன் இருக்கிறது, கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்றால் மட்டுமே அதைப் பெற முடியும், நாங்களே தீர்வுத் திட்டத்துக்காக அதிகம் உழைத்தவர்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

தமிழருக்காக ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க அரசு தயாராக இருக்கிறது என்றால் அதைப் பெறுவதற்குக் கூட்டமைப்புத்தான் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்றில்லை. புதிதாக வரையப்படுகின்ற தீர்வுத் திட்டத்தில் கூட்டமைப்பின் ஆலோசனைகள் நாடாளுமன்றத்துக்கு வெளியிலிருந்து பெறப்பட்டு வரையப்படவும் வாய்ப்பில்லை. எனவே கூட்டமைப்புச் சொல்வதைப் போல் அதற்கு அதிக ஆசனங்கள் கிடைப்பது மற்றொரு தடவை பலருக்கும் புதிதாக ஒரு சிலருக்கும் வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரம் கிடைப்பதற்கும் பல லட்சங்களில் வருமானம் ஈட்டுவதற்குமான ஒரே வழி.

## சிங்கள மக்களை மகிழ்விக்கும் கருத்து

பிரபாகரன் விரும்பியதையே கூட்டமைப்பும் கேட்கிறது எனவே அதனை அடக்க தெற்கில் பலமுள்ள ஆட்சி ஒன்று அவசியம் என்ற மகிந்தவின் கருத்து சிங்கள மக்களை நிச்சயம் மகிழ்விக்கவே செய்யும். அதன் மூலம் மகிந்தவின் பெரு வெற்றி சாத்தியமாகலாம். ஆனால் கூட்டமைப்பின் வெற்றி 1977இல் கிடைத்ததுபோல இலகுவானதாக இருக்கப்போவதில்லை. 70 வருட அரசியலில் தமிழ் மேட்டுக்குடி அரசியல்வாதிகளும், மத்திய உயர் வர்க்கமும் தமக்குள் முரண்பட்டு நான்கு கூறுகளாக நான்கு திசைகளில் பயணிப்பதும், தேர்தலில் வெல்வதற்காக எப்படியெல்லாம் பொய் கூறினார்கள் என்பதை ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்கள் பரப்பி வருவதும் கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்பைக் கடுமையாகப் பாதிக்கும்.

இத்தகையதொரு நிலை தமிழர் அரசியலை மேலும் பலவீனப்படுகிறது. மறு பக்கம் மகிந்த தரப்பு, தேர்தல் பரப்புரைகளை வினைத்திறனுடன் மேற்கொள்கிறது. வழமையான தேர்தல் பிரச்சாரத்தை விட 1970-77 காலப்பகுதியில் மக்கள் மத்தியில் இறங்கி ஜெ.ஆர். ஜெயவர்த்தன மேற்கொண்ட 'பொக்கெற் மீற்றிங்'குகளை ஒத்த வகையில் உள்ளது. வடக்குக் கிழக்குத் தமிழ் - முஸ்லிம்களின் வாக்குகளைத் தவிர்த்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எவ்வாறு பெறுலாம் என்று சிந்தித்து வினைத்திறனுடன் செயற்பட்டு வருகின்றனர். கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கிடைத்த சிறு துரும்பைத் தேரிழுக்கக்கூடிய கயிறாகப் திரிக்கிறது மகிந்த தரப்பு.

## ஒரு கேள்வி ஒரேயொரு கேள்வி!

**கேள்வி:** கொரோனா வைரஸ் காற்றில் பரவக் கூடியது என்று சில நாள்களாக ஒரு செய்தி காற்றில் பரவிக் கொண்டிருக்கிறது. எங்கிருந்தோ காற்றில் கலந்து வருகிற கிருமி நம்மைத் தொற்றிக் கொள்ளுமா?

**பதில்:** காற்று வாங்கப் போய்க் கொரோனா வாங்கி வர யாரும் விரும்ப மாட்டார்கள். வைரஸ் ஏற்கனவே தொற்றிய ஒருவரிடமிருந்து அவர் தும்முகிறபோது, இருமுகிறபோது, பேசுகிறபோதுகூட தெறிக்கிற எச்சில் துளிகளில் கலந்து அது வெளியேறுகிறது. அந்தத் துளிகள் பெரிய, சிறிய, நுண்ணிய அளவுகளில் வெளியேறுகின்றன.

பெரிய துளிகள் பாயக்கூடிய தொலைவை மதிப்பிட்டு ஒருவருக்கொருவர் ஒன்றரை மீற்றர் முதல் இரண்டு மீற்றர் (மூன்று அடிகள்) வரையில் இடைவெளி அறிவுறுத்தப்படுகிறது. நுண் துளிகள் காற்றில் மிதக்கக் கூடியவை என்பதால் இப்போது அதில் கவனம் செலுத்தப்படுகிறது.

நெல் புடைக்கிறபோது கனமான நெல் அங்கேயே கீழே விழுந்து குவிந்துவிடும், உமி சற்று அதிகத் தொலைவில் போய் விழும், தூசு மேலும் அதிகத் தொலைவுக்குச் செல்லும். அது போன்றதுதான் இதுவும். உறுதிப்படுத்தப்படாவிட்டாலும், பாதுகாப்புக் கருதி, 200 அறிவியலாளர்கள் எழுதிய கடிதங்களின் அடிப்படையில், உலக சுகாதார மையம் இதற்கான ஆராய்ச்சிகளிலும் கூடுதல் முனைப்புக் காட்டத் தொடங்கியிருக்கிறது.

காற்றில் பரவுவது என்றால் ஏதோ காற்றுவெளியில் எங்கும் பரவி மிதந்து கொண்டிருக்கும் என்று புரிந்து கொள்ளக்கூடாது. வெளியே போனால், வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்தால் காற்றில் கலந்து வருகிற கிருமி நம் மீது விழுந்து தொற்றிக் கொள்ளுமோ என்றும் நினைக்க வேண்டியதில்லை. தெருவில் ஒரு வீட்டில் கொரோனா வந்திருக்கிறது, அங்கேயிருந்து காற்றில் பரவி நம்மையும் தொற்றுமோ என்றும் பதறத் தேவையில்லை. தும்மும் போது வெளியேறுவது 40 ஆயிரம் துளிகள், பேசும்போது 3 ஆயிரம் துளிகள்தான்.




அந்தத் துளிகளில் கொரோனா வைரஸ் மட்டும்தான் கலந்து வரும் என்பதில்லை. வேறு பாக்டீரியாக்களும் வரும். சிறிய துளிகளிலும், நுண்துளிகளிலும் இருக்கக்கூடிய வைரஸ் மிகக் குறைவுதான். அந்தத் துளிகள் பரவுகிறபோதே ஆவியாகிவிடுவதற்கான வாய்ப்பு அதிகம். கிருமி உயிர் வாழ்வதற்கு ஒரு ஈர உறை இருக்க வேண்டும். ஆகவே துளிகள் ஆவியாகிறபோது கிருமி செயலிழந்து விடும். நுண்துளிகள் உடல் மேல் விழுவதாலேயே தொற்று ஏற்பட்டு விடாது.

மூக்கில் அல்லது கண்ணில் படுவது, கையில் பட்ட பின்னர் மூக்கையோ கண்ணையோ கையால் தொடுவது போன்ற நிலைமைகளில் உள்ளே செல்லுமானால் தொற்று ஏற்படக்கூடும். தலையில் விழுந்து, அங்கேயிருந்து நழுவி முகத்தில் சரிகிறபோது கண்ணிலோ, மூக்கிலோ நுழையு மல்லவா என்று பலர் கேட்கிறார்கள். அப்படி நடக்காது என்று சொல்ல முடியாதென்றாலும், அதற்கான வாய்ப்பு மிக அரிதானதுதான்.

காற்றோட்டம் இல்லாத அறைகள், ஏ.சி. இயக்கப்படுகிற உணவகம் போன்ற பொது இடங்களில், தொற்று இருக்கக்கூடிய ஒருவர் தும்மினாலோ இருமினாலோ பேசினாலோ வெளியேறும் நுண்துளிகள் கூடுதல் தொலைவுக்குச் செல்லக்கூடும். வழியில் மற்றவர்களைத் தொற்றக் கூடும். காற்றோட்டமில்லாத இடங்களுக்கும் கூட்டமான இடங்களுக்கும் முகக்கவசமின்றிச் செல்வதைத் தவிர்ப்பது நல்லது.

# இந்த மாற்று வைரசுக்கு என்ன பெயர்?

■ தொல்புரம் சி.கதிர்காமநாதன்







பனை மரத்து ஓலையில் கட்டியிருந்த பெருங் குளவிக் கூடானது, காற்றின் வேகத்தில் அடியுண்டு குளவிகள் கலைந்து, சிறிது நேரத்தில் அவை அடங்கின. இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நாடாளுமன்றக் கூட்டுக்குள் அடங்கியிருந்த அரசியல்வாதிகள் கலைக்கப்பட்டார்கள். இப்போது எத்தனை பேர் புதுக் கூடுகள் கட்டியிருக்கிறார்கள்?, எவ்வளவுபேர் கட்சி மாறப் போகிறார்கள்? என்பதே இனி நடக்கும்.

அரசியல்வாதிகள் மாத்திரமா கட்சி மாறுகிறார்கள்? சாமி கும்பிடும் பக்தர்களும் அல்லவா கட்சி மாறுகிறார்கள்! என்ன குழப்பமாக இருக்கிறதா?

முன்னைய காலத்தில் பல குடும்பங்கள் வசித்துவந்த ஒரு கிராமத்தில், அந்தப் பொதுக் கிணற்றில்தான் குளித்தல், முகம் கழுவுதல், உடுப்புத் தோய்த்தல், குடிப்பதற்கு நீர் எடுத்தல் எனப் பல தேவைகளை நிறைவேற்றினர். குளித்து முடித்த கையோடு கிணற்றருகிலிருந்த கன்றுகளில் பூக்கள் பிடுங்கி அங்கு ஓர் ஓரத்தில் வைத்திருந்த வைரவப் பெருமானை வணங்கி வீடு சென்றார்கள்.

நாகரிகம், சமய சம்பிரதாயங்கள், பணப் புழக்கங்கள் அதிகம் வராத காலங்களில் அமைதியாக இந்த வழிபாடு நடந்து கொண்டிருந்தது. சோகம், துக்கம், மனச்சஞ்சலம் ஆகிய பலவற்றை இந்தத் திரிசூல வைரவர் தீர்த்து வைத்து நம்பிக்கையளித்தார்.

அப்போது வேறு தெய்வங்கள் அங்கே நுழைந்து இடையூறு செய்யவில்லை. மக்களின் மனங்களைக் குழப்பவில்லை. பக்தர்களும் வைரவர் மீது வைத்த நம்பிக்கையை இழந்து வேறு சாமிகளிடம் தஞ்சமடையவில்லை. இன்பமோ, துன்பமோ மனதில் ஆறுதல் உண்டாகத் தாம் கும்பிட்ட கடவுளை நினைத்துத் தமது காரியங்களைத் தொடர்ந்தார்கள்.

இப்போது எண்ணற்ற சாமிகள் நாடு விட்டு நாடு புகுந்துவிட்டன. போர் நடந்து இந்த மக்கள் அளவுகணக்கற்று அழிந்த போதெல்லாம் எந்தச் சோதிட நிபுணரும், சாமியும் எமது கண் தென்படவில்லை. இப்போது?

எமக்குப் பழக்கமில்லாத புதுப் புதுச் சாமிகள், பழக்கமில்லாத சாமிகளை இங்கு இறக்குமதி செய்து தற்காலத் தருணத்தைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள்.

தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதியாகின்ற சாறி, சுடிதார் வகைகள் போல சாமிகளுக்கும் பஞ்சமில்லை. நம்ம வர்களும் புதிதாக முளைத்த சாமிகளிடம் தஞ்சம் புகுந்துவிட்டார்கள். இதனால் எமது பாரம்பரியத் தெய்வங்கள் மறக்கடிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு வருகின்றன. சிலைகளாகத் தெய்வங்களை வணங்கி வந்த நாங்கள் மனிதர்களைக்கூட அதுவும் சில தம்பதிகளையும் தெய்வங்களாக்கி வழிபடும் இழி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எந்த அடிப்படையில் மனிதர்கள் தெய்வங்களைத் தெரிவு செய்கிறார்கள்? ஒரு தெய்வத்தைப் பிறப்பிலிருந்து வணங்கிய மனிதன் சடுதியாக வேறு தெய்வத்தை இலகுவாக ஏற்றுக்கொள்ளும் மன வலிமை எவ்வாறு வந்தது. அவன் தோல்வியடைந்தது எந்த விடயத்தில்?


இப்போது தேர்தல். இதில் கட்சி மாறும் அரசியல்வாதி மக்களுக்கு என்ன காரணத்தைச் சொல்வார்?

"மக்களே! நான் எனது கட்சியின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டேன். சாதாரணத் தொண்டனாக என்னைப் பாவித்து உழைத்தேன். அங்கே எனது கருத்துக்கு மதிப்புக் கொடுக்கவில்லை. அவர்கள் தமது விருப்பத்துக்கு ஏற்பச் செயற்பட்டார்கள். இதன் காரணமாக அந்தக் கட்சியிலிருந்து விலகி மற்றைய கட்சியில் சேர்ந்தேன்''

இது அரசியல்வாதியின் கருத்து. இது உண்மையாகவோ அல்லது அவருடைய சுயலாபத்துக்காகவேகூட அவர் கட்சி மாறி இருக்கலாம். இதேபோல சாதாரண பக்தன் தான் வணங்கிய தனது சமயம் சார்ந்த தெய்வத்தை விட்டுவிட்டு அடுத்த சமயத்துக்குக் குற்றவுணர்வு எதுவுமின்றி மாறும் போது என்ன காரணத்தைச் சொல்வான்?

இவன் இப்போது புதிதாகத் தழுவிக் கொள்ளும் சமயத்தைச் சார்ந்த மனிதன் எப்படித் தன்னிலை கெடாது மூளைச்சலவைக்கு உட்படாது வேறு சமயம் மாறாது இருக்க முடிந்தது? இதுவரை காலமும் அவனது சமயம் சார்ந்த தெய்வம் அவனது வேண்டுகோள்களை ஒன்றுவிடாமல் நிறைவேற்றி உள்ளதா? சமீபத்தில் தொலைக்காட்சித் தொகுப்பாளினி ஒருவர் (தென்னிந்தியா) இப்படிச் சொன்னார், "சிறு வயதிலிருந்தே நான் பிள்ளையார் பக்தை. எனது தோழி வெளிநாட்டிலிருந்து இந்தச் சாமியையும் (ஒரு படத்தைக் காண்பித்து) அவரது அற் புதங்களையும் சொல்லி ஒருமுறை போய் அவரை வணங்கி விட்டு வா. பிறகு பாரன் என்ன நடக்கிறதென்று எனச் சொன்னாள். அவள் சொன்ன மாதிரி அந்தச் சாமியைப் பார்த்து நான் வேண்டிக் கொண்டேன். நினைத்தது நடந்தது. அன்றிலிருந்து நான் இந்தச் சாமியின் பக்தை ஆகி விட்டேன்'' என்று.

கட்சி மாறாமலிருக்கச் சமயத்தில் என்ன செய்யப்போகிறோம்? இந்தச் சமய மாற்று வைரசுக்கு என்ன பெயர்?




**மூளைக்கு வேலை! முடிகிறதா பாருங்கள்!**

*கறுப்புப் புள்ளிகள் உள்ளடங்கும் வட்டங்கள் எத்தனை?*

1

■ பிரேம்

# இதற்கெல்லாமா சிறையில் அடைப்பார்கள்?



பாடசாலையில் வழங்கப்பட்ட வீட்டுப் பாடத்தைச் செய்யவில்லை என்பதற்காக ஒரு சிறுமி நன்னடத்தைச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார். அமெரிக்காவின் மிச்சிக்கன் மாநிலத்தின் ஒக்லான்ட் என்ற பகுதியில் 15 வயதுச் சிறுமிக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அந்தச் சிறுமி தனது தாயுடன் சண்டையிட்டார் என்றோ திருடினார் என்றோ குற்றஞ் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்படவில்லை. மாறாக வீட்டுப் பாடத்தைச் செய்யவில்லை என்ற குற்றத்திற்காகவே அவர் நன்னடத்தைச் சிறைக்கு நீதிபதியினால் அனுப்பப்பட்டுள்ளார்.



கொரோனா பெருந் தொற்றுக் காரணமாகப் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த நிலையில் இணையவழிக் கல்வியே அமெரிக்காவின் பெரும்பாலான பாடசாலைகளில் நடக்கின்றது. அத்தகைய வகுப்பு ஒன்றில் வழங்கப்பட்ட வீட்டுப் பாடத்தைச் செய்து முடிக்கவில்லை என்பதே சிறுமி மீதான குற்றச்சாட்டு.

பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டதன் பிற்பாடு கடந்த சித்திரை 5ஆம் திகதி இணையவழி ஊடான கற்கைகள் தொடங்கப்பட்டன. பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு பயனர் நுழைவுப் பெயர் வழங்கப்பட்டு அதற்கூடாக அவர்கள் பாடங்களுக்குள் உள்நுழைந்து வெளியேறுவதற்கு வசதி வழங்கப்பட்டது. இதனடிப்படையில் ஒவ்வொரு மாணவர்களும் பாடசாலைக்கு வந்திருக்கிறார்களா என்பது கண்காணிக்கப்பட்டது. அத்தோடு அவர்கள் முடிக்க வேண்டிய பாட வேலைகளும் வழங்கப்பட்டன.

ஒக்லாண்டைச் சேர்ந்த சிறுமி கிரேஸ், பாடசாலைக்குள் நுழைந்து அவளுக்கென ஒதுக்கப்பட்ட பாடவேலைகளைச் செய்யவில்லை என்று அவளது பாடசாலையே நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இணைய வழி ஊடான கற்பித்தலில் மாணவர்கள் ஒழுங்காகப் பயில்வதற்கு கிரேஸின் நடவடிக்கை அச்சுறுத்தலாக இருந்து என்று அவரது பாடசாலை கூறுகின்றது. அதனாலேயே அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு மே மாதத்திலேயே தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. பாடசாலைக்கு வராதது, பாடவேலைகளைச் செய்யாதது ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளிலும் கிரேஸைக் குற்றவாளியாகக் கண்டார். அவரது நடத்தை "சமூகத்திற்கு அச்சுறுத்தலானது" என்று குறிப்பிட்டு வழக்கை விசாரித்த நீதிபதி மேரி எலன் பெர்னன் தண்டனை வழங்கினார்.

மே மாத நடுப்பகுதியில் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுவிட்டது. புரட்டாதி மாதம் வரையில் கிரேஸ் நன்னடத்தை இல்லத்தில் கட்டுக் காவல்களுக்கு மத்தியில்தான் இருக்க வேண்டும். இல்லத்தின் கட்டுப்பாடுகள் என்றால் சும்மா இல்லை. கிரேஸின் தாய் தனது குழந்தைக்கு என்று எடுத்துச் சென்று கொடுத்த உள்ளாடைகள், முகம் துடைக்கும் காகிதங்கள், காற்சட்டைகள் என்பவற்றை தமது நெறிமுறைகளுக்கு ஏற்றவையல்ல என்று அதிகாரிகள் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

உள்ளாடைகள் பொருத்தமானவையாக இல்லை, முகம் துடைக்கும் காகிதங்களில் மதுசாரம் சேர்க்கப்பட்டிருக்கின்றது, காற்சட்டைகள் கடும் இறுக்கமானவை என்ற காரணங்களுக்காக அவற்றை நிராகரிக்கும் அளவுக்கு அந்த இல்லம் கடும் கட்டுப்பாடுகளால் நிறைந்தது.

கிரேஸ் சிறையில் அடைக்கப்பட்டதை எதிர்த்து ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டம் நடத்தினார்கள். தமது கார்களில் இருந்தபடி அவர்கள் கிரேஸின் விடுதலையை வலியுறுத்திப் பேராடினார்கள். ஆனால் அதன் பின்னரும் கிரேஸை விடுவிப்பதற்கு நீதிபதி மறுத்துவிட்டார். தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பாகவே அவரை விடுவிக்கும்படி கேட்டுத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நிராகரித்த நீதிபதி தண்டனையை மீண்டும் உறுதிப்படுத்தினார்.


கிரேஸ் ஒரு கறுப்பினத்தவர் என்பதாலேயே அவருக்கு இந்தத் தண்டனை கிடைத்தது, இது ஒரு பக்கச்சார்பான தண்டனை என்ற குரல்களும் எழத் தொடங்கியிருக்கின்றன. ஏனெனில் இதுபோன்று லொஸ்ஏஞ்சல்ஸ் மாகாணத்தில் 15 ஆயிரம் மாணவர்கள் இணைய வழிப் பாடசாலைக்குச் செல்லவில்லை, மினியாப்போலிஸ் மாகாணத்தில் மூன்றிலொரு பங்கு மாணவர்கள் இணைய வகுப்புக்களுக்குச் செல்லவில்லை.

(22ஆம் பக்கம் பார்க்க)


energy evolved (pvt) Ltd.
E. B. CREASY & CO. PLC
Since 1878

முதலீடு

நீங்களும் சூரிய ஒளியிலிருந்து மின் சாரத்தை உற்பத்தி செய்து இலங்கை மின்சாரசபைக்கு விற்பனை செய்வதன் மூலம் சிறந்ததொரு மாதாந்த வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் ...



- சிறிய, நடுத்தர, பாரிய அளவிலான முதலீடுகள்.
- அரச அங்கீகாரத்துடன் இலங்கை மின்சார சபையினால் 20 வருடங்களுக்கு செய்து கொள்ளப்படும் வலுவான ஒப்பந்தம்.
- மத்திய வங்கியால் வழங்கப்படும் மானிய வட்டி அடிப்டையில் இலகுவான முறையில் கடன் வசதி.
- சிறிய முதலீட்டின் மூலம் உங்களது வீட்டு மின் கட்டணத்தை (00 ரூ) பூச்சியம் ரூபாய் ஆக்கமுடியும்.
- சூரிய ஒளி மின்சக்தி தொழில் நுட்பங்களில் 18 வருட அனுபவம்.
- அலகு ஒன்றிற்கு ரூபாய் 22/- மின்சார சபையிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.


SPECIAL OFFERS ARE AVAILABLE

| வழமையான மின் கட்டணம் | முதலீடு |
|---|---|
| 3363.00 | 185000.00 |
| 6763.00 | 285000.00 |
| 13963.00 | 495000.00 |

ENERGY EVOLVED (PVT) LTD
071 1387066
வாடிக்கையாளர் சேவை நிலையம்
மட்டக்களப்பு கல்லடி பாலம்
மீன் இசை பூங்கா, கட்டடத்தொகுதி.

# எங்கே போகிறோம்?

எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும் புதிய
தொடர்



களவும் கற்று மற என்று ஒரு பக்கம், தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்று மறுபக்கம் முரணான வழக்குகள் எமது மத்தியில் இருக்கத்தான் செய்கின்றன. இதில் எந்த வழிப் பாதை சிறந்தது. களவை கற்றால், அந்த சுகம் கண்டால், மறக்க முடியுமா? கற்காவிட்டால் உலகத்தை படிக்க முடியுமா? வாழ்க்கையை வெல்ல முடியுமா? பழகப் போய் சுடுகாடு வரை விடுபட முடியாமல் போராட வேண்டுமா?

படைப்பின் இயற்கை சுதந்திரமாகவே வாழ விரும்புகிறது. ஒரு கட்டுப்பாட்டுக்குள் வர மறுக்கிறது. துள்ளித் திரிகின்ற வயதினிலே என் துடுக்கு அடக்கி பள்ளிக்கு வைத்திலனே என்று காலம் கடந்து பிள்ளை பிழை சொல்ல வைக்கக்கூடாது.

பெற்றோர் தமது வாழ்க்கையை ஒரு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டி விட்டால் பிள்ளைகள் சரியான பாதையில் பயணிப்பது இலகுவாகிறது. எல்லா இடங்களிலும் எல்லா விதிகளும் சரி வரப் பொருந்துவதில்லை. விதி விலக்காகப் பல.

பெற்றோர் குடித்தால் பிள்ளைகள் அனுபவப்பட்டு அவஸ்தைப் பட்டு அந்தப் பக்கமே திரும்பிப் பாராமல் விடுதலும் உண்டு. தாமும் குடித்தோ தறிகெட்டோ போவதும் உண்டு.

ஒரு பெண் பெனி (பெயர் மாற்றம்) 40 வயது. தனது பத்து வயது மகனை பயிற்சியில் ஈடுபட விட்டுக் காத்திருக்கிறாள். அவளது பொழுதுபோக்கு புகைத்தலே. ரசனையோ விதவிதமாக மேலெழும் புகைச் சுருள்களே.

அவளோ ஒரு மருத்துவ தாதி. பல நோயாளிகளுக்குப் புகைத்தலினால் வரும் கேடு பற்றி வகுப்பு எடுக்கும் வழமை கொண்டவள். தனது சிகரெட் பெட்டிக்குள் விரல்களை நுழைத்தபடி கண்களை விளையாட்டில் ஈடுபடும் மகன் மீது படரவிட்டவளுக்கு சற்றே அதிர்ச்சி. சிகரெட்டுக்கள் இரண்டொன்று பெட்டிக்குள் குறைவது போல ஓர் உணர்வு. யார் எடுத்து இருப்பார்கள்? தனது பிள்ளைகளா? அதிலும் எவராக இருக்கலாம்?

தன்னைப் போல் பிறரையும் நேசி என்றார்களே தவிர தன்னைப்போல் பிறரையும் நினை என்று சொல்லவில்லையே. தனது சிறு வயதுப் பழக்கம் பற்றிய கவலை இன்று அவளது மனதினை ஆக்கிரமித்துக் கொண்டது. அவளுடைய பெற்றோர் இருவரும் சங்கிலித் தொடராகப் புகைப்பவர்கள்.

பிள்ளைகளைத் தழுவ வேண்டிய கைகள் இன்று ஸ்மாட் தொலைபேசியை ஏந்துவது போல அன்று அவளது பெற்றோரின் கரங்கள் சிகரெட்டினை ஏந்தி நின்றன. விளைவு தகப்பனுக்கு மாரடைப்பு. தாய்க்கோ புற்றுநோய். தகப்பனோ புண்ணியவாளன் பட்டென்று போய்விட்டார். தாயோடு அணு அணுவாக போராடியதில் இவளுக்கும் பங்கு உண்டு. அந்த வேதனையை கண்ணாரக் கண்டு கலந்து அனுபவித்தும் இவளால் புகைப்பதை கைவிட முடியவில்லை.

இதில் என்ன சுகம் அப்படி இருக்கிறது? ஆரம்பத்தில் அறியும் ஆவலில் ஒரு நாள் ஒரு சிகரெட்டை திருடிப் பற்ற வைத்துக் கொண்டாள். அதன் சுவை அவளுக்கு அவ்வளவு இதமாக இருக்கவில்லை. பாதியிலேயே வீசிவிட்டு போய்விட்டாள். ஆனாலும் சற்று நேரமாக மனம் ஏனோ அதனையே வட்டமிட்டது.


மறுநாள் பாடசாலையில் ஏதோ சம்பவமாக ஒரே ரென்ஷன். வீட்டுக்கு வந்து அப்பாடா என்று படுக்கையில் விழுந்தவள் கண்களில் பட்டதோ அந்த சிகரெட் பெட்டிதான். ஒன்றை எடுத்து இழுத்து ரசிக்க தொடங்கியவள் இன்று வரை சுமார் இருபத்தைந்து வருடங்களாக அதனோடு தஞ்சம். விளைவு படபடப்பு, உயர் குருதியமுக்கம்.

இனி மகனுக்காக வாழ வேண்டிய ஒரு நிர்ப்பந்தம். பலருடைய நிலமை இப்படித்தான். ஆடும் வரை ஆட்டம். ஆயிரத்தில் நாட்டம். அப்படியே உடம்பைக் கெடுத்து நோயை விலைக்கு வாங்கிக் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்ய ஆசை வரும். வாழ வேண்டும் என்று ஆசை வரும். இன்று தலை கால் தெரியாமல் குடித்துப் புகைத்து போதைப் பாவனையில் மூழ்கி திளைக்கின்ற இளைஞர்கள் இதுதான் உலகம் இதுதான் சொர்க்கம் என்று வாழத் தலைப்படுகிறார்கள். நிச்சயமாக நாளை வாழ வேண்டிய தேவை, வாழ வேண்டும் என்கின்ற ஆசை வரும் போது உடம்பு ஒத்துழைக்க மறுக்கப் போகிறது. அதை இப்போது சொன்னாலும் புரிவது கடினம்.

பெனி நேரத்தைப் பார்க்கிறாள். இன்னும் ஒரு மணிநேரப் பயிற்சி மகனுக்கு. காரை எடுத்துக் கொண்டு கிளம்பினால் நேரத்துக்குத் திரும்பிவிட முடியாது. பெட்டிக்குள் இருக்கும் சிகரெட்டுக்கள் ஒரு மணி நேரத்திற்கும் தாக்குப் பிடிக்காது. சில பெற்றோர் மறு முனையில் தாங்களும் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிலர் கூடி அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இவளது மனமோ வழமை போல தனிமையை நாடுவதும் யாரோடும் கலந்து பேசாமல் இருப்பதுவும், எதி லும் ரசனை அற்றதாகவும் வாசிப்பு என்றால் சலிப்பு ஆகவும் விரக்தியின் பாதையில். இவளது பார்வையில் சில லூசுகள் பிசாசு வேகத்தில் கைகளை விசுக்கு விசுக்கென்று வீசிக் கொண்டே நடை பழகிக் கொண்டு இருந் தார்கள். வைத்தியர்கள் பைத்தியங்கள் போல நடைப்பயிற்சி பற்றி நோயாளரிடம் ஆலோசனை கூறுதாக இவளது கணிப்பு.

ஸ்மாட் போனில் நடைப்பயிற்சி பற்றிய பதிவுகளை செய்து ஆதாரத்தோடுதான் நோயாளர்கள் அவளது வைத்தியரை அணுக வேண்டும். அவர்கள் தினசரி நடந்த தூரம், பாதை, எடுத்துக் கொண்ட நேரம், வேகம் என்று எல்லாம் பதிவுகளை வாசித்து சமர்ப்பிக்க வேண்டியதும் அவளது கடமை. இப்பொழுது எல்லாம் கோவிட் முடக்கம் நடைக் கள்ளருக்கு நல்ல சாட்டு.

(தொடரும்)




**மூளைக்கு வேலை! முடிகிறதா பாருங்கள்!**

கேள்விக்குறியுள்ள இடத்தில் வரவேண்டிய இலக்கம் யாது?

2

# கரித்தூள் முகப் பூச்சு!

பற்பொடி பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் கரி கொண்டு பல் துலக்கினார்கள். இப்போது பற்பொடி பின்தள்ளப்பட்டு பற்பசைகள் கோலொச்சி நிற்கின்றன. கரித்தூள் பற்களை மட்டுமல்ல, முகத்தில் உள்ள பருக்கள், தழும்புகளையும் நீக்கி முகத்தை மென்மையாக்கவும், சருமத்தைப் பளபளப்பாக்கவும் உதவுகிறது.

**கரித்தூள் தயாரிப்பது**

கரித்தூளை எப்படித் தயார் செய்வது என்று பார்ப்போம். தேங்காய்ச் சிரட்டையை நன்றாக எரித்து அதன் கரியை இதற்குப் பயன்படுத்தலாம். அல்லது ஏதேனும் ஒரு மூலிகை சார்ந்த மரத்துண்டுகளை எடுத்து எரித்து அதன் கரித்துண்டுகளைப் பயன்படுத்தலாம். இவ்வகையில் கரித்தூளைத் தயாரிக்க முடியாமல்போனால், அக்ரிவேரெட் ஷார்க்கோல் கப்சூல் (activated charcoal capsule) என்கிற பொருளை மருந்துக் கடைகளில் வாங்கிப் பயன்படுத்தலாம்.

**முகத்தில் பூசுதல்**

முகத்தில் கரித்தூளைப் பூசுவதற்கு முன்னர் முகத்தை அழுக்குகள் இன்றிச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அதற்கு முகத்தில் க்ளேன்சர் அல்லது பால் இட்டு நன்றாகத் தடவித் துடைத்துவிட்டு,

கரித்தூளுடன் தேனைச் சேர்த்துக் கலக்க வேண்டும். இது பசை போன்ற பதத்துக்கு வந்ததும், முகம் முழுவதும் நன்றாகத் தடவிக் கொள்ளுங்கள். 20 முதல் 40 நிமிடங்கள் வரை அதை முகத்திலேயே விட்டுவிடுங்கள். பின்னர் கீழ் இருந்து மேலாக அதை உரித்து எடுக்க வேண்டும். உரித்து எடுத்தவுடன், தண்ணீர் கொண்டு கழுவக் கூடாது. ஒரு சுத்தமான துணியால் முகத்தை நன்றாகத் துடைத்துக் கொள்ள வேண்டும். குறைந்தது 8 மணிநேரத்திற்காவது சவர்க்காரம் பயன்படுத்தாமல் இருக்க வேண்டியது அவசியம். இப்படி வாரத்தில் ஒருமுறை



செய்யலாம். இதனால் முகம் புதுப்பொலிவு பெறும்.

**கவனத்தில் கொள்ள வேண்டியது**

இந்தக் கரித்தூள் பசையை உங்களது முகத்தின் ஒரு சிறு பகுதியில் முதலில் பூசிப் பாருங்கள். எரிச்சல், அரிப்பு ஆகியவற்றை உணர்ந்தால் அவ்வாறானவர்கள் இதைத் தவிர்க்க வேண்டும்.

# ஆறாவது குண்டு

கலியுக பித்தன்

நெடுங்கதை
அத்தியாயம் 01

கோடை காலத்து சாரல் மழை இதமாய்ப் பொழிந்து கொண்டிருந்தது. சிறு தூவானம் திருட்டுத்தனமாக யன்னலின் வழியாக அறைக்குள் எட்டி பார்த்தது. இழுத்து மூடித் தூங்கிக்கொண்டிருந்த ராகுல் சிதறித் தெறித்த தூவானத்தால் தூக்கம் கலைந்து எழுந்தான். யன்னலைச் சாத்துவதற்காக அதனை நோக்கி அடியெடுத்து வைத்தவன், பேரமைதியை வழங்கிக்கொண்டிருந்த பேரமைதியைப் பார்த்து அதன் பிடிக்குள் சிக்கிய கைதியானான். யன்னல் கம்பிகளைப் பிடித்தவாறே ஏதோ ஒன்றை நோக்கித் தன் பார்வையைக் குவிக்க முயன்று கொண்டிருந்தான்.

இருள் சூழ்ந்த வானம் அளவுக்கதிகமாகவே இருளை அவன் அறைக்குள் அள்ளி இறைக்க முயன்றுகொண்டிருந்தது. மழைத் துளிகள் பட்டதும் மரங்கள் தம் இலைகளை இடையிடையே சிலிர்த்துக் கொண்டிருந்தன. அந்த அறையினருகே இருந்த முதிர்ந்த வேப்ப மரத்தின் சிலிர்ப்பு, அவன் முகத்திலும் சில தூறல்களைத் தெளித்தது. முகத்தில் படர்ந்த மழைத் துளிகளை ஒரு கையால் துடைத்தெடுத்தான். மறுகையைப் பொக்கெட்டுக்குள் செலுத்திச் சிகரெட்டை எடுத்துப் பற்றி வைத்துக் கொண்டான்.

அவன் சிந்தனை இந்த மழைக்குள்ளும் நனையாமல் எங்கேயோ ஓடி கொண்டிருந்தது. எதையோ தேடிக் கொண்டிருந்தது. ஏதோவொன்றை மீட்ட முயன்று கொண்டிருந்தது. வாயில் பற்ற வைத்த சிகரெட்டை நன்றாக இழுத்து, பெருமூச்சோடு அதன் புகையை வெளித்தள்ளினான்.

சுருள் சுருளாக வெளி வந்த சிகரெட் புகை மழையோடு போய்ச் சங்கமித்துக் கொண்டது. அந்தச் சுருள் புகை, ராகுலுக்கு அவளுடைய சுருள் கூந்தலை ஞாபகம் ஊட்டிற்று. அவள் முகத்தை ஞாபகப் படுத்த எத்தனித்துக் கொண்டிருந்தவன், கைத் தொலைபேசியின் அலறாலால் நிதானமானான். அவசர அவசரமாகச் சிகரெட்டை அணைத்து விட்டு அழைப்பை ஏற்றுப் பேசத் தொடங்கினான்.

"ஹலோ அம்மா" என்று பேச ஆரம்பித்தவன், அதிகமாகப் பேசாமல் தாயின் விசாரிப்புகளுக்கு ஓரிரு வார்த்தைகளில் பதில் சொல்லிவிட்டு, "ஓமம்மா, கெதியில வேலைய முடிச்சுக் கொண்டு வந்துருவன்" என்று சொல்லி அழைப்பைத் துண்டித்தான்.

வேலை, குடும்பம், பொறுப்பு என்கிற சிறிய வட்டம்தான் அவனுடைய வாழ்க்கை. அவ்வப்போது சில வசந்தங்கள் வருடிப்போயின. போனது போகச் சுழன்று கொண்டிருந்தவனை, விதி இப்போது மெது மெதுவாகத் தூக்கி வட்டத்துக்கு வெளியில் எறியப் போகிறது. அநாவசியமான விடயங்களில் தலையிடாதவன் அவன். ஆனால் இன்று, வலுக்கட்டாயமாக அவன் தலையை அவன் வேண்டாத விடயத்துக்குள் நுழைக்க விதி சதி செய்து கொண்டிருக்கிறது என்பதை அவன் அப்போது அறியவில்லை.


திடீரென அவன் தங்கியிருந்த அறைக் கதவு தட்டப்பட்டது. யன்னலோரமாய் நின்றவன், வந்து கதவைத் திறப்பதற்குள் பல தடவைகள் கதவு வேகமாகத் தட்டப்பட்டு கொண்டிருந்தது. சினந்து கொண்டே கதவைத் திறந்தவனுக்கு வெளியில் ஆச்சரியம் காத்திருந்தது.

"மிஸ்டர் ராகுல்?" அந்தக் கம்பீரமான குரலால் சற்று நிலைகுலைந்த ராகுல் "யெஸ், ராகுல் தான்" என்று தன் தடுமாற்றத்தை வெளிகாட்டாமல் பதில் சொன்னான். "நீங்க..?"

"ஐ ஆம் கவிந்த்"

"என்ன விசயம்?"

"வந்தவர்களை வாசல்லையே வைச்சு விசாரிக்கிறது தானோ உங்கட கம்பனூரோட வழக்கம்?" நமுட்டுச் சிரிப்போடு கேட்டான் கவிந்த்.



"என் ஊரு பெயர் எப்டி உங்களுக்கு.....?" தாழ்ந்த தொனியில் இழுத்தான் ராகுல்.

"இஃப் யூ டோன்ற் மைன்ட், உள்ள இருந்து பேசலாமா?" அந்த வார்த்தையில் ஏதோ பெரிய வில்லங்கம் இருப்பதாக உணர்ந்த ராகுல், தன்னைச் சற்றுத் தயார்டுப்பத்தியவாறே,

"யா! கம் இன்" என்றபடி பாதையை விலகி விட்டான். கதவைத் தட்டிப் பேசும் வரை வெளியில் ஒருவரே நின்றிருந்தார் என்று நினைத்தவனுக்கு, கவிந்த் பினாலேயே மற்றொருவனும் நுழைவதைப் பார்க்கையில் அதிர்ச்சியாக இருந்தது.

"என்ன விசயம்? எனக்கு வேர்க் விசயமா வெளில போகவேணும்..." ராகுலின் குரல் இரைந்தது.

"என்ன அவசரம்....? அதுக்குள்ளயே துரத்தினா எப்பிடி?"

"சின்ன விசயமா இருந்தா வாசல்ல வைச்சே கேட்டுட்டுப் போயிருப்பமே" கவிந்த் புன்சிரிப்போடு சொல்லி கொண்டு இருக்க, அவனோடு வந்தவன் அந்த அறையைச் சோதனையிடத் தொடங்கினான்.

"உங்களுக்கு நான் எதுக்குப் பதில் சொல்லனும்?"

"நான் இன்னும் கேள்வியே கேக்கேலை மிஸ்டர் ராகுல்." கவிந்தன் பேச்சை விட அவனுடைய மர்மமான புன்னகை தான் ராகுலுக்கு அச்சமூட்டியது.

"இவர் ஏன் அறையைக் கிளறுறார்?"

"அவர் என்னோட வந்தவர், நீங்க என்னோடதானே கதைக்கிறீங்க! அவருக்குப் பொழுது போக வேணாமா?" பூனைக்கு வேடிக்கை சுண்டெலிக்கு உயிர் போகிறது என்ற மாதிரி கவிந்த் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்க, ராகுலின் இதயம் லப் டப் லப் டப் என்று துடிப்பின் வேகத்தை அதிகரித்துக் கொண்டிருந்தது.

"உங்களுக்கு என்ன வேணும்?"

"எங்களுக்கு வேண்டியது உங்களிட்ட இருக்கா?"


"என்னன்டு சொல்லாம, புதிர் போடாதீங்கோ. மரியாதையா வெளிய போறீங்களா. இல்லையெண்டா நடக்கிறதே வேற. சொல்லிட்டன்..." கோபத்தோடு இரைந்தான் ராகுல்.

அவன் பொறுமையை இழந்திருந்தான். அவனுடைய ஒரு கண் கோபத்தைத் தனலாய்க் கக்கிக் கொண்டிருந்தது. மறு கண் பதற்றத்தைக் கொட்டிக் கொண்டிருந்தது.

இவனது இரைச்சலைக் கேட்டதும் அறையில் தேடிக்கொண்டிருந்தவன் கவிந்தின் பின்னால் வந்து நின்றான். அவன் மல்யுத்த வீரன் மாதிரி நன்கு புடைத்து, விரிந்த உடல் கட்டோடு இருந்தான். அவனது சாதாரண பார்வைகூடப் படு பயங்கரமாக இருந்தது. இப்போது கோபத்தோடு வேற ராகுலை முறைத்துக் கொண்டு நின்றான். ராகுலுக்கு முதல் தடவையாகப் பயம் உள்ளே ஊற்றெடுக்கத் தொடங்கியது. ஆனால், கோபமும் இறங்க மறுத்தது. மேற்கொண்டு என்ன செய்வதென்று அவன் நிதானிப்பதற்குள்,

"இப்போ நாங்க யாருன்னு சொன்னாத்தான் எங்களுக்கு ஒத்துழைப்புத் தருவீங்க, அப்பிடித் தானே மிஸ்டர் ராகுல்?" கவிந்தின் குரலில் சிறு அதட்டல் தெரிந்தது. ராகுல் தொடர்ந்தும் அமைதியாகவே நின்றான். (அடுத்த வாரம் தொடரும்)

## மூளைக்கு வேலை! முடிகிறதா பாருங்கள்!



3

இந்தக் கார் எந்தப் பக்கத்தில் செல்கிறது?

## அன்னை நதி

காலை உன்னை எழுப்புகிறாள் அன்னை
மெல்லசிணுங்குகிறாய்.இன்னும்கொஞ்சம் என்கிறாய்
.ம்ம் பள்ளிக்கூடமல்லே"கண்விழிக்க சொல்லி
செல்லமாக தலை தடவுகிறாள்.
சோம்பல் முறித்தெழுகிறா ய்.
"சரியான பனியாக்கிடக்கு" வேப்பிலையும்
நொச்சியும் ஆய்ந்து போட்டு
சுடு நீர் வைக்கிறாள்
நீ நீராட. மஞ்சள் அரைத்து தருகிறாள்
முகம் பூசி வருகிறாய் .
பொன் அந்தி மலையும் சூரியனும்
விழும் கடலைகன்னத்தில் காட்டுகிறாய்.
"என் கண்ணே பட்டு விடுமென்கிறாள்
சீயாக்காய் வெந்தயம் அரைத்து
தலை தேய்த்து விடுகிறாள்.
காலை நிலவெறிகிறது கிணற்றடியில்.
பால் விட்டு பச்சரிசி கஞ்சி தருகிறாள்.

இப்போ தலை சீவிவிடுகிறாள் அம்மா.
இரட்டை பின்னலில் சரோஜாதேவியை நினைவூட்டுகிறாய்.
பச்சரிசியும் சவ்வரிசியும் வறுத் தரைத்து
சிரட்டையில் ஊற்றிய கறுத்த பொட்டை. நெற்றியில்
எழுதுகிறாள்.
கண்ணுபடும் என்று
இன்னொன்றை கன்னத்தில் வைக்க வருபவள்
கையை தட்டி விடுகிறா ய்
"உனக்கு வேற வேலையில்லை யணை"சினக்கிறா ய்.
சுடு சொல் தான் ஆனாலும் அத் தாய்க்கு அதுவும்
குளிர்கிறதே கண்மணி.....

அன்னை அன்பெனும் நதி என்கிறேன்.
நீ என்ன என்கிறாய்.

-வேலணையூர் தாஸ்

# கைவிட்டுப் போகும் வெற்றிலை!

■காயா



"இதுதான் ராசா வெத்திலை. ராசா, மந்திரி எண்டுதானே முந்தி இருந்தது. இப்ப ஜனாதிபதி, பிரதமர் எண்டு ஆக்கிப் போட்டினம். ஆனால் நாங்க அந்தக் காலத்து ராசாவின்ர பெயரை மாத்தாம வச்சிருக்கிறம். இந்த வெத்திலையில இப்பிடிக் கோடு விழும். இந்தப் போடர் ஓட்டமற்றிக்கா வரும். எங்கையாவது அரிதா ஒரு கொழுந்துதான் இப்பிடி வரும்''



தனது தோட்டத்துக்குள் வித்தியாசமாகக் காட்சியளித்த அந்த வெற்றிலைக் கொடியிலிருந்த ஒரு வெற்றிலையைச் சுட்டிக் காட்டி மேற்படியாகச் சிறியதொரு விளக்கமும் தந்தார் சிதம்பரநாதன். தெல்லிப்பளை - கொல்லங்கலட்டியைச் சேர்ந்த சிதம்பரநாதன் வெற்றிலைச் செய்கையைப் பல காலங்களாக மேற்கொண்டு வருபவர்.

"வெத்திலையில சார்ப்பு, மாற்று எண்டு சொல்லி ரெண்டு வகைதானிருக்குது. முந்திச் சாவச்சேரி, அங்காலிப்பக்கத்தார் சார்ப்பு வெத்திலையைத்தான் சப்புவினம். அது நீளக்காம்பு வெத்திலை. மற்ற இடத்திலாக்களெல்லாம் பெரும்பாலும் மாற்று வெத்திலை சப்புகினம். சார்ப்பு வெத்திலைய ஆண் எண்டு சொல்லுறது. பெண் கொழுந்த மாற்று எண்டுவம். அதோட ஊர் வெத்தில, கொழும்பு வெத்தில எண்டும் இருந்தது. இப்ப ஊர் வெத்தில எண்டு ஒண்டும் இல்ல. எல்லாமே கொழும்பு வெத்திலதான். வெத்திலக் கொடியில கண்ணி வெடிக்கிறது எண்டால் என்ன எண்டு தெரியுமே?''

கேள்வி தொடுத்த சிதம்பரநாதன் அதற்குரிய பதிலைச் செய்முறை விளக்கத்துடன் தருவதற்காக அங்கிருந்த வெற்றிலைக் கொடியில் ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்துக் கொய்தார்.

''இதுக்கு இந்தக் காம்பிலேயே அல்லி வைக்கும். (வெத்திலைக் கொடியில் இலை முளைவிட்ட இடமருகில் தோன்றியிருந்த வேர் போன்ற உருவமைப்பைச் சுட்டிக்காட்டி அதையே அல்லி என்றார்) இந்த அல்லி வந்திருக்கிற காம்பை வெட்டிப் பேந்து புதுக் கொழுந்துக்கு நடுறது. இப்பிடிக் கண்ணி வெடிச்சாத்தான் மாற்று வெத்திலை வரும். எல்லாத்திலையும் வராது. சிலதிலதான் வரும். இது கண்ணி வெடிக்காம வளந்து கொண்டே போச்சுது எண்டாச் சார்ப்பு''

இது நடக்க எவ்வளவு காலம் எடுக்கும்? இடையறுத்துக் கேட்ட கேள்விக்குப் பதிலளிப்பதற்கு முனைந்த சிதம்பரநாதன் சற்றுப் பழங்காலக் கதைக்கு அழைத்துச் சென்றார்.

''முந்தி நாங்க முள் முருக்கந்தடீலதான் கொடியப் படரவிடுறது. முள் முருக்கந்தடீல அல்லி அப்பிடிப் பற்றிப் பிடிச்சு வளரும். அதிலை இருந்து கொடிய இழுத்தெடுக்கேலாம இருக்கும். கொழுந்துக்கு அதில ஒரு போர்ஸ் கிடைக்குது. அதின்ர சத்தையும் இழுக்குது போல! இப்ப முள் முருக்கந்தடி இல்ல. அதுக்கொரு நோய் வந்து எல்லாம்



படங்கள்: குமரன்

இல்லாமப் போச்சு. இப்ப கிளுவந்தடியிலதான் கொடியப் படரவிடுறம். முள்முருக்கந்தடியில பற்றிப் பிடிச்சுப் படருற மாதிரிப் போர்ஸ் கிளுவையில இல்லையெண்டாலும் ஓரளவுக்குப் பறுவாயில்ல.

கமுகு மரத்துக்குக் கிட்டயும் வைக்கலாம்போல கிடக்கு. கிளுவையைப்போல கமுகிலையும் பிடிக்குது. கமுகுக்குக் கிட்டவா வைக்காமக் கொஞ்சம் அரக்கி வைக்கவேணும். ஏனெண்டாக் கமுகின்ர வேருக்க போனாரெண்டாப் போர்ஸா எழும்ப விடாது. கொஞ்சம் தள்ளிய வைச்சுக் கமுகில படரவிட்டால் வளருது. எதிலை படரவிட்டாலும் கொடிய இடைக்கிடை நேராக்கிக் கட்ட வேணும். அப்பிடி இப்பிடி வளைய விடப்படா. இல்லாட்டி இலை விட்டு வடிவா வளராது. பிறகு வளந்து வரேக்க கண்ணி வெடிச்சா அதில கட் பண்ணிவிடவேணும். அப்பிடிக் கட் பண்ணினா நல்ல போர்ஸா வந்து சிலவேளை ஒரு கொழுந்த மட்டும் பத்துக் கிளுவை வரைக்கும் கட்டலாம். பத்து மரம் வந்தா ஒரு மரத்தில 50 வெத்தில ஆய்ஞ்சாலும் எங்க வருமெண்டு பாருங்கோவன்?''

முள்முருங்கையில்லாமல் கிளுவையில் படரும் நிலையால் வெற்றிலைச் செய்கையில் சற்று மந்த நிலை ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டிய சிதம்பரநாதன், சந்தையில் வெற்றிலையின் விலை வெகுவாகக் குறைத்திருப்பது குறித்தும் தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.



"அந்தக் காலத்தில 4ரூபா, 5ரூபா வரைக்கும் வித்த வெத்திலை இப்ப சதக் கணக்கிலதான் போகுது. சில வருசங்களுக்கு முதல் ஓரளவுக்குப் பருவாயில்லாத விலை இருந்துது. பிறகு இடைக்கிடை சில மாசங்களில மாத்திரம் சாதுவா விலை ஏறி இறங்கீச்சு. இப்ப எழுவேசம், எண்பேசம், ஒரு ரூபா எண்ட கணக்கில நிக்குது''

என்றவர் தான் இப்போது வெற்றிலையுடன் மாத்திரம் நின்றுவிடாது வேறு சில பயிர்களையும் செய்து வருகின்றார் என்று தெரிவித்தார். வெத்திலைச் செய்கையால் வருமானம் குறைவடைந்து செல்வதன் காரணமாக அவர் மாற்றுப் பயிர்களில் நாட்டம் கொள்கின்றார் என்பதை அவரது பேச்சுகள் உணர்த்தின.

படிப்படியாக வெற்றிலைச் செய்கையைக் கைவிட வேண்டிய தேவை வரும் என்பதை அவரது உரையாடல் உணர்த்துகின்றது.

"இதைச் சாமை எண்டு சொல்லுறது. சாமையில ரெண்டு விதங்கிடக்கு. ஒண்டு திணை எண்டு சொல்லுறது. அது வெண் மஞ்சளா இருக்கும். மற்றது செந்திணை அது செம்மஞ்சலடிக்கும். மாவிளக்கு... இதுகளுக்கு எடுக்கினம். போன வரிசம் தான் உதப் போடத் தொடங்கினான். கிலோ எண்பது தொண்ணூறுக்கு எடுத்தாங்கள். முந்தின ஆக்கள் இந்தச் சாமையில நிறையச் சாப்பாடு செய்து, கொழுக்கட்டை அவிச்சுச் சாப்பிட்டவ. இப்ப ஆரு அப்பிடிச் சாப்பிடுகினம். உரல் உலக்க புடிக்கவே சனத்துக்குத் தெரியுதில்ல. அப்ப எப்பிடிச் சாம விலபோகும்? போன வரிசம் போட்ட பழக்கத்தில இந்த வரிசமும் கொஞ்சம் தானே எண்டுபோட்டுப் போட்டன். இப்ப சாம என்ன விலை சொல்லுங்கோ பாப்பம்...? இருநூற்றம்பது முந்நூறு போகுது! இதில போட்ட சாமை இவ்வளவும் கிட்டத்தட்ட 35ஆயிரம் ரூபாய்க்குக் குடுத்தன் (இடத்தைக் கைகளால் காட்டுகிறார்)"

சிறியதொரு வயற்பரப்பு அது. அந்தப் பரப்பில் தான் விதைத்த சாமையால் அதிக வருமானம் ஈட்டினேன் என்று கூறி அதற்குரிய காரணத்தையும் அவரே கூறினார்.

"சாமயச் சனம் அதிகம் சாப்பிடுறதில்லையெண்டு நான்

(20ஆம் பக்கம் பார்க்க)



■ மதுராந்தகி

# யாழ்ப்பாண தனியார் கல்வி நிலையங்களின் தனியுரிமை

“ தனியார் நிலையங்களின் போட்டியால் பாடத் திட்டத்தை முடிக்காமலும் மாணவர்கள் படித்தவற்றை மீளப் படிக்க முடியாமலும் இருப்பதால் பல மாணவர்கள் பணத்தையும் நேரத்தையும் செலவழித்திருந்தாலும் தமது இலக்குகளை அடைய முடியாத நிலையில் விரக்தியுடன் வழ்கின்றனர்

யாழ்ப்பாணத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு நீண்ட காலம் கல்வி மறுக்கட்ட நிலையில் பல்வேறுபட்ட பிரயத்தனங்களின் பின் அனைவருக்கும் கல்வி என்ற பொது மேடையைத் தனியார் கல்வி நிறுவனங்கள் உருவாக்கிக் கொடுத்தன. 1970 களின் ஆரம்பத்தில் நெல்லியடியில் தனியார் கல்வி நிலையம் ஆரம்பிக்கட்டுப் பின்னர் யாழ்ப்பாணத்துக்குப் பரவியது. இன்றுள்ள சூழலில் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு இடையிலான போட்டிகள் மாணவர்களின் கல்வியில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. அதேவேளை தனியார் கல்வி நிலையங்களுக்கு இந்த மாணவர்கள், பல ஆயி ரம் ரூபாய்களைத் தமது கல் விக்காக வழங்க வேண்டியும் உள்ளது.

குறிப்பாகக் கணித விஞ்ஞான மாணவர்களின் கல்வியிலேயே இந்தப் பாதிப்பான சூழலை அடையாளம் காணமுடிகிறது. முதன்மைக் கல்வி நிலையங்கள் 2, தனிநபர் கல்வி நிலையங்கள் (குறிப்பிட்ட பாடத்துக்கு மட்டும்), குழு நிலை வகுப்புகள் எனப்பல்வேறு வகைப்பட்ட வகுப்புகளில் மாணவர்கள் கல்வி கற்பதால் தாம் விரும்பிய கல்வி நிலையங்களுக்குச் செல்லாதவாறு பெரிய கல்வி நிலையங்கள் தமது தனியுரிமையை மாணவர்கள் மீது திணிக்கின்றன. இதன் மூலம் தம்மைத் தவிர ஏனைய கல்வி நிலையங்களுக்கு மாணவர்களைச் செல்லவிடாது தடுப்பது, 3 பாடங்களையும் ஒரே இடத்தில் தான் கற்க வேண்டும் என வற்புறுத்துவது, குறிப்பிட்ட ஒரு பாடத்தில் தாமே கெட்டிக்காரர் என்றிருக்கிற பெயரை மற்ற வர்கள் கெடுத்துவிடுவார்கள் என்ற பயம், ஏனையவர்களிடம் கற்று வந்து தம்மிடம் கேள்வியெழுப்பி நெருக்கடிக்குள் தள்ளி விடுவர் என்றபயம் தவிர்க்கப்படுகிறது.

சில பாடசாலை ஆசிரியர்கள் குறிப்பிட்ட தனியார் கல்வி நிலையங்களையும் அங்கு யாரிடம் கல்வி கற்க வேண்டும் எனவும் மாணவர்களுக்குப் பணிப்பு விடுகின்றனர்.

மாணவர்களின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது. குறிப்பாக மாணவிகளின் நிலை அதைவிட மோசமாகவுள்ளது. பல மாணவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, கண்டி, மாத்தளை, பதுளை ஆகிய இடங்களில் இருந்து வார இறுதி வகுப்புகளுக்காக யாழ்ப்பாணம் வரும்போது கல்வி நிலையங்களினதும் ஆசிரியர்களினதும் தன்னிச்சையான முடிவாலும் போட்டியாலும் இந்த மாணவர்கள் தாம் எதிர்பார்த்து வரும் நோக்கத்தை அடைய முடியாதுள்ளது.

இதைவிட சில ஆசிரியர்கள் வகுப்பு ஆரம்பிக்கவுள்ள நேரத்தைத் தாண்டி 15 - 20 நிமிடம் தாமதித்தே வகுப்புகளுக்கு வருகின்றனர். அதன் பின்னரும் நேரடியாகப் பாட விதானத்தில் இறங்காது கதைகள், பகிடிகள் எனக் காலம் கழித்து விட்டு மிகக் குறுகிய நேரமே கற்பிக்கின்றனர். இதுவும் மாணவர் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது.

பல மாணவ மாணவிகள் ஒழுங்காகச் சாப்பிடக்கூட நேரமில்லாமல் பால் பக்கெட், பிஸ்கட் என எதையாவது சாப்பிடுகின்றனர். அவர்கள் ஒரு கல்வி நிலையத்திலிருந்து மற்றைய கல்வி நிலையத்துக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்ற பின் குறிப்பிட்ட ஆசிரியர் இன்று வரமாட்டார் என மிகவும் சாதாரணமாகக் கல்வி நிலைய நிர்வாகம் கூறிவிடுகிறது.


பல பெற்றோர் தமது பிள்ளைகளை மோட்டார் சைக்கிள்களில் இறக்கிவிட்டுச் சென்று சிறிது நேரத்தில் திரும்பவும் வந்து பிள்ளைகளை ஏற்றிச் செல்கிறார்கள். இவ்வாறு பொறுப்பற்ற ஆசிரியர்களே ஏனைய கல்வி நிலையங்களில் ஒழுங்ககாகக் கற்பிக்கும் ஆசிரியர்களின் நேரத்தைக் குழப்புவதில் குறியாகவும் இருக்கின்றனர்.

பல பெற்றோர் இந்த இழுபறிக்குள் தமது பிள்ளைகளை விடாது ஒரு கல்வி நிலையத்தில் மட்டும் கல்வி கற்க அனுமதிக்கின்றனர். ஆனால் பெரும்பாலான மாணவர்கள் அவ்வாறான தீர்மானங்களை எடுக்க முடியாத நிலையிலுள்ளனர்.

இதைவிட க.பொ.த. உயர் தரப் பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் பணிக்குச் செல்லாத அரச ஆசிரியர் சேவையில் இல்லாத பலரும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களாக இருப்பதால் வினாத்தாள்களைத் திருத்தும்போது எவ்வாறு புள்ளிகள் வழங்கப்படுகின்றன ஒவ் வொரு வருடமும் செய்யப்படுகின்ற மாற்றங்கள் என்ன என்பவற்றை அறியாதவர்களாக இருப்பதால் கேள்விகளுக்கு உரியவாறு விடை எழுதப் பயிற்றுவிக்க முடியாதவர்களாக உள்ளனர்

தனியார் நிலையங்களின் போட்டியால் பாடத்திட்டத்தை முடிக்காமலும் மாணவர்கள் படித்தவற்றை மீளப் படிக்க முடியாமலும் இருப்பதால் பல மாணவர்கள் பணத்தையும் நேரத்தையும் செலவழித்திருந்தாலும் தமது இலக்குகளை அடைய முடியாத நிலையில் விரக்தியுடன் வழ்கின்றனர் இது விடயத்தில் பெற்றோர்கள் நல் முடிவுகளை எடுப்பதன் மூலம் தமது பிள்ளைகளின் கல்வி அடைவை அதிகரித் துக்கொள்ள முடியும். கல்வியில் யாழ்ப்பாணம் அல்லது வட மாகாணம் பின்னிலையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். ■

## மூளைக்கு வேலை! முடிகிறதா பாருங்கள்!




காருக்கு கீழே உள்ள இலக்கம் என்ன?

4



## கிறுக்கல்களே குழந்தைகளின் வளர்ச்சி!

குழந்தைகள் வீட்டுச் சுவர் முழுக்கப் பென்சிலால் எழுதிக் கிறுக்கி தள்ளிவிட்டார்களா...? அதற்காக அவர்களைத் தண்டிக்கிறீர்காளா? இதற்காகக் குழந்தைகளைத் தண்டிப்பதைத் தவிருங்கள். காரணம் இந்தக் கிறுக்கல் செயற்பாடுகள் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு உரமிடுகின்றன. ஆகவே குழந்தைகளின் கிறுக்கல்களுக்குத் தடை ஏற்படுத்தாமல் அவர்கள் கிறுக்கிய பின்னர் அவற்றை எவ்வாறு அகற்றுவது என்று குறித்தே சிந்திக்க வேண்டும்.

பேக்கிங் பவுடர் கொண்டு சுவர்க் கறைகளை அகற்ற முடியும். பேக்கிங் பவுடரைத் தண்ணீரில் பசைபோன்று கரைத்துப் பல்துலக்கும் தூரிகையைப் பயன்படுத்தி சுவரில் கறை உள்ள பகுதிகளைத் தேய்த்தால் கறைகள் நீங்கும். ஒரு மூடி வினிகரை ஒரு வெதுவெதுப்பான நீரில் கலந்து அந்தத் தண்ணீரை பஞ்சு தொட்டு கறை படிந்துள்ள பகுதிகளில் துடைத்தால் கறைகள் நீங்கும். கறை முற்றாக நீங்கவில்லை எனில் ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் வினிகரை நேரடியாகத் தொட்டுத் தேய்த்தால் நீங்கும். போரக்ஸ் பவுடரும் இதற்கு உகந்தது. போரக்ஸ் பவுடரை தண்ணீரில் கலந்து கறை படிந்துள்ள இடத்தில் தேய்த்துக் கழுவவும். இதன் ஆற்றல் அதிகம் என்பதால் கவனமாகக் கையாள வேண்டும்.

# தன்னம்பிக்கையின் உச்சம் புலேந்திரன்!

வவுதன்

*"ஊனம் ஊனம் ஊனம் இங்கே*
*ஊனம் யாருங்கோ*
*உடம்பில் உள்ள குறைகள்*
*எல்லாம் ஊனம் இல்லீங்கோ*
*உள்ளம் நல்லாருந்தா ஊனம் ஒரு*
*குறை இல்லே*
*உள்ளம் ஊனப்பட்டா*
*உடம்பிருந்தும் பயனில்லே"*

இந்தப் பாடல் நடராசா புலேந்திரனுக்காவே எழுதப்பட்டவைகள் போல இருக்கின்றன.

வவுனியா தம்பனைச்சோலையில் வசித்து வருகிறார் புலேந்திரன். பார்வையற்றவர். யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட இவர் வவுனியாவில் திருமணம் செய்து கொண்டு வாடகை வீடொன்றில் வாழ்கிறார்.



வாழ்க்கை சோதனைகள் நிரம்பியது தான் என்பதை ஏற்றுக்கொள்வதில் அவருக்குத் தயக்கம் ஏதுமில்லை. "ஆனால் போராடுவதுதானே மனிதனுக்கு அழகு" என்கிறார்.

ஆரம்பத்தில் தம்பனைச்சோலையில் சைக்கிள் திருத்தும் நிலையத்தினை நடத்தி வந்தார். ஓய்வு நேரங்களில் விளக்குமாறு மற்றும் தும்புத்தடி செய்வதை வழக்கமாகிக் கொண்டிருந்தார்.



பட்ட காலிலேயே படும் என்பதைப் போன்று அவரது சைக்கிள் திருத்தகத்தில் இருந்த பொருள்கள் அனைத்தையும் ஒருநாள் யாரோ முற்றிலுமாகத் திருடிக்கொண்டு சென்று விட்டார்கள்.

என்ன செய்வது என்று முதலில் திகைத்து நின்றாலும் உடனடியாகச் சுதாகரித்துக்கொண்டு தனது ஓய்வு நேர வேலையான கைத்தொழிலையே முழு நேரத் தொழிலாக்கிக் கொண்டார்.

விளக்குமாறு மற்றும் துடைப்பான் தயாரிப்பை வினைத் திறனுடன் மேற்கொண்ட புலேந்திரன் தனது மனைவியின் துணையுடன் இன்று மிகச் சிறிய அளவிலான உற்பத்தி நிலை யத்தின் உரிமையாளர். "விளக்குமாறு துடைப்பத்துக்கு நல்ல கேள்வி இருக்கிறது" என்று அவர் கூறும்போது தன்னம்பிக்கை பளிச்சிடுகிறது.

கழிவுப்பொருள்களில் இருந்து மீள் பாவனைக்குரிய பொருள்களை உருவாக்கினால் நல்ல லாபம் பார்க்கலாம் என ஆலோசனை கூறும் இவர், எவரும் முடியாது என்று கூறாமல் முயற்சிப்பதே வெற்றியின் முதல்படி என்கிறார்.


புலேந்திரனின் நீக்கமற்ற இரு கண்களும் அவரது மனைவியே. தங்கராணி 2014ஆம் ஆண்டு புலேந்திரனைத் திருமணம் செய்துகொண்டார்.

வாழ்க்கையில் எவ்வளவு ஏற்ற இறக்கங்கள் வந்தாலும் சலித்துக் கொள்ளாமல் அனைத்தையும் தாங்கிப்பிடிக்கும் தங்கராணி உண்மையில் புலேந்திரனுக்குக் கிடைத்த தங்கம்தான். இருவரும் இணைந்து தினமும் 20 மேற்பட்ட விளக்குமாறுகளை உற்பத்தி செய்கிறார்கள்.

வங்கிகள் கடன் கொடுத்தால் மேலும் பல மாற்றுத் திறனாளிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு கொஞ்சம் பெரியளவில் இதை ஒரு தொழிற் சாலையாக்கிக் கொள்ளும் ஆசையும் புலேந்திரனுக்கு இருக்கின்றது. ஆனால், வங்கிளிடம் கடன் கேட்டுப் போனால் அங்குள்ளவர்கள் தன்னைப் போன்றவர்களிடம் நடந்து கொள்ளும் முறை குறித்த அச்சம் அவரைக் கட்டிப் போட்டு வைத்திருக்கிறது.

"கொரோனா பெருந் தொற்றுக் காலத்தில் மாற்றுத்திறனாளிகள் சோர்ந்து வீட்டில் முடங்கியிருக்காது பல சுய உற்பத்திகளில் ஈடுபடவேண்டும். அவர்களால் அது முடியும்" என்கிறார் புலேந்திரன்.

வாழ்க்கை வாழ்வதற்குத்தானே தவிர முறையிட்டு முடங்கிக் கிடப்பதற்கல்லவே! ■




கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.


யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

■ முருகேசு சதாசிவம்

அண்மையில் ஒரு பாடசாலை மதிலில் கட்சிச் சின்னத்தையும் இலக்கத்தையும் பொறித்த முகவர்களின் செயலைக் கண்டித்து வேட்பாளர் ஒருவர் தானே முன்னின்று அந்தப் பாடசாலை மதிலுக்கு வர்ணம் பூசிய சம்பவம் நடந்தது. கட்சியில் தொண்டர்கள் இல்லை, முகவர்களே இருக்கிறார்கள் என்பதற்கு இது நல்லதொரு உதாரணம்.

# தொண்டர்கள் இல்லை முகவர்களே இவர்கள்!



எந்தவொரு கட்சியும் தனது எதிர்கால நிலைபேற்றுக்காக தொண்டர்களை இணைப்பது வழக்கம். இது ஆயுதப் போராட்ட இயக்கங்களிலும் காணப்பட்டது. ஒரு தனிபர் ஒரு கட்சியையோ, இயக்கத்தையோ தெரிவு செய்வதற்கு ஏதோ ஒரு காரணம் இருந்திருக்கும். ஏனைய கட்சிகளுடன் ஒப்பிட்டுத் தான் ஒரு கட்சியை அல்லது அமைப்பைத் தெரிவு செய்வார்கள் என்பதும் வழக்கமானதுதான்

ஆனால், இன்றுள்ள தமிழ்க் கட்சிகள் தம்முடன் தொண்டர்களைச் சேர்த்துக்கொள்வதற்குப் பதில் தேர்தல் வெற்றிக்காகக் குறுகிய காலத் தேர்தல் செயற்பாட்டாளர்களாக முகவர்களையே இணைத்துக்கொள்கின்றன. இதைக் கண்கூடாகக் காண முடிகின்றது.

கட்சித் தொண்டர்கள் என்போர் நிரந்தரக் கடை ஒன்றை வைத்திருப்பவர்கள் போல பொறுப்புக்கூறும் நபர்களாகச் செயற்படுவர். தமது ஊர்களில் என்ன விடயத்தைச் செய்ய வேண்டியுள்ளது என்ற எதிர்பார்ப்பு தொண்டர்களிடம் இருக்கும். தேர்தலில் வெற்றி பெற்றவர்களிடம் தேர்தல் காலத்தில் கூறிய விடயங்களை நிறைவேற்றித் தருமாறு கேட்கும் அல்லது வலியுறுத்தும் ஆற்றல் தொண்டர்களுக்கு இருக்கும்.

முகவர்களை வைத்து அரசியல் செய்வோர் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய தேவை இல்லை. மரத்துக்குக் கீழ் பொருள்களைப் பரப்பி விற்பவர் அன்று மாலையே அந்தக் கடையைக் கலைத்துவிட்டுச் சென்றுவிடு வதுபோல தேர்தல் முடிந்ததும் இடத்தைக் காலி செய்வர். இந்த முகவர்களுக்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்ப தில்லை. முகவர்கள் அதை விரும்புவதும் இல்லை.

ஒரு கட்சியின் துண்டு வெளியீடுகளைக்கூட முகவர்கள் வழங்கும்போது மக்களிடம் தமக்கு வாக்களிக்குமாறு கேட்பதில்லை. வீடுகளில் பூட்டியிருக்கிற கேற்றில் துண்டுகளைச் சொருகி வைத்துவிட்டுப் போய்விடுகின்றனர். ஆனால் கட்சித் தொண்டர்கள் அவ்வாறு செயற்பட மாட்டார்கள் அவர்களிடம் தமது கட்சி மீது பாசமும் பற்றுறுதியும் இருக்கும் என்பதால் அவர்கள் தாம் சந்திப்பவர்களை தமது கட்சிக்கே வாக்களிக்கும்படி தூண்டத் துடிப்பார்கள்.

முகவர்களாகச் செயற்படும் இளைஞர்கள் ஒரு கட்சிக்கு மட்டும் முகவர்களாக இருப்பதில்லை. யார் அதிகம் பணம், குடிவகைகள் ஏனைய வசதிகளை வழங்குகிறார்களோ அவர்களின் பக்கம் தற்காலிமாகச் செயற்படுவர். ஒரு கட்சியிடம் 50 ஆயிரம் ரூபாய் வாங்கிய மறுநாள் இன்னொரு கட்சி 1 லட்சம் ரூபாய் கொடுத்தால் உடனே பக்கம் மாறி நிற்கும் நிலையே இன்று காணப்படுகின்றது.

அண்மையில் ஒரு பாடசாலை மதிலில் கட்சிச் சின்னத்தையும் இலக்கத்தையும் பொறித்த முகவர்களின் செயலைக் கண்டி த்து வேட்பா ளர் ஒருவர் தானே முன்னின்று அந்தப் பாடசாலை மதிலுக்கு வர்ணம் பூசிய சம்பவம் நடந்தது. கட்சியில் தொண்ட ர்கள் இல்லை, முகவ ர்களே இருக்கிறார்கள் என்பதற்கு இது நல்லதொரு உதாரணம். ஏனெனில் தொண்டர்களாக இருந்திருந்தால் அவர்களுக்கு வேட்பாளரின் கொள்கை தெரிந்திருக்கும் முக வர்களுக்கு அது தெரியந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதேபோன்று மற்றொரு கட்சியின் வேட்பாளரது சுவரொட்டிகள் கிளிநொச்சியில் புதிதாகத் திறக்கப்பட்ட அரச கட்டடம் ஒன்றில் ஒட்டப்பட்டதைக் கண்டித்த அதே கட்சியைச் சேர்ந்த அதே வேட்பாளரின் நிறுவனத்தில் முன்னர் பணிபுரிந்த பெண்ணைக் கடுமையான சொற்களால் வாட்டி வதைத்த நபரை இதில் எந்த வகைக்குள் அடக்குவது என்றே தெரியவில்லை. மனித வகைக்குள்ளேயே அடக்க முடியாதது என்றே வகைப்படுத்த வேண்டும்.


பல கட்சிச் சின்னங்கள் முதன்மை வீதிகளில் வரையப்பட்டு மக்களின் கால்களில் மிதிபடும் அளவுக்கு மதிப்பிழந்து போயுள்ளன.

முகவர்கள் ஒவ்வொரு ஊர்களிலும் செயற்பாடுகளில் இறங்கியிருப்பதால் தலைவர்கள் நேரடியாக வருகின்ற கூட்டங்க ளுக்கு இந்த முகவர்கள் நலாபுற மும் இருந்து வந்து குறிப்பிட்ட வேட்பாளரின் பின்னால் ஓர் இளைஞர் படையே நிற்கின்றது என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துகின்றனர். இந்த இளைஞர்களைக் கூட்டம் நடக்கின்ற ஊரவர்களுக்குக்கூடத் தெரிந்திருப்பதில்லை என்பது மற்றொரு சோகம்.

இந்த முகவர் அரசியலானது அரசியல் கட்சிகளையும் மக்களையும் பிரித்து வேறாக்கும் ஒரு நடவடிக்கை. இதனால் மக்கள் குறிப்பிட்ட ஒரு சிலரைக் காட்டி "உவன் இப்ப ஆரோடை நிற்கிறான்'' என்று கேட்கும் நிலையே காணப்படுகின்றது. முன்பெல்லாம் கட்சியின் தொண்டர்களையோ இயக்க உறுப்பினர்களையோ அவ்வாறு மக்கள் கேட்பதில்லை. ஏற்கனவே அவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெளிவாகவே தெரிந்திருக்கும். தொண்டர் அரசியலில் இருந்து முகவர் அரசியலுக்குத் தமிழ்க் கட்சிகள் மாறிக்கொண்டிருப்பது எதிர்காலத்தில் தமிழர்களுக்கு ஜனநாயக அரசியல் பாரம்பரியம் ஒன்று இல்லாது போவதற்கும் வழி வகுக்கும்.

இந்த முகவர்களை ஆயுதப் படைகளும் தென்னிலங்கைப் முதன்மைச் சிங்களக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் கூட இலகுவாகக் கையாள முடியும். கட்சித் தொண்டர்கள் மக்களைக் கட்சியை நோக்கி ஈர்ப்பார்கள். முகவர்கள் மக்களைக் கட்சியில் இருந்து அப்புறப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பர். முகவர்களின் நடையுடை பாவனை மக்களை ஒருபோதும் கவரப்போவதில்லை.

---




**மூளைக்கு வேலை! முடிகிறதா பாருங்கள்!**

எத்தப் பாத்திரம் முதலில் நிரம்பும்?

5

---




தந்தை : சீனாக்காரன் பாம்பு சாப்பிட்டதால கொரோனா எண்டிற வைரஸ் வந்திருக்காமடா மகனே! கவனமாப் பாத்து இருந்துக்கடா!

மகன் : வரட்டுமப்பா பாத்துக்கலாம்!

தந்தை : எடெய் அது சீனாக்காரங்களையே வெண்ட வைரஸாமடா!

மகன் : அப்பா இங்க பாரன்! நான் இந்தக் கீரியச் சுட்டுச் சாப்பிட்டு அந்தப் பாம்பு வைரஸைத் தலைதெறிக்க ஓட விடுறன் பார் உப்ப!





செ.மகேஷ்

# எமது கல்விப் புலம் மாறவேண்டும்!

வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையில் பின்னடைவு காணப்படுகின்றது என்ற கருத்தே இன்று கல்விப் புலத்தில் பரவலாக முன்வைக்கப்படுகின்றது. கல்வியின் பின்னடைவைக் கண்டறிவதற்குக் கல்விப் பிரிவினரும் சரி பொது மக்களும் முகப் புத்தகப் போராளிகளும் பொதுப் பரீட்சைகளையே ஆய்வுக்கு உட்படுத்துகின்றனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை, கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சை ஆகியவற்றில் தோற்றிச் சித்தியடைவோர் தொகையை அடிப்படையாக வைத்தே அதிக அலசல்கள், ஆய்வுகள் வருகின்றன.

அவற்றைத் தொடர்ந்து பல்கலைகழகங்களிலும் கல்வியியற் கல்லூரிகளிலும் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் அனுமதிக்கப்படுவோர் தொகையும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

கல்வி என்றால் என்ன என்பதும் அதனை வழங்கும் கூடங்கள் யாவை என்பதும் பரவலாக அனைவரும் அறிந்த நிலையில் கல்வியின் பின்னடைவிற்குப் பரீட்சைகளால் பெறப்பட்ட முடிவுகளை ஆய்வு செய்து பாடசாலைகளையும் ஆசிரியர்களையும் குறை கூறுவதையே நாம் வழக்கமாகக் கொண்டுள்ளோம்.

தெளிவாகக் கூறுவதானால் இந்தக் குறைகாணல் யாவும் பரீட்சையில் மாணவர் பெற்றுக் கொண்ட சித்தி அல்லது சித்தியின்மை சார்ந்த அளவீடுகளாலேயே கண்டறியப்படுகின்றன.

எமது கல்வித் திட்டமானது திட்டமிடப்பட்ட ஓர் எல்லைக்கு உட்பட்டுப் பல பாடங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ளது. அவற்றைக் கற்பதும் அவற்றில் பாண்டித்தியம் பெற்று விட்டோம் என்பதை நிரூபிக்கப் பரீட்சையில் சித்தியடைவதும் அவசியமாகும்.

இந்தப் பரீட்சைகளில் சித்தியடைவதன் மூலம் நமது மாணவர்கள் பலர் கற்றவர்கள் என்ற அணிக்குள் வந்துவிடுகின்றனர். தொடர்ந்து பல்துறை சார்ந்து கற்றலும் அவற்றுக்கான பரீட்சைகளில் சித்தியடைதலும் பல்வேறு பட்டங்களைப் பெறும் நிலைக்கு அவர்களை உயர்த்துகின்றன.

இதனடிப்படையில் இன்று வடமாகாணத்தில் கற்றவர் தொகையைக் கணிப்பீடு செய்தால் கற்றவர்கள் அநேகர் உள்ளனர் என்ற உண்மை பல வேளைகளில் புலப்படலாம்.

## நழுவுகின்ற நிர்வாக அதிகாரிகள்

கல்வி என்றால் என்ன? ஏன் நாம் கற்கின்றோம்? என்ற கேள்விகளுக்கு இன்றைய மாணவர்களிடமிருந்து பெறக்கூடிய பதில்கள், பரீட்சையில் சித்தியடைதலும் ஒரு தொழிலைப் பெற்றுக் கொள்ளுதலும் என்பனவாகவே அமையும்.

அரசினால் குறித்துரைக்கப்படும் எந்தத் தொழிலைப் பெற்றுக்கொள்வதற்கும் இன்று உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் அவசியமாகும். அவை தவிரத் தனியார் துறையில் தொழில் பெற அத்துறைசார்ந்த திறன்களோடுகூடிய தொழிற்தகைமையுடன் கல்வியும் அவசியமாகின்றது.

இத்தகைய சூழலில் வட மாகாணக் கல்வியின் நிலையில் பின்னடைவு என்ற முடிவுக்கு வரக் காரணர்களாகவும் காரணியாகவும் இனம் காணப்படுபவை ஆசிரிய சமூகமும் பாடசாலைகளும் என்பது வெளிப்படை.

பாடசாலைகளிடத்திலும் ஆசிரியர்களிடத்திலும் குறை காண்பதன் ஊடாக ஏனைய கல்விப்புல நிர்வாக அதிகாரிகளும் அலுவலர்களும் இந்தக் கல்விப் பின்னடை வுக்கான பொறுப்புகளி லும் பழிகளிலும் இருந்து தப்பிச் செல்ல முயலுகிறார்கள்.

கல்வி விருத்திக்காக மாணவரின் நேரடியான தொடர்பிலிருக்கும் பாடசாலைகளினூடாக அதிபரும், ஆசிரியர்களுமே அறியப்பட்டுள்ளனர். அவர்களிடத்தில் வரும் மாணவர்களுக்குப் பொதுப் பரீட்சைகளில் சித்தியடைய விடையெழுதும் பயிற்சிகளையே அவர்கள் வழங்குகின்றனர். இவற்றையே பலரும் கற்றல் கற்பித்தல் என்ற ஆசிரியப் பணிகளாக இனம் கண்டு பாராட்டுகின்றனர். ஒருவன் படித்தவன் என்பதை அவனது நடத்தைகளின் மூலம் அளவிடுகின்ற சமூகம் முன்னர் இருந்தது. இன்று பரீட்சைப் பெறு பேறுகளோடு அவன் கற்றவன் என மனத் திருப்தி கொள்பவர்களாக நாம் மாறிவிட்டோம்.

ஆசிரியர் கல்வி கற்பிக்கிறார் என்பதற்கும் மேலானதாக ஆசிரியர் மாணவரைக் கற்கத் தூண்டுகிறார் என்பதே உண்மையாக இருக்கவேண்டும். கல்வி வாழ்க்கைக்கானது என்பதும் அவற்றைக் கற்கும் ஆர்வத்தை மாணவரிடத்தில் ஏற்படுத்தும் வழிகாட்டலே ஆசிரியப்பணி என்பதும் உணரப்படுவது அவசியமாகும். அத்தகைய உணர்வு கல்விப் புலத்தில் தோன்றாதவரை கல்வியும் வாழ்க்கையும் இணைந்து பயணிக்கப் போவதில்லை.

அத்துடன் ஆசிரியத்துவம் மதிக்கப்படுவதும் கல்வி மேம்படுவதும் அத்துறைசார்ந்த பதவிகளுக்கு நியமனம் பெறுவோரின் நடத்தைகளிலேயும் தங்கியுள்ளது என்பதும் இங்கே கவனிக்கப்பட வேண்டும்.

பாடசாலை மேற்பார்வைக்கெனப் பதவிகளைப் பெற்றுக்கொள்வோர் அப்பதவிகளைப் பெருமைக்காகப் பெற முந்தும் அதேவேளையில் பதவியின் தரம் குன்றாத வகையில் பணியாற்றத் தம்மை அர்ப்பணிப்பவர்களாகும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளவேண்டும். இவர்களின் மேற்பார்வைகள் நடவடிக்கைகள் யாவும் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுக்கத் தூண்டுவனவாகவும் இருத்தல்வேண்டும்.

எங்கும் எவரிடத்திலும் பதவிகளில் உயர்வு தாழ்வு பேணப்பட வேண்டியதில்லை. கல்விப் புலத்தில் ஒருவர் எந்த நிலைப் பதவியைப் பெற்றிருப்பினும் அவர் தமது நடத்தை மூலம் எதிர்கால சமூகத்தி னது கல்வித் தேவையைக் கற்கத் தூண்டும் வழிகாட்டல்களுக்குத் தம்மை ஆட்படுத்துதல் அவசியமாகும்.

## மேலெந்து நிற்கின்ற கேள்விகள்

எமது கல்வி மேம்பாடு சார்ந்த மதிப்பீடுகள் பரீட்சைப் பெறுபேறுகளால் நிர்ணயிக்கப்படுவதால் அவை கற்றவர் நிலையை முழுமையாக இனங்காட்டுகின்றனவா? என்ற கேள்வி மேலெழுந்து நிற்கிறது.

கொலை, களவு, பொய் புரளிகள் அற்ற மக்கள் மேன்மையும் சாதி, சமய முரண்பாடுகள் அற்ற சமூக ஒற்றுமையும் பேணப்படுகிறதா? போதைப் பொருள் பாவ னையை வெறுக்கும் மனப்பாங்கு அழுத்தம் பெறுகிறதா? மாண' புறும் மனிதநேயம் மதிக்கப்படுகிறதா?

கல்விச் சான்றிதழ்ப் பெறுபேறுகளின் உயர்வோடு பதவிகளைப் பெற்றுக் கடமைபுரியும் எத்தனை பேர் நேர்மையானதும் ஊழல்களற்றதுமான பணிகளில் தம்மை இனங்காட்டுகிறார்கள்?

இன்று பரீட்சைகளை நோக்காகக் கொண்ட கல்வியால் பண்புகள் சிதறிய வாழ்க்கைக்குள் மாணவர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)




| Sizes (in Inches) | M | L | XL |
|---|---|---|---|
| Chest | 20 | 21 | 22 |
| Height | 27 | 28 | 29 |

Price: Rs. 1150 (Islandwide Free Delivery for ezcash Payment)

விபரங்களுக்கு அழையுங்கள்: 0769 355 944

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

'யாழ் முற்றம்' - இல: 461, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி உப தபால் நிலையம் அருகில்)




**மூளைக்கு வேலை! முடிகிறதா பாருங்கள்!**

*1990 ஆம் ஆண்டில் 15 வயதை உடைய ஒரு நபர் 1995ஆம் ஆண்டில் 10 வயதுடன் இருக்கிறார். இது எப்படி சாத்தியம்?*

6

# காந்தியின் சாம்பலே கரைக்கப்பெற்ற கீரிமலையில் இன்று....



குமரன்

**1948** ஆம் ஆண்டு மாசி மாதம் 22 ஆம் திகதி. கொழும்பிலிருந்து மெல்ல மெல்ல ஊர்ந்து யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த வெள்ளிப் பேழையைத் தாங்கிய வாகனத்துக்கு மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அந்த வாகனம் நீர்கொழும்பு, வவுனியா நகரங்களைக் கடந்த பொழுதுகளில் வீதிகளில் கூடியிருந்த பல நூற்றுக் கணக்கான மக்கள் மலர்களைத் தூவி அந்தக் வாகனத்துக்கு அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்தார்கள்.

அந்த வாகனத்தின் உள்ளே இந்தியத் தூதுவர் அமர்ந்திருந்தார். அது ஒரு வெள்ளிக்கிழமை. அந்த வாகனம் அடுத்தநாள் சனிக்கிழமை சாவகச்சேரியை வந்தடைந்திருந்தது. வாகனத்தில் இருந்த வெள்ளிப் பேழை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் வைக்கப்பட்டிருந்த சமயத்திலும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அதற்கு அஞ்சலி செலுத்தினார்கள்.





அன்று மாலை ஊர்வலமாக ரதத்தில் ஏற்றப்பட்ட அந்தப் பேழைக்கு அரியாலையில் மக்கள் அஞ்சலி செலுத்தினர். அங்கிருந்து யாழ். செயலகம் (அன்று கச்சேரி) வரை திருமுறைகள் பாடியவண்ணம் அந்த வாகனத்தை மக்கள் பின் தொடர்ந்தனர். கச்சேரி வாசலில் வெள்ளிப் பேழை இறக்கப்பட்டு அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.பொன்னம்பலத்திடம் கையளிக்கப்பட்டது.

அப்போதைய யாழ். நகரசபைத் தலைவர் க.பொன்னம்பலத்திடம் நகரசபை வாயிலில் வைத்து அதனைக் கையளித்தார் ஜி.ஜி. நகரசபையில் விசேட பந்தலில் அந்தப் பேழை வைக்கப்பட்டது. பொது மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினார்கள். ஞாயிறு காலை காங்கேசன்துறை வீதியால் நீண்ட ஊர்வலம் கீரிமலையை நோக்கிப் புறப்பட்டது.

அந்த வெள்ளிப் பேழையில் இந்தியாவின் தன்னிகரற்ற தலைவரான மகாத்மா எனப்படும் கரம்சந்த் காந்தியின் அஸ்தி இருந்தது.

ஊர்வலம் கீரிமலையை அடைந்து பின் மக்களின் ஓசைக்கு மத்தியில் கடலில் அந்த அஸ்தி கரைக்கப்பட்டது.

காந்தி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த போது அவரைக் கீரிமலைக்கும் அழைத்துச் சென்று அதன் புகழ் குறித்துத் தெரிவித்திருக்கிறார்கள். அப்போது, தனது சாம்பலையும் (அஸ்தி) இந்தப் புனித தீர்த்தக்கரையில் கரைக்க வேண்டும் என்று அவர் கேட்டிருக்கிறார்.

அவரது அந்த விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலேயே இந்தியாவில் இருந்து எடுத்துவரப்பட்ட அவரது பிடிச் சாம்பல் கீரிமலையில் கரைக்கப்பட்டது.

கண்டகி என்னும் பிறப்பின் வினைகளைத் தீர்க்கும் புனித தீர்த்தம் கீரிமலையில் கலப்பதே அதன் சிறப்பு என்பார் ஆறு. திருமுருகன்.

அத்தகைய பெருமையும் சிறப்பும் மிக்க கீரிமலையில் இம்முறை இந்து ஆன்மாக்களை நினைவுகூரும் ஆடி அமாவாசை விரதத் தினத்தில் நிகழ்வுகள் வழக்கம் போலன்றி சிக்கலானவையாக இருந்தன.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாகக் கெடுபிடிகள் அதிகம் இருந்தன.

அலைமோதும் பல்லாயிரக்கணக்கானவர்களின் பங்குபற்றுதலுடன் பிதிர் கடன் நிறைவேற்றுவதற்குப் பிரசித்தி பெற்ற கீரிமலைக் கடற்கரையே அல்லோலகல்லோலப் பட்டிருக்க வேண்டிய நிலையில், அலைகள்கூட அடங்கிப்போய் இருந்தது என்றால் அது இம்முறைதான். அந்தளவுக்குச் சன நடமாட்டம் கரைந்து போய் இருந்தது.

கொரோனாவையொட்டி இம்முறை பல விதிமுறைகள் அறிவிக்கப்பட்டிருந்தன.

- பிதிர்க்கடன்களை நிறைவேற்ற வருபவர் மாத்திரமே கடற்கரைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் ஏனையோரை அழைத்து வருவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.
- வலிகாமம் வடக்குப் பிரதேச சபையில் அனுமதிபெற்ற குருமார்கள் மட்டுமே கடற்கரையில் உரிய சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாகத் கடமைகளை நிறை வேற்றிக் கொடுக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.
- கடற்கரையைச் சூழவுள்ள பகுதிகளில் வியாபாரங்கள் தடைசெய்யப்பட்டிருந்தன
- கடமைகளை நிறைவேற்ற வருபவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகப் பதிவினை மேற்கொள்வதுடன் முக்கவசம் அணிந்து வருவதும் கட்டாயமாக்கப்பட்டது.
- வருகை தருபவர்கள் கடற்கரைக்குள் நுழைவதற்கு முன்னர் வெப்பப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

வந்தவர்கள் பசியாற வழக்கம்போல அன்னதான வசதிகள் இல்லை, தாகம் தீர்ப்பதற்குத் தாகசாந்தி நிலையங்கள் இல்லை. இத்தனைக்கும் சுட்டெரிக்கும் வெயிலுக்கு மத்தியில் பலராலும் முடியாமல் போய் விட்டதென்பதே உண்மை.

இந்த நடைமுறைகள் காரணமாக வீட்டில் நீராடிவிட்டு அருகிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று தானம் வழங்கியவர்கள் பலர். மேலும், ஒரு முறை போனால் போகட்டும் அடுத்தமுறை பார்த்துக்கொள்ளலாம் எனத் தங்களைத் தாங்களே தேற்றிக்கொண்டு வீட்டில் இருந்தவர்கள் அவர்களை விடவும் அதிகம்.

ஆனால், தெற்கில் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச கலந்துகொள்ளும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் இத்தகைய எந்தக் கெடுபிடிகளும் இன்றி ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்கிறார்கள் என்பதைத் தலைமை அமைச்சர் செயலகம் விடுக்கும் ஒளிப் படங்களைப் பார்த்தாலே புரியும்.

ஆன்மாக்களே மன்னித்துக்கொள்ளுங்கள்!

---

12 x 12 = 9

23 x 23 = 16

34 x 34 = ?

**மூளைக்கு வேலை! முடிகிறதா பாருங்கள்!**

*கேள்விக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய இலக்கம் யாது?*

7

# நலம்வாழ எந்நாளும்....

## வல்லமையின் பெயர் வல்லாரை!

மருத்துவர் - கந்தையா சோதிதாசன்

*மெல்ல வரும் நதியலைபோல் நடையுடையாய்*
*'வல்லாரை'' போல் நல்ல பொருள் உலகில்*
*கண்டதுண்டோ*
*புத்தி தரும், புலமை மிகும்*
*வயிற்றுப் புண் நீக்கும், பித்தம் தெளிவாக்கும்*
*நித்தம் அருந்த மேனி பள பளக்கும்*
*இரத்தமதை வலுவாக்கி இதம் செய்யும்*
*எள் எண்ணையிட்டுக் காய்ச்சி*
*தலை முழுகக் கண் குளிரும்*
*கருங்கூந்தல் காடாகும் நல்லவளே!*
*வல்லாரை வல்லமையின் பேர்!*

**விளக்கவுரை:**
மெல்ல அசைகின்ற நதிபோல நடையுடைய பெண்னே! வல்லாரைக் கீரைபோன்ற நல்லதொரு கீரையைக் கண்டிருக்கிறாயா? இதைச் சமைத்து உண்ண ஞாபக சக்தி பெருகி அறிவு வளரும். இதனால் வயிற்றுப் புண் நீங்கும். பித்த நோய்கள் நிவர்த்தியாகும். தோலுக்குப் பள பளப்பைத் தருவதோடு குருதிச் சோகையை நீக்கும். இதை நல்லெண்ணையில் இட்டுக் காய்ச்சிப் பெறுகின்ற வல்லாரைத் தைலத்தைத் தலையில் தேய்த்தால் கண்ணுக்கு நல்ல குளிர்ச்சி தரும், கூந்தல் நீண்டு வளரும். வல்லாரை என்பது வலிமையானதொரு மருத்துவ மூலிகையாகும்.




# மன்னார் கடற்படுக்கை அகழ்வும் பாதிப்பும்!

மன்னார் தீவுப் படுக்கைகளில் பெறுமதி மிக்க டைட்டேனியம் கனிய மணல் படிவுகள் கண்டறியப்பட்டுள்ளன. அங்குள்ள கனிய மணலின் ஏற்றுமதி மூலம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 2.9 சதவீதத்தைப் பெறமுடியலாம் என ஆஸ்திரேலியக் கனிய மணல் நிறுவனம் கூறுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் அகழ்வுப் பணிகளை மேற்படி நிறுவனம் 2010ஆம் ஆண்டில் இருந்து 2014ஆம் ஆண்டு வரை மேற்கொண்டது. அதைத் தற்போது மீளவும் மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

மன்னார் கடலோரத்தில் மணல் படிவுகள் பாக்கு நீரிணையின் நீரோட்டத்தால் ஏற்படுபவை. இவை காலநிலை மாற்றத்தால் ஏற்படும் கடல் மட்ட அதிகரிப்பால் மன்னார்த் தீவுகள் பாதிக்கப்படாமல் இருக்க உதவுகின்றன.



மன்னார் தீபகற்பத்தில் சுமார் 166 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பும் கனிய மணல் அகழ்வுக்காகத் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தால் சமூகப் பாதிப்பு ஏராளம் ஏற்படும். சூழலியல் ரீதியில் அகழ்வுப் பணிகளால் காற்று மாசடையும். இதனால் மன்னார் நகரம் மற்றும் பேசாலை, தலைமன்னார் ஆகிய இடங்களில் வாழும் மக்களும் பாதிப்படைவர்.

அடுத்து அகழ்வுப் பணியால் கடற்சாகியம் அழிக்கப்படும். இந்த அகழ்வுப் பணியால் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இராமர் அணையின் எச்சங்களான திட்டுக்களும் அழிக்கப்படும். அடுத்து மன்னார் மாவட்டம் கனிய மணல் ஏற்றுமதி வர்த்தக வலயமாக மாற அங்கு வாழும் பாரம்பரியத் தமிழ் மக்கள் கட்டாய இடப்பெயர்வுக்கு ஆளாவர். இது தமிழர்களின் தாயக அடையாளத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

- யாழ். ஆனந்தன்


உங்களுக்கு தேவையான பொருட்களினை
வீட்டிலிருந்தே பெற்றுக்கொள்ள




Semba Store



077 4 11 44 22

551A கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்



# புதிய கருத்துருவாக்கியின் தேவை!

வி.அருணாசலம்

ரஷ்யாவின் புகழ் பூத்த தலைவர்களில் ஒருவரான மிக்கெய்ல் கெர்பஷேவ் முதல் தடவையாக அமெரிக்காவுக்குச் சென்றபோது அமெரிக்க மக்களிடம் அவர் பற்றி இருந்த கருத்துருவாக்கம் "சிவப்புப் பரவப் போகிறது" (கொமினிசம் பரவப் போகிறது) என்பது தான். அதுவரை அமெரிக்கத் தலைவர்களது கருத்துகளும் ஊடகங்களின் கருத்துருவாக்கமும் அவ்வாறு தான் அமெரிக்க மக்களை நினைக்க வைத்திருந்தன.





அப்போது அமெரிக்காவின் அதிபராக றோனால்ட்றீகன் இருந்தார். இரண்டு தலைவர்களும் அமெரிக்க மக்களைச் சந்திக்கவிருந்த மேடைக்குக் கார்களில் சென்றார்கள். றீகனின் கார் முதலிலும் மிக்கெய்ல் கெர்பஷேவ் பயணித்த கார் இரண்டாவதாகவும் சென்றபோது மேடைக்கு 100 மீற்றர் முன்னதாகவே மிக்கெய்ல் கெர்பஷேவ் காரில் இருந்து இறங்கி அருகில் நின்ற அமெரிக்க மக்களுக்குத் தனது இரு கரங்களையும் கொடுத்து அவர்களைச் சிநேகப்படுத்தினார். அதுவரை அமெரிக்க மக்கள் மத்தியில் ரஷ்யா பற்றியிருந்த எண்ணம் இதன் மூலம் தவிடுபொடியாகியது. தமது தலைவரான றீகன் போன்ற தலைவர்கள் இவ்வாறு தம்முடன் நடந்து கொள்ள மாட்டார்களா என்று அமெரிக்க மக்கள் ஏங்கத் தொடங்கினார்கள்.




"புன்னகை ராஜ தந்திரி" என வர்ணிக்கப்பட்ட மிக்கெய்ல் கெர்பஷேவ் உலகெங்கும் தனது புன்னகையால் புதிய கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தியவர்.

ஊடகங்களால் மிக நீண்ட காலமாக உருவாக்கப்படும் கருத்துருவாக்கம்கூட ஒரு சில சந்தர்ப்பங்களில் தனிமனித செயற்பாடுகளால் மாறிவிட வாய்ப்புண்டு.

இலங்கையைப் பொறுத்தவரை 70 ஆண்டுகளுக்கு மேல் அரசியல் நடத்தி வந்த தமிழ்த் தலைவர்களுக்கும் அவர்கள் சார் ஊடகங்களுக்கும் இன்றைய சமூக வலைத்தளங்களின் செயற்பாடு பெரும் சவாலாக அமைந்துவிட்டது. "உலை வாயை மூடலாம் ஊர்வாயை மூட முடியாது" என்ற பழமொழி சமூக வலைத்தளங்களுக்கு நன்கு பொருந்துவதாக உள்ளது.

பலர் தமது சொந்தப் பெயரில் முகநூல்களை ஆரம்பித்து அவர்கள் சந்தித்த எதிர்வினை காரணமாக அதை முடக்கிவிட்டு ஓடிய சம்பவங்களும் நடந்தேறியுள்ளன. பலர் தமது முகநூலில் பலரை எதிரிகளாக அடையாளம் கண்டு நீக்கியும் வருகின்றனர்.

"ஒரு தலை யோசிப்பதைவிட இரண்டு தலைகள் இணைந்து யோசிப்பது மேன்மையானது" என்ற கருத்து ஆங்கிலத்தில் உள்ளது. அபோல சமூக வலைதளங்கள் மூலம் ஒரு விடயத்தில் சாதகமானதும் பாதகமானதுமான கருத்துகள் பகிரப்பட்டாலும் அந்த விடயம் தொடர்பில் இதுவரை அறிந்திராத பல விடயங்கள் ஓரிடத்தில் வந்து குவிகின்றன என்பது சிறப்பான வசதிதான். சமூக வலைத்தளங்கள் தமது கருத்துகளை உறுதிப்படுத்துவதற்காக காணொலிகள், ஒலி வடிவங்கள், ஒளிப்படங்கள், அச்சு வெளியீடுகள் எனப் பலவற்றை மக்கள் பார்வைக்கு முன்வைப்பது சிறப்பானது.

பல ஊடகங்கள் பக்கச்சார்பாக நடந்தவாறு தம்மை அசைக்கமுடியாது என்று நினைத்த இடங்களில் எல்லாம் சமூக ஊடகங்கள் நுழைந்து அவற்றைக் கடுமையான கேள்விக்கு உட்படுத்துகின்றன. எப்போதோ அவர்கள் வெளியிட்ட கருத்துக்களைக் கொண்டே, அவர்களுக்கு எதிரான ஆதாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. அதாவது, ஒரு வகையில் அவர்களின் கெட்ட இறந்த காலங்கள் நிகழ் காலத்தில் பழி வாங்குகின்றன.

இதன் மற்றொரு சாதகமான நீட்சி என்னவென்றால் தமிழரிடம் மட்டும் முன்னர் பகிரப்பட்ட பல விடயங்கள் தற்போது தென்னிலங்கைச் சிங்கள ஊடகங்களிலும் பேசுபொருளாக மாறியிருக்கின்றன. சிங்களத் தொலைக்காட்சி அலைவரிசைகளான ஹிரு, அத தெரண ஆகிய ஊடகங்கள் சிங்கள மக்கள் மத்தியில் கருத்துருவாக்கத்தை ஏற்படுத்துவதில் முன்னணியில் உள்ளன.

இவ்விரு தொலைக்காட்சிச் சேவைகளும் அதிபர் கோத்தாபயவின் வெற்றிக்கு அதிகம் பங்களித்தவை.

சிங்கள மொழியில் 20க்கு மேற்பட்ட பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவற்றை வைத்து தெரண தொலைக்காட்சியில் சதுர என்பவரால் நடத்தப்படும் பத்திரி கைக் கண்ணோட்டம் மிகவும் சக்தி மிக்க ஒன்றாகக் காணப்படுகின்றது. தமிழ் ஊடகங்கள் அந்த அளவுக்கு முன்னேறுவதற்கு அதிக காலம் எடுக்கும் அல்லது அதை எட்டமுடியாமலும் போகலாம். தமிழ்த் தொலைக்காட்சி ஊடகங்கள் தமிழ் உச்சரிப்பைச் சரியாகப் பழக வேண்டிய பாலர் படிநிலையிலேயே தற்போதும் உள்ளன என்பது கவலைக்கிடமானது. பத்திரிகைகளைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் வால்கள் அல்லது ஊதுகுழல்கள். எனவே இந்த இடைவெளியை நிரப்புவதற்கு ஒரு தளம் நிச்சயம் தேவை.

தமிழ் ஊடகங்களின் குறைபாட்டை சமூக வலைத்தளங்கள் பலரது கூட்டு முயற்சியாக நிவர்த்தி செய்ய முனை கின்றன. இதன் மூலம் தமிழர் மத்தியில் ஒரு கருத்துருவாக்கம் ஏற்பட்டுள்ளது என் பதை மறுப்பதற்கில்லை. அதேநேரத்தில் விதண்டாவாதமும், நக்கல் நளினங்களும் எள்ளல் பேச்சுக்களும் நிறைந்ததாகவும் அது காணப்படுகின்றது. "கலாய்த்தல்" என்கிற தமிழகப் பதத்தால் குறிப்பிடும் அல்லது புரிந்துகொள்ளப்படும் இந்த நிலையைத் தாண்டி சமூக ஊடகங்களின் உரையாடல்கள் நகருமாயின் அவை தமிழ் மக்களின் மிகச் சிறந்த கருத்துருவாக்கிகளாக மாறமுடியும்.

---

# மிளகு ரசம்



கடந்த வாரம் தேசி - இஞ்சி ரசம் செய்து பார்த்திருப்பீர்கள். எமது மூதாதையர்கள் கடந்த காலங்களில் தமது அன்றாட உணவுகளில் வறை மற்றும் ரசம் என்கிற இரண்டு உணவு வகைகளைச் சேர்க்கத் தவறியதில்லை. இந்த வகையில் இந்த முறை தேசி - இஞ்சி ரசத்திலிருந்து சற்று வேறு பட்ட மிளகு ரசம் குறித்துப் பார்ப் போம்.

**இந்த ரசத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்கள்:**

மிளகு, உள்ளி, மஞ்சள் ஆகியவையே இந்த ரசத்துக்குத் தேவையான முக்கிய பொருள்கள். இவற்றுடன் வேறு சில பொருள்களையும் சேர்த்தே இந்த ரசம் தயாரிக்கப்படுகிறது. அந்த வகையில், கரைத்த புளி 2 மேசைக்கரண்டியளவு, தக்காளிப்பழம் - 1, கறிவேப்பிலை சிறிதளவு, மிளகு - 2 தேக்கரண்டி, உள்ளி - 6 பற்கள், செத்தல் மிளகாய் - 3, சீரகம் - 1 தேக்கரண்டி, பெருங்காயத்தூள் - அரைத் தேக்கரண்டி, கொத்தமல்லி சிறிதளவு, உப்பு தேவையான அளவு, மஞ்சள் - அரைத் தேக்கரண்டி, கடுகு- 1 தேக்கரண்டி, எண்ணெய்- 1 தேக்கரண்டி.

**எப்படிச் செய்வது?**

முதலில் கொத்தமல்லியைப் பொடியாக்கி, தக்காளிப்பழத்தை வெட்டுங்கள். செத்தல் மிளகாய், மிளகு, சீரகம், உள்ளி, கறிவேப்பிலை(எடுத்ததில் அரைவாசி) ஆகியவற்றை எண்ணெய் சேர்க்காமல் வறுத்து ஆறியதும் அவற்றைக் சொர சொரப்பாக அரைத்துக் கொள்ளுங்கள். ஒரு சட்டியை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய் ஊற்றிச் சூடானதும் வெட்டிய தக்காளி மற்றும் மீதமுள்ள கறிவேப்பிலை, மஞ் சள் மற்றும் சிறிது உப்புச் சேர்த்து 5 நிமிடங்கள் அதை வதக்கவும். சொர சொரப்பாக அரைத்தெடுத்த பொருள்களை இதனுடன் சேர்த்து நன்கு வதக்கவும். புளிக் கரைசலுடன் இரண்டு கப் தண்ணீர் சேர்க்கவும், இப்போது அடுப்பில் நெருப்பைக் குறைத்து, சட்டியை மூடி வைத்து 2 நிமிடங்கள் வரை கொதிக்க விடவும். பின்னர் அடுப்பிலிருந்து இறக்கிக் கொத்தமல்லியைச் சேர்க்கவும். தேவைப்பட்டால், சிறியள வில் மிளகு தூள் சேர்க்கலாம். இந்த ரசத்தை அதிக நேரம் அடுப்பில் கொதிக்க விடக் கூடாது. இப்போது பருகுங்கள் ரசம் ருசிக்கும்.

# நாரதர் விளையாட்டு

மானிப்பாய் சுதன்




தம்பி இன்றைக்கு கிராமம் கிராமமாக பரப்புரைக்கு போகவேணும் நீங்களும் எங்களோடு வரவேணும், கட்டுறதுக்கு வேட்டி இருக்குத்தானே? இல்லாட்டில், இங்க இருக்கிறதொண்டைக் கட்டிக்கொண்டு வாங்கோ

பல வருடங்களாகப் பூட்டி இருந்த, அந்த வீடு சில நாள்களாகக் களைகட்டியிருக்கின்றது. வாகனங்கள் வருவதும்போவதுமாக இருந்தன. அங்கு அதிகம் பேர் இல்லை. ஆனாலும் வாகனங்களின் நடமாட்டம் தாறுமாறு.

வந்துபோவோரில் பலரும், புதிதாக மணவறைக்கு வேட்டிகட்டி வரும் மாப்பிள்ளைகள் போலவே காணப்பட்டனர். அவர்கள் வேட்டி கட்டியிருந்தனர். ஆனால் சாதாரணமாகவோ அல்லது பாரம்பரிய விழாக்களுக்காகவோ அவர்கள் நிச்சயமாக அடிக்கடி வேட்டி கட்டியவர்களில்லை.

இவர்களுக்கு அள்ளக்கையாக நடிக்கத்தான் நான் அழைக்கப்பட்டிருக்கின்றேன்.

அங்கிருந்தவர்களில் முக்கியமானவராகத் தெரிந்தவர்களில் எவரும் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களில்லை என்பது ஒரு பார்வையிலேயே தெரிந்துவிடும். ஆனாலும் அவர்கள் பேச்சில் யாழ்ப்பாணம், தாயகம், தேசியம்.... எனப் பல சொற்கள் வந்து விழுந்துகொண்டிருந்தன.

"ஆ..... வாடா தம்பி, யார் அனுப்பினது?" கூட்டத்தில் இருந்த ஒருவர் கேட்க, "மணியரசன் அனுப்பிவிட்டவர்" என்று நான்கூற, "வாங்கோ.... வாங்கோ அண்ணை!" என்றவர், மற்றவர்களுக்கு ஆங்கிலத்தில் சொன்னார், "இவர் யார் தெரியுமே? எங்கட தலைவரோட ஒன்றாக இருந்தவர். இப்ப கொஞ்சம் கஸ்ரப்படுறார். அதுதான் எங்களோட கொஞ்ச நாளைக்கு வேலைக்கு வரச்சொன்னனான்."

"வெளியில் இருந்து வாற காசில சம்பளம் கொடுக்கலாம்தானே. இந்தாளின்ர படத்தை அனுப்பினாலே காசு அனுப்ப அங்க கனபேர் இருக்கினம். நாங்களும் ஏதோ செய்தம் எண்டும் காட்டலாம்." ஆங்கிலத்தில் அவர் தொடர்ந்தார்.

வன்னியிலேயே உழன்றதால் எனக்கு ஆங்கிலம் புரிவதற்கு வாப்பேயில்லை என்று அவர்களாகவே முடிவு கட்டிக்கொண்டார்கள். நான் அதைக் குலைக்க விரும்பவில்லை.

"ஏன் அண்ணை! நல்ல விசயத்துக்குப் போகும்போது கடவுளைக் கும்பிட்டு போகிறது நல்லந்தானே?" என்றேன் வெள்ளந்தியாக. "நீங்கள் வைரவவரைக் கும்பிட்டால், பிறகு நாங்கள் மத சார்பான கட்சி என்று சொல்லிப்போடுவாங்கள், பிறகு கிறிஸ்தவர்களின் வாக்குகள் கிடைக்காது.

"தம்பி இருங்கோ! கொஞ்ச நாளைக்கு எங்களோட இந்த வீட்டிலேயே இருங்கோ, நாங்கள் கொஞ்சம் வேலைச் சுமையில் இருக்கிறதால, வீட்டை நீங்தான் கவனிக்கவேணும். சாப்பாடு எல்லாம் நாங்கதாறம். நீங்க வீட்டைப் பாருங்கோ நாங்க நாட்டைப் பார்க்கின்றோம்" என்றார் என்பக்கம் திரும்பி. நான் மனதிற்குள் சிரித்துக் கொண்டேன், நாட்டைப் பார்க்கப் போகிறார்களாம், எந்த நாடு தஞ்சம் புகுந்த நாடா? வந்து நிற்கிற நாடா? கபோதிகள்!

"குறைநினைக்கக்கூடாது, தெரியுந்தானே பழைய நிலமைகள் இப்ப இல்லை, எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான், நாங்க வென்றால், உங்கட இலட்சியம் வென்ற மாதிரிதானே? இப்ப ஜெனீவா கன்ரீன் வரைக்கும் போய் வருகிற நாங்கள், பிறகு உள்ளுக்குள் போய் சர்வதேசத்தின் உதவியோட....., உங்களுக்கு எல்லாம் விளங்குந் தானே?" என்றார்.

என் மனதுக்குள் அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல், அவர்கள் என்னிடம் எதை எதிர் பார்க்கின்றார்கள் என்று தெரிந்ததால் வீட்டைத் துப்பரவாக்கத் தொடங்கி னேன். முன்னரும் ஒரு வீட்டை துப்பரவாக்கி கொடுத்தது. அது வேறு துப்பரவு. இது வேறு துப்பரவு.

"தம்பி ஒரு நாலு தேநீர் கொண்டாடாப்பா!" குரலில் அதிகாரம் பறந்தது. தேநீரைக்கொண்டு வந்த போது முன்கோலில் வந்திருந்த ஒருவர், "துரையண்ணை! என்ன இப்படி?" என்றார் ஆச்சரியம் தாளாமல். "நீங்க அங்க இருக்கேக்க நான் உங்களைச் சந்திச்சனான் ஞாபகம் இருக்குதோ?" அவரது ஆச்சரியம் கலந்த மரியாதை சுற்றியிருந்தவர்களுக்குள் ஒரு பதற்றத்தை எழுப்புவதை என்னால் உணர முடிந்தது.

என்னைப் பற்றி வந்திருந்தவர் உயர்வாக நினைத்து மரியாதை செய்வதைக் கண்டதும் வேட்டிக்காரர், "தம்பி தான் இப்ப முழு ஆதரவும், இரவிரவா இருந்து கதைப்பம், தம்பி சொல்லுற விடயங்களை வைச்சுத்தான், அடுத்த நாள் எங்கடை களப்பணி தொடரும். நீங்க துரையென்றே சொல்லுகிறனீங்க! நாங்கள் தம்பி என்றே கூப்பிட்டுப் பழகிப் போச்சு" என்று சமாளித்தார்.

நானும் சிரித்தே மழுப்பிவிட்டு உள்ளே சென்று மறைந்து கொண்டேன்.

இரவிரவாக "சூமில்", "வைபர் கோலில்" வெளிநாட்டுக் காரரிடம் காசு வேண்டுவதற்காக அவர்கள் சொல்லும் லூசுத்தனமான விடயங்களுக் கெல்லாம் தலையாட்டுவது, எனக்கெல்லவோ தெரியும். சண்டை நேரம் ஊரை விட்டுட்டு ஓடினதெல்லாம் சமூகவலைத் தளங்களிலும் தேசிய வடைசுடல் போட்டி போடுறதை இரவில் பார்த்தால் நிச்சயமாக தூக்குப் போட்டுச் சாகவேணும்போல் தோன்றும். மனது பொறுக்கமுடியாமல் பொருமிக் கொண்டிருந்தது. "இந்தக் கறுமத்தையெல்லாம் பாக்க வைச்ச...." கோபம் மண்டையைச் சூடாக்கியது.

"தம்பி இன்றைக்குக் கிராமம் கிராமமாகப் பரப்புரைக்குப் போகவேணும் நீங்களும் எங்களோடு வரவேணும், கட்டுறதுக்கு வேட்டி இருக்குத்தானே? இல்லாட்டில், இங்க இருக்கிற தொண்டைக் கட்டிக்கொண்டு வாங்கோ" பெருங்குரலில் சத்தம் வந்தது. அவர்களின் தேசிய அமைப்பாளர் எனப்படுபவரின் கட்டளை அது.

எனக்கோ இன்றைக்கு என்னை வைத்து என்ன கூத்துக்காட்டப்போகிறாங்களோ தெரியாது என்று பதற்றமாக இருந்தது. ஒரு மாதிரி வேட்டியைக் கட்டிக்கொண்டு வெளிக்கிடும் போது வீதி முகப்பில் இருந்த வைரவரை கும்பிடுவம் என்று கையைத் தூக்க, "தம்பி கும்பிட வேண்டாம் அப்படியே திரும்பு" என்றார்கள்.

"ஏன் அண்ணை! நல்ல விசயத்துக்குப் போகும் போது கடவுளைக் கும்பிட்டு போகிறது நல்லந்தானே?" என்றேன் வெள்ளந்தியாக. "நீங்கள் வைரவரைக் கும்பிட்டால், பிறகு நாங்கள் மதச் சார்பான கட்சி என்று சொல்லிப் போடுவாங்கள், பிறகு கிறிஸ்தவர்களின் வாக்குகள் கிடைக்காது."

"ஏன் அண்ணை! தமிழ்த் தேசியம் என்றால் தமிழர்களின் பாரம்பரியம் அதற்குள்ள அடங்காதோ, தமிழர்களின் பாரம்பரிய மத அடையாளம் சைவம்தானே? போர்த்துக் கேயர், ஒல்லாந்தார், ஆங்கிலேயர் போன்ற அந்நியர்தானே வேற்று மதத்தை பர்ப்பினவை? அந்தக் காலத்தில தமிழர் மத்தியில இரகசிய மாகப் பிரபலமடைந்ததுதானே வைரவர் வழிபாடு, இது தமிழ் கிறிஸ்தவர்களுக்கும் தெரியுந்தானே? அவர்கள் ஏன் பிழையாக நினக்கப்போகினம்? அவர்களே தற்போது தமிழர்களின் பல சமய பாரம்பரியங்களைக் கடைப் பிடிக்கேக்க அவை ஏன் கோபிக்கப் போகினம்?"

தேசிய அமைப்பாளர் பெரிதாகச் சிரித்தார். "தம்பிக்கு ஒண்டும் விளங்கேல்லை!" என்றார். "வாக்குகள் வராது எண்டது மட்டுமில்லை பூகோள மயமாக்கலில் எங்கட சமயத்தை வெளிநாட்டுக்காரரும் விரும்பமாட்டினம். அத்தோட எங்களுக்குச் காசு தருகிறவங்க பெரும்பாலும் வெளிநாடுகளில் மதம் மாறித்தான் வாழுகினம். இஞ்ச வைரவரைக் கும்பிடறது தெரிஞ்சால் பிறகு பணமும் வராது" அவர் நீட்டி முழக்கி விளக்கினார்.

ஓ.... இதுவும் தமிழ்தேசியத்துக்கான தியாகம்தானோ என்று நினைத்தபடியே, "அப்ப மதம் சார்பாக ஒன்றும் செய்யமாட்டியளோ அண்ணை?" கேட்டேன். "ஏன் செய்யமாட்டம், ஒரு இரண்டு ஆயரிட்டையும், ஒரு இரண்டு கந்தன், வடிவேலன் போன்ற சாமிகளிட்டயும் போய் ரெண்டு மூன்று சந்திப்புக்களை மேற்கொண்டால் சர்வமத ரீதியான சந்திப்பா எல்லோருக்கும் காட்டிப்போடலாம்."

அதுக்குப் பிறகு நான் பேசவில்லை. வாயை மூடிக்கொண்டேன். நிகழ்ச்சி முடிந்து வீட்டுக்குத் திரும்பியதும் ஒரே சண்டை, என்னுடைய பெயரை முன்னிலைப்படுத்தவில்லை, அவர் தன்ர பெயரை முன்னிலைப்படுத்துறார் என்று ஒரே கத்தலும் கூச்சலும்.

திடீரென்று ஒருத்தன் எழும்பிக் கத்தினான், "தலைவர் நீங்க இதைக் கவனிக்காட்டி எனக்கு வேற வழியில்லை, நான் ஒரு மாம்பழக் கூடையோடு கிளம்பிடுவன்" அவன் எழும்பியே விட்டான்.

கிறுகிறுத்துப்போன தலைவர் திரும்பக் கத்தினார், "ஏன்டா அப்பம்தானே கொடுக்கிறவங்கள், நீ என்னடா மாம்பழம் என்று சொல்லுகின்றாய்? அது நாரதர் விளையாட்டெல்லோ?"

"அப்பம் எல்லாம் பழைய தேர்தல் கதை தலை! இப்ப மாம்பழம்தான் ரெண்ட்....." என்று சொல்லி கெக்கேபிக்கே எனச் சிரித்தான் ஒருவன்.

எனக்குத் தலைசுற்றியது, போங்கடா நீங்களும் உங்கட தேசியமும் என்றவாறு வேட்டியைக் கழற்றி வீசிவிட்டு கோ...... துடன் புறப்பட்டேன். ■



## மூளைக்கு வேலை! முடிகிறதா பாருங்கள்!

உங்கள் பெற்றோருக்கு உங்களையும் சேர்த்து ஆறு மகன்கள் ஒவ்வொரு மகனுக்கும் ஒரு சகோதரி உண்டு என்றால் குடும்பத்தில் எத்தனை பேர்?

8

செம்மண்



# கண்டுகொள்ளப்படாமல் போன ஒரு இலக்கிய கர்த்தா!



காயா

"சுதந்திரனிலை 15, 16 கதையள் வந்தது. கண்ணூறு, கழிவிரக்கம் ஆகிய கதைகளுக்கு ஆசிரியக் குறிப்பும் எழுதி நல்லமாரிப் போட்டிருந்தவை. என்ரை முதலாவது சிறுகதைத் தொகுப்பு அகதி அரசி. 2010இல வெளிவந்தது. அந்தப் புத்தகத்தின்ர பிரதி என்னட்ட ஒண்டும் இல்லாமப் போச்சுது.

*அதியுயர் பாதுகாப்பு வலயத்தில்... இருந்தவேளையில்... குண்டுகளின் அதிர்வினால்... எனது செவிப்புலனுக்கு ஏற்பட்டுக்கொண்ட பாதிப்பினால்... செல்போன் பவனை முற்றாகத் துண்டிக்கப்பட்டு விட்டது... இந்தத் தற்காலிக முகவரியைத் தொடர்புக்கு வைத்துக் கொள்ளுங்கள்.*

*வணக்கம்!*

இவ்வாறான முற்குறிப்புடன் அடுத்தடுத்து வந்த ஒருவகைப் பாணியிலமைந்த சிறுகதைகள், அவற்றை எழுதியவர் குறித்த தேடலுக்கு என்னை உந்தின. எனது தேடல் தொல்புரத்திலுள்ள சிவபூமி முதியோர் காப்பகத்தில் சென்று நிறைவுபெற்றது.

"தையிட்டிலை தையிட்டி கிழக்கிலை 1938இலை பிறந்தன். என்ர ஏஜ்...? (யோசிக்கிறார்) ஏஜ் இப்ப ஞாபமா இருக்கும். பதினாறு வருசம் காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்திலை இருந்தன். இருந்த வீடு இப்ப தரைமட்டமாக் கிடக்கு. தையிட்டிப் பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்திலை'' என்று தனது கதையைத் தொடங்கினார். அவருடைய செவிப்புலன் குறைபாட்டால் உரத்த சத்தம்கொண்டு அவருடன் உரையாட வேண்டியிருக்கிறது.

இந்தச் சமூகத்தைப் பற்றிச் சிந்தித்த ஒரு மனிதன், இன்று தனிமையில் யாருமற்று ஒரு பராமரிப்பு இல்லத் தின் துணையோடு ஊசலாடுவதை நன்மை என்றா தீமை என்றா கடப் பது என்று தெரியவில்லை.

"தையிட்டி கணேசா வித்தியசாலையில மூண்டாம் ஆண்டு வரைக்கும் படிச்சனான். பிறகு நடேஸ்வராக் கல்லூரியிலை அஞ்சாம் வகுப்புப் படிச்சன். சாதாரண தரம் வரைக்கும் படிச்சனான். கலைப்பேரரசு ஏ.டி. பொன்னுத்துரை மாஸ்ரர் எண்டு சொல்லி... அவர் என்னோடை நல்ல மாதிரி. என்னைக் கொண்டு நாடகம் அதுகள், இதுகள் எல்லாம் எழுதுவிச்சார். கதைப் புத்தகங்கள், கல்கி, ஆனந்த விகடன் எல்லாம் தந்து வாசிக்கப் பழக்கினார். பேப்பர்கள் கொண்டு வந்து வாசிக்கத் தருவார். நல்ல உதவியாளர். நான் நடிக்காவிட்டாலும் நாடகங்கள் கனக்க அவருக்கு எழுதிக் குடுத்தனான். சினிமாவிலும் சரியான மோகம் இருந்தது. பிறகுதான் திசைமாறிச் சிறுகதை எழுத ஆரம்பிச்சன். அறுபதுகளிலை எழுதத் துவங்கினான். பேப்பரிலை முதலாவது கதை வந்தது. முப்பதாவது முட்டாள் எண்ட கதை அது."

மங்கிப்போய் தடுமாறும் ஞாபகங்களில் இருந்து கோர்வையாக ஒரு மாலையைத் தயாரிக்க முயற்சிக்கிறார் அந்த எழுத்தாளர் தையிட்டி அ.இராசதுரை. கடந்த வருடம் வரையில் பத்தி ரிகைகளுக்கு கதைகள் எழுதிக் கொண்டிருந்தவர். இப்போது முதுமையும் வாசிப்பு சரக்குகள் மீதான முடக்கமும் அவரைக் கட்டிப் போட்டிருக்கின்றன. ஆனால், எழுதும் துடிப்பு இன்னும் விட்டுவிடவில்லை. "செம்மண் பத்திரிகைக்கும் ஒரு கதை தாறன்" என்கிறார்.

"வீரகேசரியிலை சில கதைகள் வந்தன. ஈழநாடு, நமது ஈழநாடு, முரசொலி, ஈழமுரசு எல்லாத்திலையும் என்ர கதையள் வந்தது. நூறு கதையளுக்கு மேலை எழுதியிருக்கிறன். ஏராளமானதை இழந்தும் போனன். ஈழநாடுப் பத்திரிகை என்ர கதையளுக்கு முக்கியத்துவம் குடுத்துப் போட்டது. 26, 27 கதையள் வரை ஈழநாட்டிலை வந்தது. பேந்து சுதந்திரனிலை 15, 16 கதையள் வந்தது. கண்ணூறு, கழிவிரக்கம் ஆகிய கதைகளுக்கு ஆசிரியக் குறிப்பும் எழுதி நல்லமாரிப் போட்டிருந்த வை. என்ரை முதலாவது சிறுகதைத் தொகுப்பு அகதி அரசி. 2010இல வெளிவந்தது. அந்தப் புத்தகத்தின்ர பிரதி எண்னட்ட ஒண்டும் இல்லாமப் போச்சுது. அந்தப் புத்தகத்த ஆறு. திருமுருகனாக்கள்தான் வெளியிட்டவை" குளறுபடிகளான ஞாபகங்களின் இடுக்கிலிருந்து கோர்வைகளையும் தொடர்ச்சிகளையும் பிடிப் து அவருக்குச் சிரமமாகத்தான் இருக்கின்றது.

தெல்லிப்பளை வைத்தியசாலைக்குப் பக்கத்திலை உள்ள அன்பு இல்லம் என்ற காப்பகத்தில்தான் நீண்ட காலமாகத் தங்கியிருந்தார் இராசதுரை. கடந்த சில மாதங்களாகத்தான் இந்த இல்லத்துக்கு மாறியிருக்கிறார். அந்த இல்லத்தை மூடி விட்டார்கள் என்பதே காரணம்.

அங்கே அவருக்கு அதிகம் தனிமை கிடைத்தது. எழுதவும் முடிந்தது. "நான் இங்கையிருந்து றிலீஸ் ஆகிப் பழைய படியும் அந்தப் பக்கம் போவம் எண்டு தானிருக்கிறன். எழுத்து வேலைகளைச் சரியாகப் பார்க்க முடியுதில்லை. ஒண்டும் எழுத முடியாமலிருக்குது. பத்திரிகையளைப் பார்க்க முடியேல்ல. எதுவும் வாசிக்கக் கிடைக்குதில்லை. அந்த இடம் எழுத்து வேலையளுக்குப் பொருத்தமா இருந்தது" என்கிறார்.

பேச்சை நிறுத்தினார். எழுத்துலகும், உறவுலகும் இல்லையென்றாகிவிட்ட தனது நிலை குறித்துச் சிந்திக்கிறார் போலத் தெரிந்தது. வானத்தை வெறித்துப் பார்த்தார்.

() () () ()

1960 தொடக்கம் 1970ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஈழத்துச் சிறுகதையாசியர்களாகத் தம்மை இனங்காட்டி நிற்பவர்களெனச் செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன், செ.கதிர்காமநாதன், க.பரராஜசிங்கம், குந்தவை, சிதம்பர பத்மினி, அங்கையன், பெனடிக்ற் பாலன், கே.எஸ்.சிவகுமாரன், து.வைத்திலிங்கம், மு.கனகராசன், என்.எஸ். எம் ராமையா, மு.பொன்னம்பலம், முனியப்பதாசன், தையிட்டி அ. இராசதுரை, தெளிவத்தை யோசப், பூரணி, ஆரையம்பதி ஆ.தங்கராசா, பா.பாலேஸ்வரி முதலானோர் வரிசைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள் ஏற்கனவே.

"விமர்சகர்களின் கவனத்தை அதிகம் கவராத கனதியான சிறுகதை எழுத்தாளன் தையிட்டி அ. இராசதுரை. இவருடைய சிறுகதைத் தொகுதி ஒன்று வெளிவரில், ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் நிரல்படுத்தக்கூடிய பத்துச் சிறுகதை ஆசிரி யர்களுள் ஒருவராக வந்துவிடுவார். கண்ணாடி, கொந்தல், சமநீதி, மான் பாய்ந்த வெளி, ஒளிமயமான தீபம், கோச்சி வரும் கவனம், அம்மாவின் பெயர் அம்மா, குழாயடிச் சண்டை, தவிலும் தாளமும், கிழிந்த நோட்டுச் செல்லும், எழுத்தறிவித்தவன் இறை வன், அவன் பெயர் மிருதங்கம், இரவல், அகதி அரசி, பாராட்டு, மின்சாரமும் சம்சாரமும், கொழும்புக்கு ஒரு கடிதம் கொடுத்துவிட்டேன், இதுக்கெல்லாம் ஐயா, வெள்ளிக் கிழமை, வெள் ளைப்பூனை, கண்ணூறு, கழிவிரக்கம், மானம், பொற்கோவில், அடித்த கை என்பன தையிட்டி அ. இராசதுரையின் படைப்புகளாம். யாழ்ப்பாணச் சமூகத்தின் துணுக்கமான குடும்பத்து உறவின் கலாசார விழுமியங்களைத் தையிட்டி அ. இராசதுரை மிக அற்புதமாகத் தனது சிறுகதைகளில் சித்திரித்துள்ளார். குடும்பப் பூசல்கள், உறவுகளின் இறுக்கங்கள், தாய்ப் பாசம், வேலிச் சண்டை சச்சரவுகள், மூட நம்பிக்கைகள், நம்பிக்கை மோசடி, தாய்மையின் பெருமை முதலான சமூக வியல்புகளை வைத்து இந்தச் சமூகம் எப்படியிருக்க வேண்டும் என்ற சமூகச் செய்தியைக் கதைகளினூடாகப் பெய்து எழுதியுள்ளார். அவரது கதைகளில் பேச்சுவழக்கு மிக நுட்பமாகக் கொள்ளப்பட்டிருக்கும். மெல்லிய நகைச் சுவை கதைகளினூடே விரவிக் கிடக்கும். சிறுகதைகளைப் படித்து முடித்ததும் மனதில் எஞ்சி நிற்கின்ற உணர்ச்சி நிலை குறிப்பிடத்தக்க நல்ல சிறுகதைகளுக்கோரியது. அடித்த கை, எழுத்தறிவித்தவன் இறைவன் - நல்ல தரமான சிறுகதைகள்."




செங்கை ஆழியான் என்று அறியப்படுகின்ற கலாநிதி கா.குணராசா 2001ஆம் ஆண்டில் வெளியிட்ட ஈழத்துச் சிறுகதை வரலாறு என்கிற நூலில் தையிட்டி அ.இராசதுரையைப் பற்றி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# மின்னூல்கள் ஓர் அறிமுகம்

■ கோண்டாவிலூர்
மாதவி சர்மா



நமது அன்றாடவாழ்வில் பெருமளவு வேலைகளை இலகுவாக்குவதற்காகவும், நேரத்தை மீதப்படுத்துவதற்காகவும் இணைய வசதியையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துகின்றோம்.

உலகெங்கும் புத்தகப் பிரியர்களாலும் மாணவர்களாலும் மின்னூல்களும் மின் பத்திரிகைகளும் இன்று பெரிதும் விரும்பப்படுகின்றன. நாம் இன்று அதிக அளவில் பயன்படுத்தும் புத்தகங்கள் தாளில் அச்சிட்டு கட்டுமானம் செய்து தயாரிக்கப்பட்டு வருகின்றன. அந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள செய்திகளைக் கணினி உதவியுடன் தட்டச்சு செய்து இணையத்தில் அல்லது தொலைபேசியில் பார்க்கக்கூடியதாக வெளியிடப் படுபவையே மின் புத்தகங்கள். குறுந்தட்டு வடிவில் சேமித்து வைக்கப்படுபவையும் மின்புத்தகங்களாகக் கருதப்படுகின்றன.

கட்டற்றக் கலைக் களஞ்சியமான விக்கிபீடியாவை ஒரு பெரிய மின்னூல் களஞ்சியமாகக் கருதலாம்.

ஓர் இணையத்தள உருவாக்கத்துக்குப் பயன்படும் அதே தொழில் நுட்பங்களைக் கொண்டே இந்த வகை மின்னூல்களும் உருவாக்கப் படுகின்றன. இணையத்தில் தமிழ் மின்னூல்களைப் பதிவேற்றும் திட்டங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டபோதிலும், இலங்கையில் சில ஆண்டுகளுக்கு முன்பே நூலக நிறுவனம், சுவடிகள் நிறுவனம் ஆகியவை ஆயிரக்கணக்கான தமிழ் நூல்களை இணையத்தில் பதிப்பிக்கத் தொடங்கிவிட்டன. வர்த்தகம் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்கு இவை இலவசமே.

இணையத் தொழில்நுட்பம் என்பதால் எந்தவிதக் கணினிகளிலும் இந்த மின்னூல்களை வாசிக்கலாம். ஒருங்குறி எழுத்துரு தரத்திலான தமிழ் எழுத்துரு மற்றும் உலாவி இருந்தாலே போதும். விண்டோஸ், லினக்ஸ் கணினிகளில் இந்த இரண்டும் உள்ளன. தமிழ் மின்னூல்களைப் படிக்கும் வாய்ப்பு இந்தக் கணினிகளில் இயல்பாகவே உள்ளது. தாளில் அச்சிடப்பட்ட புத்தகத்தைப் புரட்டுவதைப் போன்ற உணர்வு, படங்களையும் எழுத்து வரிகளையும் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு நகர்த்துதல், அருஞ் சொற்களைத் தெரிவுசெய்து அவற்றுக்கான பொருளை இன்னொரு இடத்தில் காணுதல், குறிப்பிட்ட சொற்கள் வரும் பக்கங்களைத் தேடுதல் முதலிய பல வசதிகளை இணைய அமைப்பிலான மின்னூல்களில் சேர்க்கலாம்.

உலகின் எப்பாகத்தில் இருந்தும் எந்த மொழியிலும் நூல்களை வாசித்தறிய முடியும். தேவையான மின்னூல்களை மின்வணிகம் ஊடாகவும் பெற்றுப் பயனடைய முடியும். அமேசன் போன்ற உலகப் புகழ்பெற்ற இணையத் தளங்களில் இப்போது தமிழ் மின் நூல்களையும் வாங்கிக்கொள்ள முடியும்.

அச்சிடப்பட்ட நூல்களை நாம் கடைகளுக்கு நேரில் சென்றே வாங்க வேண்டிய சூழ்நிலையே உள்ளது. ஆனால் மின் புத்தகங்களைத் தேவையான எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு இடத்திலிருந்தும் உடனே தரவிறக்கம் செய்துகொள்ள முடியும். மின் புத்தகங்களில் உள்ள தகவல்களை ஆவணமாக நீண்ட காலம் பயன்படுத்தவும் முடியும். அச்சிடப்பட்ட நூல்கள் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு சிதைந்து விடுகின்றன.

ஆனால் மின் புத்தகங்களின் ஆயுள் காலம் பன் மடங்கு நீடிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இப்படி பல வசதிகள் இருந்த போதிலும் நூல்களுக்கான காப்புரிமை பெறுதல், இணைய வசதி இல்லாதபோது தரவிறக்கம் செய்திருந்தால் மட்டுமே படிக்க முடிதல், தரவுத்திருட்டுப் போன்ற சில குறைகள் இந்த வசதியில் இருக்கத்தான் செய்கின்றன. எதிர்காலத்தில் இதையும் நிவர்த்திசெய்யக் கூடிய வாய்ப்புகள் உருவாகலாம். இருப்பினும் காலத்தோடு ஒத்தோட நாம் பழகிக்கொள்ள வேண்டியதும் மிக அவசியம்தானே! ■

# வெட்டியான்

மதியம் பன்னிரெண்டுமணிவரைக்கும்
அவன் மூன்று புதைகுழிகளை
வெட்டி முடித்திருந்தான்

உடல் வியர்வை பெருக்கெடுக்க
சோர்ந்து அமர்ந்திருந்தான் வெட்டியான்
அவன் இருதயம் பலமான ஓசைகொண்டு
துடித்துக்கொண்டிருந்தது

அன்று மட்டும் அவன் ஏழு புதைகுழிகளை
வெட்டியாகவேண்டும்
அந்த நகரத்தின் மகாமாசாணம் அது
நிஷப்தபூமியாகக் கிடந்த மயானம்
பெருநகரத்தின் மையப்பாத்திரமாய் மாறியிருந்தது

பூமி கொள்ளைநோய் அச்சத்தில்
பெரும் கல்லாய் இறுகிக் கிடந்தது
வானுயர்ந்த கட்டடங்களில் சுதந்திரமாய்
பறவைகள் கூடு கட்ட ஆரம்பித்தன

வீட்டிற்குப் போய் பல வாரங்கள் கடந்திருந்தது
அம்மா தங்கை மனைவி பிள்ளைகளுடன்
பேசும் மன அமைதியை இழந்திருந்தான்
ஒவ்வொரு நாளும் சவப்பெட்டிகளைக் குழிக்குள்
போட்டு மூடும் போதும் தன் ஆன்மா
மண்ணுக்குள் புதையுண்டு போவதாய் நடுங்கினான்

ஒவ்வொரு சவப்பெட்டியினையும் சவக்கிடங்கில்
இருத்தி மண்ணை நிறைத்து மூடிவிட்டு
நிதானமாய் புதைகுழி மேல் மலர்களை வைத்து
குனிந்து முத்தமிடுவான்

அவன் புதைத்து விடுவது யாரகவேண்டுமானாலும்
இருக்கலாம் அங்கு சவப்பெட்டி நீக்கி இறுதி முகம்பார்க்கும்
எந்தச் சடங்கும் இருப்பதில்லை

கண்நனைந்தபடியே ஒருவருக்குச் சொன்னான்
என் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும்கூட
நான் சவக்கிடங்கு தோண்டியிருக்கலாம்
ஒவ்வொரு புதைகுழிக்குள்ளும் என் ஆத்மாவையும்
கண்ணீரினையும் அவர்களுக்குத் துணையாய்
போட்டு மூடிவிடுகின்றேன்.

-நேதா நெடுந்தீவ.

லயன் காமிக்ஸ் முத்து காமிக்ஸ்
Lion Comics & Muthu Comics

உங்கள் மனங்கவர்ந்த
காமிக்ஸ் புத்தகங்கள்!
இலங்கையிலும்
விற்பனையாகின்றன!




யாழ்ப்பாணத்தில்
பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்

கொழும்பில்
பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி,
பம்பலப்பிட்டி

தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944

https://www.facebook.com/tamilcomics/

லயன், முத்து காமிக்ஸ் குழும வெளியீடுகளை அனுமதியின்றி அச்சுவடிவிலோ மின்னிதழ் வடிவிலோ விற்பனை செய்தல், பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள் காப்புரிமைச் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்! – வெளியீட்டாளர்

## எமது கல்விப்புலம்...

சிக்குண்டுள்ளனர். படித்தவன் என்பதற்கு ஆதாரமாக அவன் பெற்றிருக்கும் கல்விச்சான்றிதழ் அவனது நடத்தைகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இன்றைய கல்விப் பின்னடைவிற்கும் எமது சமூக முரண்பாடுகளுக்கும் சண்டை சச்சரவுகளுக்கும் இந்தப் பரீட்சைகளால் மதிப்பிடப்படும் கல்விப் பெறுபேறுகளின் வீழ்ச்சியும் உயர்ச்சியும் காரணங்களாகக் கொள்ளப்படும் சாத்தியங்கள் உள்ளனவா?

பாடசாலைகள் தமது மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடைய வேண்டும் என்பதில் காண்பிக்கும் அக்கறையையும் ஆர்வத்தையும் எமது சமூக நலத்திற்கும் அவர்தம் நல்லொழுக்க எழுச்சிக்கும் வழிகாட்டுவதிலும் முன்னெடுத்தல் விரும்பப்படுவதாகும்.

கற்றவர்களைக் கொண்ட ஒரு சமூகம் சான்றிதழ்களால் மாத்திரம் தம்மைப் பெருமைப்படுத்தும் நிலையிலிருந்து அவர்தம் நற்குண நற்பண்புகளால் மாகாணத்தைப் பெருமைப்படுத்த வேண்டும். அதற்கேற்ற வகையில் எமது கல்விப்புலம் மாற்றம் பெற வேண்டும்.

## கைவிட்டுப்போகும்...

சொன்னது உண்மைதான். கொரோனா வந்தவுடன அதச் சாப்பிடத் தொடங்கினதாலதான் விலை விக்குதாக்கும் எண்டு நினைச்சன். ஆனா அதில்லக் காரணம். லவ்பேர்ட்ஸ் வளக்கிறவை இதை அடிபட்டுத் தேடித் திரிஞ்சு வாங்குகினமாம். அதுதான் உந்த விலை. வெளிநாட்டில இருந்து சாமை வாறது நிண்டுபோனதால விலை ஏறிட்டிது. இப்ப வெத்திலை சப்புற ஆக்கள் குறைஞ்சு போச்சினம். வெத்திலையச் சப்புங்கோ எண்டும் சொல்லேலாது. சப்புற ஆக்கள விட கோவிலுகள், கொண்டாட்டங்கள், விசேசங்கள் ஒண்டும் இப்ப இல்லத்தானே. அப்ப எப்பிடி வெத்திலய விக்க ஏலும்? சளியள் சில சில வருத்தங்களுக்கு வெத்தில மருந்துதான். இருந்தாலும் அதிகம் சப்பக்கூடாது. சாமைச் செய்கையும் பெரிய கஸ்ரமெண்டில்ல. சாமைய நாத்தாவும் புடுங்கி நடலாம். விதைக்கலாம். நாத்தப் புடுங்கி நடுறது கொஞ்சம் பிரச்சின. விதைச்சா நல்லா வேர் ஓடும். அதால விதைச்சுப்போட்டு விதைச்சு அடுத்த நாள் விட்டு அடுத்த நாள்... மூண்டாம் நாள்... ஒரு இறைப்பு இறைக்கிறது. பிறகு ஏழாம் நாள் அல்லாட்டி ஒன்பதாம் நாள் இன்னொரு இறைப்பு இறைச்சாச் சரியாக் கிடக்கு''

வெற்றிலைக் கொடிகளை நாட்டியுள்ள ஒரு புறத்தில் சாமை பயிரிட்டிருந்தார் சிதம்பரநாதன். அதைச் சுட்டிக்காட்டிப்பேசியபோதே சாமை மூலம் தற்காலத்தில் அதிகளவு வருமானம் தனக்குக் கிடைப்பதாகத் தெரிவித்தார். வெற்றிலையின் விலை, அதற்குரிய சந்தை வாய்ப்பு, அந்தச் செய்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி என்கின்ற பல காரணங்களாலே சிதம்பரநாதன் மாற்றுப் பயிருக்கு மாறி வருகின்றமையை அவருடைய பேச்சுகளில் இருந்து உணர முடிந்தது.

## கண்டுகொள்ளாமல்...

நித்திய, வழக்கம்போல்... பழகின பழக்கம்போல்... விடியப்பறம் கண்ணுக்கிருட்டோடையே... வெளிக்குப் போட்டு, வந்து விட்ட, நல்லசிவம்... ஒரு, பீடியை, கட்டுப்பிரித்தெடுத்து, வாயில் வாஞ்சையுடன் வைத்து, பற்றவைத்து... அந்தப், பனிக்குளிர், நேரத்துக்குப் புகை, புகையாய் விடத் தொடங்கி.... மனதாலும் உடம் பாலும்... ஜொலி பண்ணிக்கொண்டி ருந்தார்.

நித்திய வழக்கம்போல்.... பழகின பழக்கம்போல்... நல்லாய், நிலம், வெளித்த பிற்பாடு, மளமளவென்று, படுத்தபாயைச் சுருட்டியடித்துக் கொண்டே எழும்பியும் விட்ட, அபி ராமி... "இஞ்சரப்பா... இண்டையில், சமையலுக்கு ஒரு விறகுக் காந்தலுமல்லோ... இல்லையாம்...! தேத்தண்ணியடுப்புக்குத்தான், நாலுதடி அருக்கி நுருக்கிக் கிடக்கு...?" என்றவாறாய்... நித்தி ரையாலெழும்பின, வீச்சில்... கரி சனையாக பீடி, குடித்து 'என்ஜோய்' பண்ணிக்கொண்டிருந்த, கணவன், நல்லசிவத்தின் காதுகள் நிறையச் சொல்லிவிட்ட கணக்காய்...

"இந்த மானிடமே விறகுமாகி...?" என்ற தையிட்டியின் பிற்காலச் சிறு கதையின் ஆரம்பப் பகுதி இது. அவருடைய எழுத்துநடை உதாரணத்துக்காக.

() () () ()

எழுத்தாளர்கள் என்ற போர்வை யிலிருப்பவர்களும், எழுத்தாளர்கள் என்ற தகுதி நிலையை எட்டியவர்களும், அரச வேலையோடு பகுதி நேரமாக எழுதுபவர்களும், சமூக வலைத்தளங்களில் எழுத்தை வரிக்கப்படாத பாடுபடும் பலரும் அதிகரித்த தற்காலத்தில் தொகுப்புகள் என்ற பெயரில் பல சங்கதிகள் அடுத்தடுத்து வெளிவருகின்றன.

இராசதுரையினுடைய சிறுகதைத் தொகுதி ஒன்று வெளிவரில், ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் நிரல்படுத் தக்கூடிய பத்துச் சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவராக அவர் வந்துவிடுவார் என்று 2001ஆம் ஆண் டில் செங்கை ஆழியான் சொல்லிக் கிட்டத்தட்ட பத்து வருடங்கள் கழித்தே 1960களில் எழுதத் தொடங்கிய இராசதுரையின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு வந்திருக்கிறது. இன்றுள்ள இலக்கிய உலகுக்குத் தொலைவாகவும் எழுத்துலகில் உச்சம் தொட்டும் நிற்கின்ற தையிட்டி அ.இராசதுரை சமூகத்துக்கு எவ்வளவு முன்னுதாரணம். அவர் எவராலும் உச்சரிக்கப்படாமலிருப்பதும் எழுத்துலகத்தால் கண்டு கொள்ளப்படா மலிருப்பதும் வேத னைக்குரியதன்றி வேறென்ன?


KUDIL PRODUCT
ECO-FRIENDLY

கமுகு மடல் தட்டுக்கள்
விற்பனைக்கு


12" - Rs.360 - 12 தட்டுக்கள்
10" - Rs.300 - 12 தட்டுக்கள்
08" - Rs.240 - 12 தட்டுக்கள்
06" - Rs.192 - 12 தட்டுக்கள்

மேலும்
தொடர்புகளுக்கு
No. 74/1, A35, Visvamadu.
kudilproduct@gmail.com
+94 71 7777 559



# சுயாட்சி அதிகாரத்தை அடகு வைத்துவிட்ட யாழ். பல்கலைக் கழகம்

■ அன்னலிங்கம் ஆதிரையன்



## தனது இளம் புலமையாளரை இழக்கின்றது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறையின் முன்னாள் தலைவரும், முதுநிலை விரிவுரையாளருமாகிய கலாநிதி குமாரவடிவேல் குருபரன் தனது விரிவுரையாளர் பதவியில் இருந்து விலகிக்கொள்வதற்கான முன்னறிவித்தலை விடுத்திருக்கிறார். கடந்த வாரத்தில் ஊடகங்களில் அதிகம் பேசு பொருளானது இந்த விடயம். இளம் புலமையாளராகவும், மொழியாளுமை கொண்ட பேச்சாளராகவும் திகழ்பவர் குருபரன். அப்படிப்பட்ட ஒரு ஆளுமையை - புலமைச் சொத்தைப் பல்கலைக்கழகம் இழப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்பது பல தரப்பட்டவர்களினதும் கவலையாக இருக்கின்றது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், தமிழ் மக்கள் பேரவையினர் மற்றும் சில அரசியல்வாதிகள் ஆகியோர் இந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர். சமூக ஊடகங்களிலும் பலரும் இதே போன்ற கருத்துக்களைப் பதிவிட்டுள்ளனர்.

### பின்னணி

குருபரன் சட்டத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றி வந்த அதே சமயத்தில் நீதிமன்றங்களில் வழக்குகளுக்காக முற்பட்டும் வந்தார். பல சமயங்களில் பொது ஆர்வத்தை ஏற்படுத்தும் வழக்குகளிலும் சில சமயங்களில் தனிப்பட்ட நபர்களினதும் அமைப்புகளினதும் வழக்குகளிலும் அவர் நீதிமன்றத்தில் வாதாடி வந்தார்.

இதற்கான அனுமதி சுமார் 10 வருடங்களுக்கு முன்பே, தான் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இணைந்துகொண்ட சிறிது காலத்திலேயே பல்கலைக்கழகப் பேரவையால் தனக்கு வழங்கப்பட்டிருந்தது என்று அவர் தெரிவிக்கிறார்.

1998ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சமயத்தில் நாவற்குழிப் பகுதியில் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்ட பின்னர் ஒருபோதும் வீடு திரும்பாத சிலரின் உறவினர்கள் சார்பான வழக்குகளுக்காகவும் ஒரு சட்டத்தரணியாக குருபரன் நீதிமன்றங்களில் வாதாடினார்.

அவர் இந்த வழக்குகளில் நாட்டம் காட்டியதை அடுத்து இராணுவத் தலைமையகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு எழுதிய கடிதத்தில் குருபரன் இவ்வாறு விரிவுரையாளர் பணியையும் சட்டத் தரணிப் பணியையும் ஒரே சமயத்தில் மேற்கொள்வது குறித்துக் கேள்வி எழுப்பியது.

இதையடுத்து அவரை சட்டத்தரணியாகப் பயிற்சி எடுப்பதிலிருந்து விலகியிருக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவைக்கு, தனது சுற்றறிக்கைகளை மேற்கோள்காட்டி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பரிந்துரைக் கடிதம் எழுதியிருந்தது.




### பல்கலைக்கழகப் பேரவை செய்தது சரியா?

இதில் தொடங்கிய பிணக்கே, சிக்கலே குருபரன் தனது விரிவுரையாளர் பணியிலிருந்து விலகுவதற்கான முன்னறிவித்தல் கடிதத்தைக் கொடுப்பது வரையில் இப்போது முன்னேறியிருக்கிறது.

இந்தப் பிரச்சினையில் ஆளுமை மிக்க இளம் விரிவுரையாளர் ஒருவரைப் பல்கலைக்கழகம் இழக்கப் போகின்றது என்பது ஒருபுறம் இருக்க, இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் தொடர்பான தீர்மானங்களை இயற்றும் - நடைமுறைப்படுத் தும் அதியுயர் அதிகாரத்தைக் கொண்ட அமைப்பான பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு சட்டத்தின்படி கலாநிதி கு.குருபரன் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றும் அதே சமயத்தில் சட்டத்தரணியாகவும் பணியாற்ற முடியாது என்று அறிவித்தமையை மறுப்பேதுமின்றி யாழ்ப்பாணப் பல்க லைக்கழகம் அப்படியே ஏற்றது சரியா பிழையா? என்ற விவாதம் மிக முக்கியமானது.

குருபரன் வெளியேறப் போவதாக அறிவித்திருப்பது குறித்து இதுவரையில் பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்களும் பொது அமைப்புக்கள் ஒருசிலவும் சமூக ஊடகங்களில் தனிநபர்கள் பலரும் குரல்கொடுக்கிறார்களே தவிர, பல் கலைக்கழக கல்விசார் ஊழியர்களிடம் இருந்து அத்தகைய ஆதரவுக் குரல் மேலெழவில்லை என்பது இங்கு மிக முக்கியமானது.

ஒரு சட்டத்துறை விரிவுரையாளராகத் தனக்கு வேண்டிய செயல்முறை அறிவைப் பெறுவ தற்காகத் தான் நீதி மன்றங்களில் வழக்காடப் போவது மிக அவசியமானது என்று குருபரன் கூறுகின்ற அதே வேளையில் அத்தகையதொரு நடவடிக்கை, மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகளை மீறி செய்யப்படவேண்டுமென்ப தில்லை என்று பல்கலைக்கழக கல்வியியலாளர்களில் பலரும் கருதுகிறார்கள் என்பதும் கவனிக்கப்பட வேண்டியது.

இந்தக் கருத்துத் தான் குருபரன் விடயத்தில் பல்கலைக்கழகப் பேரவையின் முடிவிலும் எதிரொலித்தது. எதிர்காலச் சந்ததியை பலப்படுத்துவதற்கு வழி செய்யாமல் வழக்கம் போல உணர்ச்சி அரசியலுக்கூடாக குறுங்கால லாபமீட்டுவதிலேயே பல்கலைக்கழகப் பேரவை கவனம் கொண்டிருந்தது என்றே இது விடயத்தில் கருத வேண்டியுள்ளது.

குருபரன் வெளிப்படையாகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியின் ஆதரவாளர் என்பதும் கொழும்பில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பரிந்துரையையும் பரிசீலித்து நியமிக்கப்பட்ட பேரவையே பல்கலைக்கழகத்தில் பதவியில் இருக்கின்றது என்பதையும் கூட இணைத்துப் பார்க்காமல் புறந்தள்ளி விட முடியாது இந்த விடயத்தில்.

### மானிய ஆணைக்குழுவின் முடிவு

எப்படியிருப்பினும் யாழ். பல்கலைக் கழகம் பேரவையின் முடிவு அதன் சுயாட்சி அதிகாரத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அடகு வைத்ததாக இருந்ததா என்பதே இப்போது எழுந்துள்ள சர்ச்சை. பேரவை தனது சுயாட்சி அதிகாரத்தை இது விட யத்தில் அடகு வைத்துவிட்டது என்றுதான் குருபரன் குற்றஞ்சாட்டு கின்றார்.

இருப்பினும், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் சட்டத்தரணிகளான விரிவுரையாளர்கள் சம காலத்தில் விரிவுரையாளராகவும், சட்டத்தரணியாகவும் பணியாற்ற முடியாது என்ற முடிவு மானியங்கள் ஆணைக்குழுவால் கலாநிதி குருபரனுக்காக எடுக்கப்பட்டதொரு முடிவல்ல. 2013 ஆம் ஆண்டிலேயே இத்தகையதொரு சர்ச்சை எழுப்பப்பட்டு, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தாபனப் பணிப்பாளரிடம் பெற்றுக் கொண்ட ஆலோசனையின் அடிப்படையில் கல்வி சார் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஒருவர் சட்டத்தரணியாகப் பணியாற்ற முடியாது என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ரி.ஜெயசிங்கம் என்பவரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைப் பரிசீலித்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு இது விடயத்தில் தெளிவொன்றைத் தருமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தாபனப் பணிப்பாளரிடம் கேட்டுக் கொண்டதற்கமைய, கல்வி சார் பணியில் உள்ள சட்டத்தரணிகள் தமது வேலை நேரத்தில் - விரிவுரையாளராகக் கடமையாற்றும் சம காலத்தில் - சட்டத்தரணிகளாகச் செயற்பட முடியாது என்றும் நொத்தாரிசுகளாக மட்டும் செயற்பட முடியும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகப் பேரவையின் அனுமதியுடன்தான் அவ்வாறு நொத்தாரிசுகளாகச் செயற்பட

முடியும் என்றும், அதுகூடப் பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்றும் 21.11.2013 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 885ஆவது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கும் அறிவிக்கப்பட்டது. ஆயினும், இந்த முடிவு ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

கலாநிதி கு.குருபரன் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டு, சட்டத்தரணியாகப் பணியாற்றுவதற்கான அனுமதியை 2011ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையிடம் இருந்து பெற்றுக் கொண்டிருந்தார்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் நிர்வாக நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தொகுத்து வெளியிடப்பட்டிருந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கத்தின் கீழ் கட்டணங்களைப் பெற்றுக் கொள்ளாமல், மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில், இளநிலை சட்டத்தரணியாகக் கடமையாற்றுவதற்கு 29.10.2011 அன்று நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 362ஆவது பேரவைக் கூட்டத்தில் அந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

### இராணுவத்தின் தலையீடு

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி இராணுவத் தலைமையகத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அதில், "யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன், போதனை சார் அலுவலராக உள்ள நிலையில் நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதற்கும் அனுமதி உண்டா? அவர் இராணுவத்தினருக்கு எதிராக நீதிமன்றங்களில் முன்னிலையாகின்றார்" என்று கேட்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதம் கிடைத்த அன்றைய தினமே அவசர அவசரமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரிக்கு கடித மொன்றை அனுப்பியது. அதில் "யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன், போதனைசார் அலுவலராக உள்ள நிலையில் நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதற்கும் அனுமதி பெற்றுள்ளாரா என்பது தொடர்பில் இலங்கை இராணுவத்தால் கோரப்பட்டுள்ளது. அதற்கான அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்கவேண்டும்" என்று கேட்கப்பட்டது.

பல்கலைக்கழக ஸ்தாபன விதிக் கோவை 8 ஆம் பிரிவின் கீழ் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதற்கு, அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தகுதி வாய்ந்த அதிகாரியால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பதிலளிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரியின் பதில் கடிதம் மற்றும் இலங்கை இராணுவத்தால் வழங்கப்பட்ட கடிதம் என்பன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடந்த செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிய அமர்வில் முன்வைக்கப்பட்டன.

அவை தொடர்பில் நடவடிக்கை எடுத்து கலாநிதி குமாரவடிவேல் குருபரனை நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதைத் தடை செய்வது என்றும் அவர் பிரசித்த நொத்தாரிசு பணியை முன்னெடுக்க அனுமதியளிப்பது என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் இந்தத் தீர்மானம் குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதன் 10/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் சகல பல்கலைக்கழகங்களுக்கும் அறிவித்தது.

### சுயாட்சி அதிகாரத்தைத் தாரை வார்த்த பல்கலைக்கழகம்

இந்த இடத்தில்தான் கலாநிதி குருபரன் விடயத்தில் பல்கலைக்கழகப் பேரவை தன்னுடைய சுயாதிபத்தியத்தை இழக்கத் தொடங்குகியது. (கடந்த பல வருடங்களாக யாழ். பல்கலைக்கழகம் தனது சுயாதிபத்தியத்தைக் காக்கத் தவறி வந்திருக்கிறது ஒரு சிலரின் சுயநலன்களுக்காக என்றபோதும் இந்த விடயத்தில் இதுதான் தொடக்கம்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தீர்மானம் நவம்பர் 9ஆம் திகதி பல்கலைக்கழகப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் எவ்விதமான நியாயப்பாடுகளையும் ஆராயாமல் - கலாநிதி குருபரனின் பக்க நியாயங்களைக் கேட்காமல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியது.

பேரவையின் முடிவை எதிர்பார்க்காத குருபரன் மானியங்கள் ஆணைக்குழுவினதும் பேரவையினதும் முடிவுகளை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்தார்.

சட்டத்துறையில் போதனைசார் அலுவலகராகப் பணியாற்றுவர்கள் நீதிமன்றங்களில் முன்னிலையாகி வழக்குகளை நடத்துவதற்கு தடை விதிக்கும் தத்துவம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கிடையாது என்றும் அதனை ஏற்றுக் கொண்டதன் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை தனது சுயாதீபத்தியம் இழந்துள்ளது என்றும் கலாநிதி குருபரனின் மனுவில் பேரவைக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

தன்னால் உயர் நீதிமன்றில் தொடரப்பட்டிருக்கும் வழக்கு பல்வேறு காரணங்களுக்காக விவாதத்திற்கு எடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டிருக்க தான் இவ்விடயத்தில் இனியும் காத்திருப்பதில் பிரயோசனம் இல்லை என்றும் தொடர்ந்து தனது வாழ்வில் நிச்சயத்தன்மை இல்லாதிருக்க தான் அனுமதிக்கப் போவதில்லை என்று குறிப்பிட்ட கலாநிதி. குமாரவடிவேல் குருபரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்ட முதுநிலை விரிவுரையாளர் பதவியில் இருந்து விலகுவதற்கான இராஜினாமா கடிதத்தை கடந்த 17ஆம் திகதி பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு, கலைப் பீடாதிபதி மற்றும் சட்டத்துறைத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்திருந்தார். அவரது பதவி வலகல் ஏற்றுக் கொள்ளப்படுமா இல்லையா என்பது குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் பல்கலைக்கழகம் விடுக்கவில்லை. அந்தக் கடிதம் பீடாபதியால் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு இன்னும் அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது. ஆனால் அதற்கிடையில் பல்கலைக்கழகத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தனது பதவி விலகல் கடிதத்தை குருபரன் பொது வெளியில் பகிர்ரந்திருந்தார். இதையடுத்து ஊடகங்கிளில் அவரது பதவி விலகல் ஒரு விவாதப் பொருளாகியது.

இந்த வெளி அழுத்தங்களுக்குப் பேரவையும் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களும் பணிந்து போவார்களா? அவர்கள் பணிந்து போகக்கூடியளவுக்கு வெளி அழுத்தங்கள் பெறுமதி வாய்ந்தனவா? பதில் என்னவோ தடுமாற்றம்தான்.

### கல்விசார் ஊழியர்கள் ஆதரவில்லை

கலாநிதி குருபரனின் வழக்குத் தொடர்பாகக் கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி கூட்டப்பட்ட விசேட பேரவைக் கூட்டத்தில்கூட, கலாநிதி குருபரனுக்கு ஆதராவாக - அவருக்கு இழைக்கப்பட்டது அநீதி எனக் குரல் கொடுப்பதற்கு பெரும்பாலான பேரவை உறுப்பினரும் முன் வரவில்லை. மாறாக பல்கலைக்கழகத்துக்கு எதிராக அவரால் தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கைக் கொண்டு நடத்துவதற்குத் தனியார் சட்ட உதவியைப் பெறுவது தொடர்பிலேயே அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டிருக்கிறது.

இதனால், இவ்விடயத்தில் இனியும் காத்திருப்பதில் பயன் ஏதும் இல்லை என்ற விரக்தியாலும் வழக்குத் தொடர்ந்து இழுபட்டுச் செல்வதாலும் வழக்கின் பிரதிவாதிகளில் ஒரு தரப்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் தனது தரப்பு வாதங்களை முன்வைத்தபோது, தனது மனுவின் ஊடாகக் குருபரன் நாட்டுக்கு மதிப்பிழப்பை ஏற்படுத்துகின்றார் என்றும் குருபரனின் தந்தையான பேராசிரியர் குமாரவடிவேல் தனது புதல்வனுக்குச் சார்பாக பல்கலைக்கழக நிர்வாகத்தில் முறையற்ற தாக்கத்தைச் செலுத்துகின்றார் என்றும் தமிழ் சிவில் சமூக அமையம் மற்றும் அடையாளம் கொள்கை கொள்கை ஆய்வு மையம் என்பன ஊடாக ஆட்சியாளர்களுக்கு எதிரான அறிக்கைகளைக் குருபரன் வெளியிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டதாலும் விரக்தியடைந்த குருபரன் தனது பதவி விலகல் கடிதத்தை வழங்கினார்.

ஓர் இளம் புலமையாளரான குருபரன் பல்கலைக்கழகத்தைவிட்டு வெளியேறப் போகிறார் என்று அறிவித்தபோது அவரை வெளிப்படையாக ஆதரித்து நின்று பொது வெளியில் குரல் எழுப்புவதற்கு எந்தவொரு விரிவுரையாளராலும் பேராசிரியராலும் முடியாமல் போனமை தமிழ்க் கல்விச் சமூகத்தின் சாபக்கேடு. குருபரனுக்காக இல்லை யென்றாலும் பல்கலைக்கழக ஆசிரியர்களின் புலமைத்துவ சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகவாது பல்கலைக்கழகமும் புலமையாளர்களும் போராடியிருக்கவேண்டும். அது நடக்கவில்லை.

குருபரன் தனது கடிதத்தின் ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போன்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சட்டத்தின் ஆட்சிக்குட்படாத, நல்லாட்சி தத்துவங்களைப் பின்பற்றத் தெரியாத, புலமைத்துவ சுதந்திரம் தொடர்பில் கரிசனை இல்லாத, அடிப்படை சுயமரியாதை விழுமியங்களைக்கூட மதிக்காத ஓர் இடமாகவும் தம்மை உயர்த்தும் நோக்கமன்றி வேறொன்றையும் அறியாத சுயநல நிகழ்ச்சி நிரல்களின் வலைப் பின்னல்களுக்குள் இந்த தள்ளாடுவதாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இருப்பதால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமே என்கிற அச்சம் மக்களிடம் எழுகின்றது.

'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற மகுடவாசத்தை மட்டும் தாங்கியிருப்பதால் பயனில்லை. ■

## இதற்கெல்லாமா...

ஆனால், தமக்குத் தெரிந்து கிரேஸ் மட்டுமே இவ்வாறு தண்டிக்கப்பட்டிருக்கிறார் என்கிறார்கள் சட்டத்தரணிகள்.

ஜோர்ஜ் பிளாய்ட் என்கிற கறுப்பர் சுட்டுக்கொல்லப்பட்டதால் ஏற்கனவே பெரும் எழுச்சியை, கிளர்ச்சியைச் சந்தித்த அமெரிக்காவில் மீண்டும் ஒரு கறுப்பினப் பாரபட்சம் கொந்தளிப்பை வளர்க்கின்றது.

"இனி என் மகளும் நானும் வீட்டில் சேர்ந்திருக்க இன்னும் ஒரு மாதத்திற்கு மேல் காத்திருக்க வேண்டும்" என்று கிரேஸின் தாய் சாரிஸ் கூறும்போதே அவரது கண்ணில் இருந்து கண்ணீர் தாரையாய் இறங்கி அவரது முகக் கவசத்தை நனைத்து தாடையில் வழிகின்றது.

நல்லவேளை இத்தகைய கொடுமைகளைப் பார்ப்பதற்குள் இங்கு பாடசாலைகளை மீண்டும் திறந்துவிட்டார்கள்.

## மூளைக்கு வேலை விடைகள்

01. 12
02. தாயத்தில் இருக்கும் எண்களை கூட்டுவதன் மூலம் கிடைப்பதேவிடை 9
03. கார் அசையவில்லை. ஏனெனில் சில்லு இல்லாததால்
04. 87
05. 03
06. கி.மு. காலத்தில் இது சாத்தியம்
07. 12x12 = 144 பின்னர் 1+4+4 = 9
    23x23 = 529 பின்னர் 5+2+9 = 16
    34x34 = 1156 பின்னர் 1+1+5+6 = 13
08. 9




# கல்முனையைச் சூழும் கருமேகம்

- அகில்

கிழக்கிலங்கையின் முக்கிய வர்த்தக நகரம் கல்முனை. முஸ்லிம் காங்கிரஸின் நிறுவனத் தலைவர் மறைந்த மர்ஹும் எம்.எச்.எம்.அஷ்ரபினால் கிழக்கின் "முக வெற்றிலை" என வர்ணிக்கப்பட்ட கல்னை இன்று மாநகர சபையாகத் தரமுயர்ந்திருக்கிறது. இங்கு முஸ்லிம்களும், தமிழர்களும் கூடிய தொகையினராக வாழ்வதுடன், கிறிஸ்தவ மக்களும், ஏன் சிங்களவர்களும்கூடச் சிறு தொகையினராக வாழ்ந்து வருகின்றனர்.

தமிழர்களும், முஸ்லிம்களும் புட்டும் தேங்காய்ப்பூவும் போல் வாழ்வதாக மார்தட்டிக் கொண்டாலும், பல வழிகளிலும் தமிழர்கள், தமிழ்ப் பிரதேசங்கள் கடந்த காலங்களில் அபிவிருத்தி தொடர்பு புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனவென் பதும் பட்டவர்த்தனமாகும். வரலாற்று ரீதியாகத் தமிழ், முஸ்லிம் மக்களிடையே கல்முனைப் பிரதேசத்திலிருந்து வந்த நல்லுறவு, இன சௌஜன்யம் என்பவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சில சம்பவங்கள் இன்று நடந்தேறி வருவது குறித்துக் கவனத்திற் கொள்ளப்பட்ட வேண்டியது அவசியம். அதேவேளை தமிழர்களையும், முஸ்லிம்களையும் ஒன்றுபட விடக்கூடாது என்பதில் இங்கு பௌத்த பேரினவாதமும், சுயநல, அரசியல் இலாபம் கருதும் அரசியல்வாதிகளும் முழுமூச்சாக இறங்கி நிற்கின்றார்கள்.

இன்று நீறுபூத்த நெருப்பாக இருந்து வரும் கல்முனை வடக்குத் தமிழ் உபபிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட வேண்டுமென்ற கல்முனை தமிழ் மக்களின் 30 வருட கோரிக்கைப் போராட்டம் முதன்மைப்படுத்திக் கூற வேண்டிய நிலையுள்ளது. இன்று பொதுத்தேர்தல் பிரச்சார மேடைகளில் கல்முனை வடக்குத் தமிழ் உப பிரதேச செயலக விவகாரமே வேட்பாளர்களின் முக்கிய பிரச்சார கருப்பொருளாகத் திகழ்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் மட்டுமன்றி, அகில இலங்கைத் தமிழர் மகா சபை சார்பில் திகாமடுல்ல மாவட்டத்தில் களமிறங்கியுள்ள தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முதன்மை வேட்பாளருமான விநாயக மூர்த்தி முரளீதரன் எனும் கருணா அம்மானும், என்னதான் இனவாதம் கக்கினாலும், மேற்படி உபபிரதேச செயலக தரமுயர்த்தல் விடயத்தையே முக்கிய தும்புச் சீட்டாகக் கையாண்டு வருகின்றார்.

## போராட்டம்

கடந்த வருடம் ஜூன் மாதம் 17 ஆம் திகதி குறித்த கல்முனை வடக்குத் தமிழ் உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரம் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்த வேண்டு மென்ற கோரிக்கையை முன்வைத்து பாரிய உண்ணா விரதப் போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுப் பல தினங்கள் போராட்டம் நீடித்தது.

நாடே பரபரப்பாகி, திரும்பிப் பார்க்க வைத்த இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கல்முனை சுபத்திராராம விகாரை விகாராதிபதி ரண் முத்துகல சங்கரத்ன தேரர், தலைமையில் கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ க.கு.சச்சிதானந்த சிவகுருக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான எஸ். ராஜன், அ.விஜயரத்தினம், அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத்தலைவரும், தொழிலதிபருமான கே.லிங்கேஸ்வரன் ஆகியோர் ஆரம்பித்ததுடன், சில தினங்களில் அத்துரலிய ரத்ன தேரரும் கலந்து கொண்டார். பெருமளவான தமிழ் மக்களும் இணைந்து கொண்டனர்.

வெற்றிகரமாகவும், உணர்வுபூர்வமாகவும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்ற அதே வேளை, இனத்துவ ரீதியிலும், நிலத் தொடர்பற்ற ரீதியிலும் உருவாக்கப்பட எத்தனிக்கும் பிரதேச செயலகத்தை தடைசெய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டு கல்முனை சமாதான சதுக்கத்தில் கல்முனை மாநகரம் வாழ் முஸ்லிம்களால் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

ஏட்டிக்குப் போட்டியான இந்த நிலை கல்முனையில் அப்போது பெரும் கொந்தளிப்பையும், கொதிப்பையும் ஏற்படுத்தியது.

பொதுபலசேனவின் கலகொட அத்தே ஞானசார தேரரின் வருகை, வாக்குறுதியை அடுத்துப் பரபரப்பான பல நாட்கள் கடந்த பின்னர் தமிழ் மக்களின் உண்ணா விரதப் போராட்டம் முடிவுக்கும் கொண்டுவரப்பட்டது.

எனினும் இன்று வரை கல்முனை தமிழ் மக்களின் உப பிரதேச செயலகத்தர முயர்த்தல் கோரிக்கை நிறைவேற்றப்படாது நீறு பூத்த நெருப்பாக இருந்து வருகின்றது.

## அபாயச்சங்கு

இந்த நிலையில் கடந்த வாரம் பொதுபல சேனா பௌத்த அமைப்பின் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தமிழ் ஊடகமொன்றுக்கு நேர்காணல் ஒன்றை வழங்கி இந்த விடயம் குறித்துத் தெரிவித்துள்ளார். தேர்தல் முடிந்தவுடன் கல்முனைக்கே எனது முதல் படையெடுப்பே எனத் தெரிவித்துள்ள அவர், கல்முனை வடக்குத் தமிழர் பிரதேச செயலகத்தை உருவாக்கத் தமிழர்களுக்கு நான் கை கொடுப்பேன் எனவும் சூளுரைத்துள்ளார். மீண்டும் கல்முனை மண் ரணகளமாகி கருமேகம் சூழும் நிலை ஏற்படுமோ என்ற அச்சத்தை எதிர் கொள்ள வேண்டிய நிலை இன்ற ஏற்பட்டுள்ளது.

## வரலாறு

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் பிற இனத்தவரால் ஆக்கிரமிக்கப்படுவதையும், அரச அதிபர் பிரிவுகளால் (ஏ.ஜி.ஏ) தமிழர்களுக்கு எதுவித நன்மையோ, அபிவிருத்தியோ ஏற்படாததையும் பல வருட அனுபவத்தால் உணர்ந்து, அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களை உள்ளடக்கி தனியே உதவி அரச அதிபர் பிரிவுகளைப் பிரிக்க வேண்டிய நிலை அன்று ஏற்பட்டது.

இதனடிப்படையில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ரங்கநாயகி பத்மநாதனுடன் இணைந்து கல்முனை தமிழ் பிரிவு மற்றும் நாவிதன்வெளி உதவி அரச அதிபர் பிரிவுகளைப் பெறுவதற்காகப் பெரு முயற்சி எடுத்தது. 1986ஆம் ஆண்டிலிருந்து 1989ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாகப் பல நடவடிக்கைகள் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டன. இதன் பயனாகப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இக்கோரிக்கை நியாயமானது என உணர்ந்து 12.09.1989 இல் கட்டளைச் சட்டம் மூலம் இன்று கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகம் என அழைக்கப்படும் உதவி அரச அதிபர் பிரிவையும், நாவிதன்வெளி பிரிவையும் ஏற்படுத்தியது. இவ்வாறு உருவாக்கப்பட்ட கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகம் இன்று வரை முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்படாது புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. ஆனாலும் 28.07.1993 இல் அமைச்சரவை கல்முனை வடக்கு உபபிரதேச செயலகம் உட்பட 28 உப அலுவலகங்களைத் தரமுயர்த்த அனுமதி அளித்திருந்தது. இந்த 28 உப அலுவலகங்களில் கல்முனை உப அலுவலகம் மட்டும் தரமுயர்த்தப்படவில்லை.

முஸ்லிம் தரப்பினர் குறிப்பாகப் பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகளின் அழுத்தமும், முட்டுக்கட்டைகளுமே இத்தரமுயர்த்தல் விவகாரம் இன்றுவரை நீடிக்கக் காரணமென கல்முனை தமிழர் தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர். எல்லை தொடர்பான அச்ச நிலைமையே முஸ்லிம்கள் தரப்பின் முட்டுக்கட்டைகளுக்குக் கரணமெனக் கூறப்படுகின்றது.

கல்முனை தரவைப் பிள்ளையார் கோயில் முன் வீதியிலிருந்து பெரிய நீலாவணை வரையுமுள்ள தமிழர் வாழும் பிரதேசங்களை உள்ளடக்கி எல்லை வகுக்கப்படுமென அவர்கள் நம்புகின்றனர்.

இதனால் தமது நகர வர்த்தக மையங்கள், பொதுச் சந்தைகள், காணிகள் போன்ற வளங்களெல்லாம் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டு விடும் என்பதுதான் முஸ்லிம்களின் அச்ச நிலைக்குக்காரணமெனக் கூறப்படுகின்றது.

எது எப்படியோ கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தாது கடந்த முப்பது வருட காலமாகக் கல்முனைத் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது.

இந்த அநீதி குறித்துப் பேச்சு மூலம் சுமுகத் தீர்வுகாணுமாறு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரசையும் வலியுறுத்தி வந்தனர். இந்த முக்கிய விடயத்தில் இருசாராரும் காட்டிய அசமந்தப் போக்கு நிலமையை வேறு திசைக்கு மாற்றியுள்ளது. காவி உடைக் கூட்டம் அதனைக் கையிலெடுத்துள்ளது. இதன் பயன் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தப் போகிறதோ? என்ற அச்சமும் மேலோங்கி நிற்கின்றது.

உழுத்துப்போன தமிழ் அரசியல்வாதிகள்கூட இது விடயத்தில் மூக்கை நுழைத்துவருகின்றனர். கல்முனையைக் கருமேகம் சூழ்ந்துவிடுமோ என அஞ்சவேண்டியுள்ளது. இன்னும் தாமதியாது தமிழ், முஸ்லிம் மக்களின் சுமுக விட்டுக்கொடுப்புகளுடன் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமா?

# கார்ட்டூன்






சுள்ளிராஜா ஒருநாள் வீட்டுக்கு வெளியே வீதியில் இரண்டு வயதுக் குழந்தைக்கு முன்னாள் இருந்து அது பேசுவதையெல்லாம் தனது அலைபேசியில் ஒலிப் பதிவு செய்துகொண்டிருந்தார். இதைப் பார்த்த அவரது நண்பன் அவர் அருகில் சென்று "என்ன செய்கிறாய்" என்று கேட்டார். உடனே வாயில் விரலை வைத்து நண்பனைச் சத்தம் செய்யாதே என்று எச்சரித்தார் சுள்ளி. ஆனால், நண்பரைக் கண்டதும் அந்தக் குழந்தை பயத்தில் வீட்டினுள்ளே ஓடிவிட்டது. தனது முயற்சி இடையில் முறிந்துபோனமை குறித்து சலித்துக்கொண்டே எழுந்த சுள்ளிராஜா நண்பனைப் பார்த்துச் சொன்னார், "அந்தக் குழந்தை என்ன சொல்கிறாள் என்று ஒண்டுமே புரியுதில்லை. அதுதான் ரெக்கோர்ட் பண்ணி வைச்சால், அவள் வளர்ந்த பிறகு அவளுக்கு அதப் போட்டுக்காட்டி நீ என்ன சொன்னனீ எண்டு பிறகு விளக்கம் கே க்கலாம் எல்லே!!" நண்பன் தலை சுற்றி விழாக் குறையாக அங்கிருந்து அகன்றார்.

சுள்ளிராஜாவுக்கு அதிசயத்திலும் அதிசயமாக ஒரு நாள் கடவுளைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. அளப்பரிய மகிழ்ச்சி அடைந்த அவர், கடவுளிடம் கேட்டார்,

"கடவுளே! பூமியில் உயிரினங்கள் தோன்றி மில்லியன் வருடங்கள் ஆகிவிட்டன என்கிறார்களே அப்படி மில்லியன் வருடங்கள் என்றால் எவ்வளவு காலம்?"

"என்னைப் பொறுத்தவரையில் அது ஒரு நிமிடம்" என்றார் கடவுள். உடனேயே அடுத்த கேள்வியைத் தூக்கிப் போட்டார் சுள்ளிராஜா, "ட்ரில்லியன் ரூபாய் என்பது எவ்வளவு கடவுளே?" என்றார். கடவுள் என்ன பதில் சொல்வார் என்பதும் அதற்கடுத்து தான் என்ன கேட்பார் என்பதையும் ஏற்கனவே தீர்மானித்துக் கொண்ட சுள்ளிராஜா தன் புத்திசாலித்தனத்தை எண்ணித் தன்னைத் தானே பாராட்டியும்கொண்டார்.



அவர் எதிர்பார்த்ததைப் போலவே கடவுளும் "அது எனக்கு ஒரு ரூபாய்க்குச் சமம் " என்று பதிலளித்தார். உடனே சுள்ளி, "கடவுளே எனக்கு ஒரு ரூபாய் கொடுப்பீர்களா?" என்றார் பணிவுடன். கடவுள் என்ன சும்மா ஆளா! "இதோ ஒரு நிமிடம் மகனே!" என்றார். ஒரு ட்ரில்லியன் பணத்துக்காகத் தன்னை ஒரு மில்லியன் வருடம் காக்க வைக்கும் கடவுளைத் திட்டிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டார் சுள்ளி.

## செம்மண் வாரமலருக்கு...

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

அஞ்சல் /தபால்
செம்மண் வாரமலர்
551A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்
shemman.redsoil@gmail.com
தொடர்புக்கு: 021 492 7781

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.




இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781